
ஜூன் 10-16 , 2007 June 10-16 , 2007 பக்கங்கள் - 28 20.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்

## ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்டிருக்கும் சவால்!



## கொழும்பு இனி தமிழர்களுக்கு பாதுகாப்பான தளமல்ல!

# பேச்சுக்கான வாய்ப்பு அருகிப் போகிறது! மோதல்கள், தாக்குதல்கள் தீவிரமாகின்றன

# பேச்சுக்கான வாய்ப்பு அருகிப்போகிறது மோதல்கள், தாக்குதல்கள் தீவிரமாகின்றன

## நிலைமை மேலும் மோசமடைவதை சர்வதேசம் தடுத்து நிறுத்துமா?

யாழவன்



வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் இரு பெரும் சமூகங்களுக்கிடையில் கைச்சாத்தாகி நீண்டகாலம் நடைமுறையில் உள்ளதும் நாட்டில் குறிப்பிட்ட காலத்துக்கு அமைதி நிலையைத் தோற்றுவிக்க உதவியதுமான யுத்தநிறுத்த உடன்பாடு முறிந்துபோகாமல் இன்னமும் நடைமுறையில் இருப்பதாக அரசுத் தரப்பும் விடுதலைப் புலிகளும் பகிரங்கமாக அறிவித்துக் கொண்டிருக்கும் நிலையில் -

வடக்கு - கிழக்கில் மோதல்கள், தாக்குதல்கள் தீவிரமாகிக்கொண்டு போகின்றன.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கைச்சாத்தான யுத்த நிறுத்த ஒப்பந்தம் மூலம் நாட்டில் உருவான அமைதியான சூழல் மெல்லமெல்ல அமைதியற்ற சூழலுக்குள் நகர்ந்துகொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை சந்திரிகா தலைமையிலான அரசு கைப்பற்றியதுடன் ஆரம்பமான மோதல்கள் உச்சக் கட்டத்தை அடைந்தன. வன்னியில் படையினர் மீட்ட பிரதேசங்களில் இருந்து படையினர் கலைக்கப்பட்டதன் பின்னர் ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சிப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் விரட்டியடிக்கப்பட்டு, விடுதலைப்புலிகள் பெரும் நிலப்பரப்பைத் தங்கள் வசம் கொண்டு வந்தனர்.

ஆனையிறவு, வன்னி வீழ்ச்சியின் எதிரொலியாக நோர்வேயின் அனுசரணையுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது. அந்த ஒப்பந்தம் மூலம் ஓரளவு அமைதி நிலை கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக நிலவியது.

அந்த அமைதி நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அளவுக்கு மோதல்கள் தற்சமயம் தீவிரமாகியுள்ளன.

கிழக்கில் மாவிலாறு அணைக்கட்டை மீட்பதற்கான இராணுவநடவடிக்கை ஒன்றைப் படைத்தரப்பு ஆரம்பித்ததுடன் மோதல்கள் தீவிரமாகின.

இந்த மோதல்கள் வாகரை, மட்டக்களப்பு, அம்பாறை என வியாபித்து, விடுதலைப் புலிகள் அப்பிரதேசங்களில் இருந்து விரட்டப்பட்டு, தொப்பிகலக் காட்டுக்குள் அவர்கள் தஞ்சம் அடையும் நிலையை உருவாக்கியது என அரசுத் தரப்புக் கூறுகின்றது.

அந்தப் பிரதேசங்களில் இருந்து தமது படையணிகள் பின்வாங்கியமை, தந்திரோபாய நடவடிக்கை என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

மீண்டும் கிழக்கை மீட்போம் என்றும் விடுதலைப் புலிகள் சூளுரைத்துள்ளனர்.

கிழக்கைக் கைப்பற்றியதன் பின் வடக்கு நோக்கிய மீட்புப் போர் இடம்பெறும் என அரசுத் தரப்புகளில் இருந்து செய்திகள் வரத் தொடங்கின.

அதற்கான பாதையைத் திறக்கும் நோக்கில் வன்னியில் விடுதலைப் புலிகள் பகுதிக்குள் ஊடுருவி வன்னி நோக்கிய போர்முனை ஒன்றை அரசுப் படைகள் திறந்துள்ளன.

முள்ளிக்குளம், விளாத்திக்குளம், பரிசங்குளம் போன்ற பகுதிகளை மீட்டு, அங்கு படையினர் நிலைகொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

விடுதலைப் புலிகள் முன்னரங்க நிலைகளில் அமைத்துள்ள பீரங்கி நிலைகளைப் பின் தள்ளுவதற்கான நடவடிக்கை இது எனப் படைத் தரப்பு அறிவித்திருந்தது.

புதிதாகக் கைப்பற்றிய பகுதிகளுக்கு பாதுகாப்பு வழங்க தமது முன்னரங்கில் ஆட்லறி தளங்களையும் படையினர் புதிதாக நிறுவியிருந்தனர்.

படையினரின் முன்னேற்ற முயற்சிகளை முறியடிக்கவும் தமது முன்னரங்க நிலைகளைப் பாதுகாக்கவும் கடந்த 3ஆம் திகதி அந்தப் பிரதேசம் மீது பெரும் தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர்.

படையினர் கைப்பற்றிய பிரதேசங்களை ஊடறுத்து நடத்திய இத்தாக்குதலில் படையினர் கைப்பற்றிய பிரதேசங்களை மீட்டு விட்டதாகவும் படையினரை அவர்களது பழைய நிலைகளுக்கு திருப்பி அனுப்பிவிட்டதாகவும் விடுதலைப் புலிகள் அறிவிக்கின்றனர்.

புலிகள் தாக்குதல் நடத்திய பகுதியைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளனர் என படைத்தரப்பு கூறுகின்றது.

எதுவாக இருந்தாலும் யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின் விடுதலைப் புலிகள் நடத்தியுள்ள இரண்டாவது பெருந்தாக்குதல் இதுவாகும்.

கடந்த மாதம் 24ஆம் திகதி நெடுந்தீவு கடற்படை முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின் பெருந்தாக்குதலாக பம்பைமடு மீதான தாக்குதல் அமைந்துள்ளது என தெற்கு அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

வடக்கு நோக்கிய படையினரின் நடவடிக்கையை முறியடிக்க விடுதலைப் புலிகள் புதியபுதிய போர் முனைகளைத் திறக்கப் போகிறார்கள் என தெற்கு ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றார்கள்.

நான்காம் கட்ட ஈழப்போருக்கான பாதை எந்த நேரத்திலும் திறக்கப்படலாம் என அவர்கள் ஆருடம் கூறுகிறார்கள்.

படையினர் வகுக்கும் வியூகங்களும் விடுதலைப் புலிகள் வகுக்கும் வியூகங்களும் பெரும் யுத்தத்துக்கான பாதையைத் திறக்கப்போகின்றன என்று அவர்கள் மேலும் கூறுகின்றனர்.

மோதல்களும், தாக்குதல்களும் தீவிரமாகிக் கொண்டு போகின்றன. ஆனாலும், யுத்தநிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிக்கின்றோம் என இரு தரப்புகளிலும் இருந்தும் செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கின்றோம். நேரடிப் பேச்சுக்கும் தயாராக இருக்கின்றோம். யுத்த நிறுத்தத்தைச் சீராக - செம்மையாக - நடைமுறைப்படுத்த சர்வதேசம் தனது பங்களிப்பை வழங்கவேண்டும் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இரு தரப்புகளும் நேரடிப் பேச்சில் ஈடுபட வேண்டும். சமாதான பேச்சுக்களை மீள ஆரம்பிக்கவேண்டும் என சர்வதேசம் அறிக்கைகள் மூலம் கருத்து வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது.

ஆனால், சர்வதேச பிரதிநிதிகள் நேரில் சென்று வன்னியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து, சமாதான நகர்வுகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த கதவடைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மாதாமாதம் நோர்வே தூதர் ஹான்சன் பிரஸ்கர் கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் கருத்துக்களை அறிந்து வந்தார். அதேபோன்று கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ஜொஹான் சோல்பேர்க் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தி வந்தார்.

திட்டமிட்டபடி நோர்வே தூதரின் விஜயத்துக்கு இரு தடவைகளும் கண்காணிப்புக் குழுவின் தலைவரின் விஜயத்துக்கு ஒரு தடவையும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி யுத்தநிறுத்த உடன்பாடு ஐந்தாம் ஆண்டைப் பூர்த்தி செய்த வேளை நோர்வேத் தூதர் வன்னி சென்றார். கடந்த 4 மாதங்களாக அவரின் விஜயம் தடைப்பட்டுக் கொண்டே போகின்றது.

தினமும் வன்னி மீதான வான் தாக்குதல்கள் ஏதோ ஓர் இடத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் அவரது வன்னிப் பயணம் பாதுகாப்பற்றது என்பது உண்மைதான்.

உண்மையில் சமாதான முயற்சிகளில் தெற்குத் தலைமைகளுக்கு அக்கறை இருக்குமானால், தாக்குதல்களை நிறுத்தி, நோர்வேத் தூதரின் விஜயத்துக்கு உதவ முடியாதா என்று மக்கள் கேட்கிறார்கள். நோர்வேத் தூதர், கண்காணிப்புக்குழுத் தலைவர்கள் ஆகியோரின் விஜயங்கள் ஒத்திவைக்கப்பட்டபோதும், போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து நடைமுறையில் இருக்கின்றது.

"இன்றைய கள நிலையில் போர் நிறுத்த ஒப்பந்தம் அர்த்தமற்றதாகிவிட்டது. இந்த ஒப்பந்தம் குறித்து முடிவுசெய்ய வேண்டிய காலம் அரசுக்கு வந்துவிட்டது. அடுத்துவரும் வாரங்களில், இந்த உடன்படிக்கையை தொடர வேண்டுமா என்பது குறித்து ஆராயவுள்ளோம்" என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் கடந்த

(7ஆம் பக்கம் பார்க்க)

**1983** ஆம் ஆண்டு ஜூலையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஒரு கண்ணிவெடித் தாக்குதலை அடுத்து கொழும்பில் ஏற்பட்ட கலவரம் இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான சம்பவங்களில் ஒன்று.

13இராணுவத்தினர் உயிரிழந்த சம்பவத்தை ஒரு காரணமாக வைத்து தமிழர்கள் மீது பெரும் இனப்படுகொலை கட்டவிழ்த்து விடப்பட்டது. கொழும்பைத் தளமாகக் கொண்டு வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் இருப்பை இழந்து தமது தாயகப் பகுதிகளான வடக்கு-கிழக்குக்கு ஏதிலிகளாக ஓடநேர்ந்தது. அவர்களில் பலர் பின்னர் வடக்கு - கிழக்கையே தங்கள் வாழ்விடமாக மாற்றநேர்ந்தது.

1983 ஜூலை 22, 23 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்ற சம்பவங்களை வசிப்பிடங்களை கொழும்புக்கு நகர்த்திக்கொண்டனர்.

கொழும்பில் தங்கள் இருப்பை நிலைநிறுத்திக்கொண்ட தமிழர்களை மூன்று பிரிவுகளில் வகுக்கலாம்.

1. தொன்றுதொட்டு கொழும்பில் வசித்துவரும் தமிழர்கள்.

2. வியாபார, வர்த்தக நடவடிக்கைகளுக்காக கொழும்பில் ஒரு தளத்தை உருவாக்கிக் கொண்ட தமிழர்கள். இவர்களில் வடபகுதி தமிழர்களும் மலையகம் மற்றும் இந்தியத் தமிழர்களும் அடக்கம்.

3. வடக்கு-கிழக்கு யுத்தம் காரணமாக தொழில்தேடியும், பாதுகாப்பு மற்றும் கல்வி வசதி கருதியும் கொழும்பில் குடியேறிய வடக்கு-கிழக்கு தமிழர்கள்.

இந்த மூன்று வகையறாவையும் சேர்ந்த தமிழர்களின் இருப்பு இன்று கணையே இது என்று கொழும்பில் வசிக்கும் ஏனைய வகையறாவைச் சேர்ந்த தமிழர்கள் எவராவது இதனைக் கருதுவார்களாயின் அவர்களும் மடையர்களாகவே இருப்பார்கள்.

சிங்கள தேசத்தின் தலைநகரான கொழும்பில் பலமான வர்த்தக கட்டமைப்பை ஏற்படுத்தியிருப்பவர்களில் முக்கியமானவர்கள் தமிழர்களே. கொச்சிக்கடையிலும் புறக்கோட்டையிலும் இன்னும் பல பகுதிகளிலும் தமிழர்கள் நீண்ட நெடுங்காலமாக வர்த்தகத்துடன் கூடிய வாழ்க்கைத் தளத்தை பலமாகவே நிறுவிவந்திருக்கிறார்கள்.

இந்தத் தளம்தான் கொழும்புத் தமிழர்களின் இருப்பின் அடித்தளமாகவும் விளங்குகிறது. நாட்டில் உள்ள பிரதேச செயலகங்களில் கொழும்புப் பிரதேச செயலகத்தில் தமிழர்களே பெரும்பான்மையினராக

கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து கடத்தப்பட்ட இரண்டு தமிழர்களும் மனிதாபிமானப் பணியாளர்கள் என்பதற்காகக் கொல்லப்படவில்லை. தமிழர்கள் என்பதற்காகவே கொல்லப்பட்டிருக்கின்றனர். ஏனெனில், அவர்கள் கிழக்கில் இருந்து கொழும்புக்கு வந்தவர்கள். அவர்களுக்கு கொழும்பில் பாதுகாப்பு இல்லை என்பதை இந்தப் படுகொலைகள் உணர்த்திவிட்டன.

தலைநகர் கொழும்பு இனிமேல் தமிழர்களுக்கு பாதுகாப்பான தளமாக இருக்கப்போவதில்லை என்பதே உண்மை.

இப்பத்தியின் ஆரம்பத்தில் கூறியதுபோல 1983 ஆம் ஆண்டு கொழும்பில் தமிழ்மக்கள் எதிர்கொண்ட அவலங்களைவிட இப்போதைய நிலைமை மிக மோசமானது. 1983இற்குப் பின்னர் மீண்டும் ஓர் இனக்கலவரம் ஏற்படாதபோதும் கொழும்பில் தமிழர்களின் அடிவேரை அழிப்பதற்காக தற்போது மூட்டப்பட்டிருக்கும் 'நெருப்பு' இன அழிப்பின் - இனச்சுத்திகரிப்பின் -இன்னொரு பயங்கர வடிவமே. இதனை

# தமிழர்களின் இருப்புக்கு கொழும்பு இனி பாதுகாப்பான தளம் அல்ல!



ஒத்த மற்றோர் இனக்கலவரம் அதன் பிறகு ஏற்படவில்லை. கால்நூற்றாண்டு கழிந்துவிட்ட நிலையிலும் சிங்கள ஆட்சியாளர்களால் தூண்டப்பட்ட கலவரங்கள் எதனையும் கொழும்புத் தமிழர்கள் அதன்பிறகு சந்திக்கவில்லை. 1983 இல் இருந்ததைவிட தமிழ்த் தேசியம் வீறுகொண்டு வளர்ந்து சிங்களப் படைகளுடன் பெரும் யுத்தங்கள் மூண்ட காலகட்டங்களிலும் கூட கொழும்புநகரில் தமிழர்கள் மீது பாதுகாப்புக் கெடுபிடிகள் திணிக்கப்பட்டனவே தவிர அவர்களது இருப்புக்கு வேட்டுவைக்கும் கலவரங்கள் தவிர்க்கப்பட்டே - தடுக்கப்பட்டே - வந்தன.

கொழும்புத்தமிழர்களைப் பாதுகாப்பதுதான் தமது கோட்பாட்டுக்கு உகந்தது என்ற முடிவுக்கு சிங்கள ஆட்சியாளர்கள் வந்திருந்தனர்.

அண்டை நாடான இந்தியாவின் தலையீடு, அதன் கண்காணிப்பு என்பன கொழும்புத் தமிழர்கள் பாதுகாக்கப்படவேண்டியவர்கள் என்பதை சிங்கள அரசுத் தலைமைகளுக்கு எப்போதும் உணர்த்திக்கொண்டிருந்தமை அதற்கு ஒரு காரணம். அடுத்தது தமிழர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை ஒப்புக்கேனும் சொல்லிக்கொள்வதற்கும் வடக்கு-கிழக்கு அவர்களது பூர்வீக தாயகம் அல்ல என்ற தனது வாதத்தைப் பாதுகாப்பதற்காகவும் கொழும்பில் தமிழர்கள் வசிக்கக்கூடிய ஒரு தளப்பகுதியை குழப்பாமல் பாதுகாத்துப் பேணவேண்டிய - பேணிக்காட்டவேண்டிய - தேவை சிங்கள அதிகாரவர்க்கங்களுக்கு ஏற்பட்டது.

இந்தப் பின்னணியிலேயே வடக்கு - கிழக்கில் இருந்து தமிழர்கள் ஓரளவுக்கேனும் பாதுகாப்புத்தேடிவரக்கூடிய ஒரு பிரதேசமாக தலைநகர் விளங்கிவந்தது.

போர்த்தீவிரம் காரணமாக பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்த அதேகாலப்பகுதியில் (கடந்த 25 வருடங்கள்) மேலும் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் தங்கள் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் இருந்து காரணமின்றி எவரும் கொழும்புக்கு வரக்கூடாது. அப்படி வந்தவர்கள் உடனடியாகத் திரும்பிவிடவேண்டும். அவர்களைத் திருப்பி அனுப்பிவிட ஏற்பாடு செய்வோம் என்று நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் சகல பிரஜைகளுக்கும் சமனாக மதித்துப் பேணுகின்ற பேணவேண்டிய - பொலிஸ் தலைமை அறிவித்திருக்கின்றது. இந்த அறிவிப்பு கொழும்பில் குறைந்த கட்டணங்களை அறவிடும் லொட்ஜ்களில் தங்கிவாழும் பல நூற்றுக்கணக்கான தமிழர்களை உடனடியாகப் பாதித்திருக்கிறது. நாட்டின் நிர்வாக அலகுகளின் தலைமைப் பணிமனைகள் இயங்கும் கொழும்பு நகரில் வந்து தமது அலுவல்களை நிறைவேற்றுவதற்காக தங்கியிருப்போர் உடனடியாகவே வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அவர்களைக் 'கட்டாக்காலி நாய்கள்' போன்று தேடிப்பிடித்து வாகனங்களில் ஏற்றி அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

கடைசியாக கொழும்பில் நடத்தப்பட்ட இரண்டு கிளைமோர்த் தாக்குதல்கள் உட்பட அழிவுச் செயல்களைத் தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஒன்று தான் இது என்று அரசுத் தரப்பில் காரணம் கூறப்படுகிறது. ஆனால், இது வெறும் பாதுகாப்பு ஏற்பாடு மட்டும்தான் என்று எவராவது நம்புவார்களேயானால் அவர்கள் மடையர்களாகவே இருக்கவேண்டும்.

'நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு, (தமிழர்கள்) குந்தகமானவர்கள்' என்று சிங்கள ஆட்சியாளர்கள் வெளிப்படையாக தமிழர்களுக்கு எதிராகச் செய்த பிரகடனமே இது என்பது முக்கியமானது.

'பாஸ்போட்' எடுப்பதற்காகவும் பாதுகாப்புக்காகவும் மருத்துவ தேவைகளுக்காகவும் வெளிநாடு செல்வதற்காகவும் கொழும்புக்கு வந்த தமிழர்கள் மீது மட்டும் தொடுக்கப்பட்ட வசிக்கின்றனர் என்று கடும்போக்கு சிங்கள இனவாதக் கட்சிகள் சீற்றமடைகின்றமைக்கும் இந்தப் பலமான தமிழர் தளம் தான் காரணமாக உள்ளது.

வடக்கு-கிழக்குக்கு வெளியில் சிங்களவர்களின் தேசத்திலும் தமிழர்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய ஒருதளம் உள்ளது என்பதை நிறுவுவதற்கும் இதுவே துணைபோகிறது.

நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட அண்மையில் தமிழர்களுக்கு புகலிடமாகும் கொழும்பு நகரம் பற்றி பிரஸ்தாபித்திருந்தமை நினைவிருக்கலாம்.

கொழும்பில் தமிழர்கள் நிறுவிய இந்தப் பலமான வர்த்தகத் தளத்தையும் ஆட்டங்காணச் செய்யும் திட்டங்கள் ஏற்கனவே அரங்கேறத் தொடங்கிவிட்டன. தமிழ்வர்த்தகர்கள் கடத்தப்படுதல், பெருந்தொகை கப்பம் அறவிடப்படுதல் போன்ற சம்பவங்களின் உண்மையான பின்னணி இதுதான் என்று உறுதியாக நம்பப்படுகிறது. கடத்தப்படுவோம் என்ற அச்சத்தால் புறக்கோட்டை தமிழ்வர்த்தகர்கள் பலர் நாட்டுக்கு வெளியே தங்கியிருக்கிறார்கள். தங்கள் வியாபாரத் தளத்தையும் இடம்மாற்றத் தொடங்கிவிட்டார்கள். சிலர் வர்த்தகத்தைக் கைவிட்டு புலம்பெயரத் தொடங்கியிருக்கிறார்கள்.

தனிப்பட்ட அலுவல்களுக்காக வரும் தமிழர்களை வெளியேற்றும் பணி தொடங்கிவிட்ட அதேநேரம், தமிழர்களின் வர்த்தகத் தளத்தை சிதைக்கும் காரியங்களும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன. வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு அடுத்தபடியாக தொழில்நிமித்தம் கொழும்பில் தங்கிவாழ்பவர்களில் அடுத்த வகையினர் மலையகத் தமிழர்கள். அவர்களும் விரைவில் பாதுகாப்பைக் காரணம் காட்டி சொந்த இடங்களுக்கு துரத்தப்படவே போகிறார்கள்.

தமிழர்கள் உணர்ந்துகொள்வது நல்லது.

இதற்கு முன்னர் இருந்த ஆட்சித் தலைமைகளை விட தற்போதைய அதிகாரத்தலைமை 'தமிழ்மக்களிடமிருந்து சிங்களதேசத்தைப் பாதுகாப்பது' என்ற கோஷத்துடனேயே தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்திவருகிறது.

எனவே, தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கின்ற தாயகப் பகுதியைவிட நாட்டில் வேறு எங்கும் தமிழர்கள் இனிப் புகலிடம் தேடமுடியாது. தென்னிலங்கையில் அவர்கள் எங்கு வசித்தாலும் சிங்கள ஆட்சியின் அரூபகரங்கள் அவர்களை நசுக்கவே முற்படும்.

கொழும்புவாழ் தமிழர்கள் இப்போது வேதனையோடு உணர்கின்ற - உணரவேண்டிய -விடயம் இது.

வேதனையான இந்தச் சம்பவங்கள் இன்னொரு பக்கத்தில் தமிழினத்துக்கு சிங்களவர்கள் புரியும் பெருநன்மையாகவும் கொள்ளப்படலாம். அதாவது 'நீங்கள் உங்கள் பகுதிக்கு போய்விடுங்கள். உங்கள் தாயகத்தை விடவும் வேறு பாதுகாப்பான தளங்கள் இலங்கையில் உங்களுக்கு கிடையாது' என்று கூறுவதன் மூலம் தமிழ்மக்களின் பிரிந்துசெல்லும் சுயநிர்ணய உரிமைக்கு சிங்களதேசம் வலுச்சேர்த்துவிடுகிறது.

வடக்கு - கிழக்கை விட்டு தமிழர்கள் பாதுகாப்புத்தேடி எங்கும் செல்லமுடியாது என்ற நிலை ஏற்படுவது அங்கு தங்களது இருப்பைப் பலப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு அவர்களைத் தள்ளிவிடும். இது தமிழ்மக்களின் போராட்டத்தை இன்னும் வீச்சாக்கும். இதுவே மஹிந்த ராஜபக்ஷவின் அரசும் அவரது பாதுகாப்பு ஆலோசகர்களும் தமிழர்களுக்குப் புரிகின்ற நன்மையாகிவிடலாம்.

'எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது. எது நடக்கப்போகின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்' என்ற பகவத்கீதையின் வரிகளே இப்போதைக்கு தமிழர்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய ஒரே ஆறுதல்.

—தாஸ்—



# கையடக்கத் தொலைபேசியா? தொல்லைபேசியா?



இன்று நாட்டில் கையடக்கத் தொலைபேசிகளின் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதற்கு வரையறையே இல்லை. நாட்டின்



வழமை நிலை மாறிக்கொண்டே சென்றாலும், ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட 'சிம்' இலக்கங்களை வைத்திருக்கும் அளவிற்கு எமது நாடு வளம்மிக்கதாகவே உள்ளது. நாடெங்கும் பாதுகாப்பு என்ற போர்வையில் படையினரும் பொலிஸாரும் உசார் அடைந்துள்ள நிலையிலும் இந்த கைத்தொலை பேசிப் பாவனை ஒரு நோய்போலவே பரவியுள்ளது. சிலர் கைத்தொலைபேசியில் கதைத்தவாறே வீதியில் செல்வர், அவர்களுக்கு வீதியில் என்ன நடக்கின்றது என்று கூட தெரியாமல் இருப்பது வேதனையே.

ஒன்றுக்கு மேற்பட்ட 'சிம்' அட்டைகளை வைத்திருப்பவர்கள் அடிக்கடி அதனை மாற்றி, அடுத்தவர்களை ஏமாற்றி அற்ப மகிழ்ச்சி அடைவதுடன், தமது பணத்தையும் அழித்துவருகின்றனர். சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட 'சிம்' அட்டைகள் மட்டுமல்ல ஒன்றுக்குமேற்பட்ட காதலர்களையும் வைத்திருக் கின்றார்கள். அதற்கும் இவர்கள் இந்த 'சிம்' அட்டைகளையே மாறி மாறி பயன்படுத்திக் கொள்வார்கள். இதன் பின்விளைவுகளை அவர்கள் சற்றும் எண்ணுவதில்லை. இதனால் பாதிக்கப்படுவது யார்? ஒரு சமுதாயமே வீணாக பொழுதைக் கழிக்கின்றது. இவ்வாறானவர்கள் நாட்டைப் பற்றியோ அல்லது தமது வீட்டைப் பற்றியோ சிந்திப்பதில்லை.

சிலர் கைத் தொலைபேசிகளின் மூலம் தகாத வார்த்தைகளை செய்திப் பரிமாற்றம் செய்கின்றனர். இது அவர்களுக்கு ஒரு பொழுதுபோக்கு மட்டுமல்ல அற்ப மகிழ்ச்சியையும் கொடுக்கின்றது. இதனால் , இச்செயல் ஒரு வைரஸ் போன்றே இளம் சமுதாயத்தினரிடையே ஊடுருவி விட்டது.

> **சிலர் கைத்தொலைபேசிகளின் மூலம் தகாத வார்த்தைகளை செய்திப் பரிமாற்றம் செய்கின்றனர். இது அவர்களுக்கு ஒரு பொழுதுபோக்கு மட்டுமல்ல அற்ப மகிழ்ச்சியையும் கொடுக்கின்றது. இதனால் , இச்செயல் ஒரு வைரஸ் போன்றே இளம் சமுதாயத்தினரிடையே ஊடுருவி விட்டது.**

சிலருக்கு அறிமுகமில்லாத பெண்கள் என்றாலும் சரி, அவர்களின் கைத் தொலை பேசி இலக்கத்தை எடுத்து அவர்களுடன் குரலைமாற்றி கதைத்து ஏமாற்றுவர். சிலர் அவர்களுக்கு 'எஸ். எம். எஸ்.' மூலம் தொல்லை கொடுப்பர். இவ்வாறான செயற்பாடுகள் பலருக்கும் விசனத்தைக் கொடுத்துவருகின்றது.

சிலர் முகம்பார்க்காமலே தமது காதலை தொலைபேசியின் ஊடாகப் பரிமாறிக் கொள்கிறார்கள். காலப்போக்கில் இருவரும் முகத்தைச் சந்திக்கும்போது பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சிலர் தொலைபேசியில் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் போன்றவற்றினை விடுக்கின்றனர். அத்துடன் அனாவசியப் பேச்சுக்களும் தொலைபேசியின் வாயிலாக இடம்பெறுகின்றன. இதனால் கூட எவற்றுடனும் சம்பந்தமில்லாமல் மாட்டுப்படவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

" மாத்தளையின் பிரதான பகுதி ஒன்றில் பஸ் ஒன்று சென்று கொண்டிருக்கின்றது. அந்த பஸ்ஸின் பின்னால் மற்றொரு பஸ் செல்கின்றது. மற்றைய பஸ்ஸில் சாரதியின் அருகில் இருந்து பயணம் செய்த இளைஞர் ஒருவர் முன்னால் சென்ற பஸ்ஸின் பின்புறத்தில் எழுதப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசியின் இலக்கத்திற்கு, தனது கையடக்கத் தொலை பேசியிலிருந்து அழைப்பை ஏற்படுத்துகின்றார். " ஹலோ...! திருமணம் ஒன்றிற்கு உங்கள் பஸ் தேவை வருமா...? எவ்வளவு வாடகை கேட்கின்றீர்கள்...? சரிகாணும் போனை வை......" என அந்த உரையாடல் காரசாரமாக தொடர்ந்து முடிந்தது. ஆனால், மறு முனையின் உரையாடல் கேட்கவில்லை. திடீரென அந்த இளைஞனின் தொலை பேசி அலறுகின்றது.

" ஹலோ... யார் பேசுறது... சொறி றோங் நம்பர்" என்று திடீரென அந்த இளைஞன் தொலைபேசியைத் துண்டித்ததுடன் நில்லாமல் தொலைபேசியை நிறுத்தியே வைத்துவிட்டான்.

"அவனுடைய முகத்தில் ஏதோ ஒரு குற்ற உணர்வு வாட்டியது. எந்த ஒரு குற்றத்தையும் செய்யும்போது அவை குற்றமாக எமக்குத் தெரிவதில்லை.


'பட்டபின்னே புத்தி வரும்' என்று சொல்வார்களே அதுதான் இது. இந்தக் கைத்தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டதே எமது வேலைகளை இலகுவாக்குவதற்கும் இருந்த இடத்தில் இருந்து கொண்டே உடனடித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்குமேயாகும். ஆனால், பலரும் கைத்தொலை பேசியைத் தவறான வழிகளிலேயே பயன்படுத்துகின்றனர். இவர்கள் தாமும் அழிந்து அடுத்தவர்களையும் அழிக்கும் நிலையே இங்கு உள்ளது.

## சிந்தியுங்கள்...! செயற்படுங்கள்...!

சிலர் தமது கையில் இருக்கும் பணத்தையெல்லாம் கையடக்கத் தொலை பேசிக்கு மீள் நிரப்புவதற்கே செலவிடுகின்றனர். இவ்வாறானவர்கள் சம்பாதிக்கும் பணம் எல்லாம் அர்த்தமற்ற பேச்சுக் களினாலேயே கரைகின்றன. திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்கமுடியாது.

கையடக்கத் தொலை பேசிகளால் கையறு நிலைக்கு உள்ளாகு பவர்களே நீங்கள் உங்கள் செயலை உணர்ந்து உங்களின் மூளைகளை மீள் நிரப்பும் காலம் எப்போது? நாட்டின் தற்போதைய நிலைமைகளை உணர்ந்தாவது பொறுப்புடன் நடப்பீர்களா? கைத் தொலை பேசிப் பாவனையாளர் களே விடை உங்களின் மனங்களில்தான்.

- கந்தரதன்






# இந்தியாவின் அடுத்த ஜனாதிபதி யார்?

எதிர்வரும் இந்திய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவது யார் என்பது குறித்த சுவாரஸ்யம் தொடர்கிறது. வழமையாக இந்தக் காலப் பகுதிக்குள் பொது வேட்பாளர் அறிவிக்கப்பட்டு விஷயம் முடிவாகிவிடும். அனேகமாக போட்டியின்றி ஆளும் கட்சியின் வேட்பாளரே பொது வேட்பாளராக தெரிவாவார்.

இந்தத் தடவை ஒரு பெரிய



வித்தியாசம் என்னவெனில் ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் கிட்டத்தட்ட சரிக்குச்சமமான வெற்றி

## பக்கத்து வீடு


பெறும் வாய்ப்பு உள்ளது தான். இதனால் எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா கட்சி தனது வேட்பாளரை நிறுத்திப் பார்க்க முயல்கிறது. துணை ஜனாதிபதி பைரோன் சிங் ஷெகாவத் என்பவர் தான் பி.ஜே.பியின் வேட்பாளர்.

பி.ஜே.பி. யும் அல்லாத காங்கிரஸும் அல்லாத மூன்றாவது அணியின் ஆதரவும் தனது வேட்பாளருக்கு கிடைக்குமென பி.ஜே.பி. கருதுகிறது. ஆந்திராவில் நாயுடுவின் தெலுங்கு தேசம், உத்தரப்பிரதேசத்தில் முலாயம் சிங்கின் கட்சி, தமிழகத்தில் அ.தி.மு.க, அஸாமின் அஸாம் கணபரிஷத், ஹரியானாவில் லோக்தள் ஆகிய கட்சிகள் இந்த 3ஆவது அணியில் இருந்தாலும் வெற்றி பெறுவது பி.ஜே.பி. க்கு கடினமே. எனினும், வாக்களிப்பு ரகசியமாக நடைபெறுவதால் காங்கிரஸ் மற்றும் அதன் தோழமைக் கட்சிகளின் உறுப்பினர்களில் சிலரின் ஆதரவு கிடைக்குமென பி.ஜே.பி. நினைக்கிறது.

ஜனாதிபதி தேர்தலில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளினதும் அனைத்து மாநில சட்டப் பேரவைகளினதும் உறுப்பினர்களே வாக்களிப்பர். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வாக்குப் பெறுமதி சட்டப் பேரவை உறுப்பினரது வாக்குப் பெறுமதியை விட அதிகம். அதிலும் ஒவ்வொரு மாநில சட்டப் பேரவை உறுப்பினர்களின் வாக்குப் பெறுமதியும் வேறுபடும். உதாரணமாக பெரிய மாநிலமான உத்தரப் பிரதேச சட்ட சபை உறுப்பினரின் வாக்குப் பெறுமதி சிறிய மாநிலம் ஒன்றின் சட்டசபை உறுப்பினரது வாக்குப் பெறுமதியை வட அதிகமாகும்.

இந்த வகையில் சமீபத்தில் நடந்த சட்டசபை தேர்தலில் உத்தரப் பிரதேசத்தில் பெற்ற வெற்றி தோல்விகள் கட்சிகளின் ஜனாதிபதித் தேர்தல் வாய்ப்பை பெரிதும் பாதித்து விட்டன. அம்மாநில தேர்தலில் பெரு வெற்றி பெறுவோம் என எதிர்பார்த்த பி.ஜே.பி. யும் 3ஆவது அணியின் முலாயம் சிங்கும் மண் கவ்வியதால் காங்கிரஸ் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் வாய்ப்பு அதிகரித்துள்ளது. உத்தரப் பிரதேசத்தில் பெரு வெற்றி பெற்ற மாயாவதியின் ஆதரவும் காங்கிரஸ் கட்சிக்கு கிடைக்கலாமெனத் தெரிகிறது.

அப்துல் கலாமையே இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக்கும் வாய்ப்பு பற்றியும் ஏற்கனவே பி.ஜே.பி. சிந்தித்தது. எனினும் அதற்கு சிறுகட்சிகள் பல எதிர்ப்புத் தெரிவித்ததால் அம்முயற்சி கைவிடப் பட்டது. கலாம் பி.ஜே.பி. ஆதரவாளரும் காங்கிரஸின் எதிரியும் என்பதால் அவரை காங்கிரஸ் விரும்பவில்லை. தவிரவும் முதலாவது ஜனாதிபதி பாபு ராஜேந்திர பிரசாத்தை தவிர வேறு எந்த ஜனாதிபதியும் இரு தடவைகள் பதவி வகிக்கவில்லை. எனவே கலாமுக்கு வாய்ப்பு இல்லை என்பது நிச்சயமானது.



காங்கிரஸ் கூட்டணியைப் பொறுத்தவரை கம்யூனிஸ்ட் கட்சியும் காங்கிரஸும் தங்கள் தங்கள் உறுப்பினரே ஜனாதிபதியாக வேண்டுமென விரும்புகின்றனர். கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜியே முக்கிய போட்டியாளர்.

அவர் இல்லாவிடின் வெளியுறவு அமைச்சர், பிரணாப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் ஷிவ்ராஜ், அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே, முன்னாள் உ.பி. முதல்வர், திவாரி ஆகிய நால்வரில் ஒருவர் வேட்பாளராவார் எனத் தெரிகிறது. இவர்களில் ஷிண்டே, தலித் சாதியினர். எனவே முக்கியமான மாயாவதியின் ஆதரவு இவருக்கு கிடைக்கும். மாராஷ்டிராவின் முன்னாள் முதல்வரான இவர் சோனியாகாந்தியின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர். பிரணாப் முகர்ஜி கட்சியின் பிரதமராக வந்திருக்க வேண்டியவர். அந்தக் குறையை நிவர்த்தி செய்ய அவரை ஜனாதிபதியாக்க சோனியா முன்வந்துள்ளார். உள்துறை அமைச்சர் பட்டேலும் தீவிரமான சோனிய விசுவாசி. இவரும் மஹாராஷ்ராவை சேர்ந்தவர். இதுவரை வங்கமொழி பேசும் எவரும் இந்தியாவின் ஜனாதிபதியானதில்லை. சபாநாயகர் சட்டர்ஜி அல்லது அமைச்சர் முகர்ஜி ஜனாதிபதியானால் அந்தக் குறை நீங்கும்.

**எஸ்.சுரேந்திரஜித்**

ஷிண்டேயும் பைரோன்சிங் ஷெகாவத்தும் எதிரெதிராக களமிறங்கினால் சுவாரஸ்யமான போட்டி காத்திருக்கிறது. ஷெகாவத் சென்ற முறை தேர்தலில் ஷிண்டேயை நேரடியாக தோற்கடித்து உப ஜனாதிபதியானார். இம்முறையும் காங்கிஸார் ரகசியமாக ஷெகாவத்துக்கு வாக்களித்தால் அவர் ஷிண்டேயை தோற்கடிக்க முடியும். இதற்காக ஷெகாவத் தனது ஆர்.எஸ்.எஸ். இந்துமத பின்னணியை மறைத்து எல்லாக் கட்சியினருக்கும் உரியவர் போல் சுமுகமாக நடந்து கொள்கிறார். எனினும் இந்த முறை ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் கூட்டணிக்கு மொத்தத்தில் பாதியான 5,49,000 என்ற எண்ணிக்கையை எட்டுவது கடினம்.

எனவே காங்கிரஸார் களவாக தமக்கு வாக்களிப்பர் என்ற நம்பிக்கையில் தான் பி.ஜே.பி. களம் இறங்கி உள்ளது. மீண்டும் ஷெகாவத் - ஷிண்டே மோதல் வந்தால் ஷிண்டே பழைய தோல்விக்குப் பழிக்குப் பழி வாங்குவாரா அல்லது ஷெகாவத்தே மீண்டும் ஜெயிப்பாரா என்பது சுவாரஸ்யமான போட்டியாகும்.

இது நாள்வரை இந்திய ஜனாதிபதித் தேர்தலில் இப்படியொரு கடும் போட்டாபோட்டி ஏற்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அப்துல் கலாம் அவுட்!

---

# ஓய்வு வயது 79

பணியில் இருந்து மனிதர்கள் ஓய்வு பெறும் வயது இன்னும் 2 தலைமுறையினருக்குள்ளாக 75 ஆக உயரக்கூடும் என்று அமெரிக்கன் உயிரியல் ஆய்வுக்கழகம் தெரிவித்துள்ளது.

தீராத நோய்களுக்கான அறிவியல் கண்டு பிடிப்புக்களும் ஆரோக்கிய உணவு முறைகளும் மனிதனின் ஆயுளை நீடிக்கச் செய்கின்றன. இந்தியர்களின் சராசரி வாழ்நாள் 60 வருடங்களாக இருந்து வருகின்றது. இந்திய அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெறும் வயது 58 ஆக இருந்து வருகின்றது. இந்த நிலையில் மனிதர்களின் வாழ்நாளை மேம்படுத்தவும் நோய் தொடர்பான கண்டு பிடிப்புக்களைத் துரிதப்படுத்தவும் பல்வேறு நாடுகள் முயற்சி மேற்கொண்டுள்ளன.

### 'ஆன்டி ஏஜ்' தெரபி

உத்ராஞ்சல் மாநிலம் மிசோரி புனித லூயிஸ் வளாகத்தில் விஞ்ஞானிகளின் மாநாடு சமீபத்தில் நடைபெற்றது. மனிதர்களின் வாழ்நாளை மேம்படுத்தும் பொருட்டு இம்மாநாட்டில் விஞ்ஞானிகள் பலர் ஆய்வுக்கட்டுரை படித்தனர். ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயிரியல் துறை பேராசிரியர் சரிபாத் துல்ஜாபர்கர் இம்மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

''உலக அளவில் ஆண்களின் வாழ்நாள் வயது சராசரியாக 77வருடங்களாக இருந்து வருகிறது. பெண்களின் வாழ்நாள் 81வருடங்களாக இருக்கின்றது. உலகம் முழுக்க ஆய்வு செய்ததில் 100 வயதை எட்டியவர்களில் ஆண்கள் 45 சதவீதமும், பெண்கள் 49 சதவீதத்தையும் பெற்றுள்ளனர். மனிதர்கள் நீண்ட நாட்கள் ஆரோக்கியமாக வாழ முடியாமைக்குப் பல்வேறு போதை பழக்க வழக்கங்களுக்கு அவர்கள் ஆட்படுவது தான் காரணம்.



### மாரடைப்பு நோய்

மனிதர்களின் வாழ்நாளை மேம்படுத்தும் பொருட்டு நாங்கள் உயிரியல் சிகிச்சை முறை ஒன்றைக் கண்டு பிடித்துள்ளோம். இதற்கு 'ஆன்டி-ஏஜ் தெரபி' என்ற பெயர் சூட்டியிருக்கிறோம். இதன் மூலமாக மனிதனுக்கு ஏற்படும் 'ஹார்ட் அட்டாக் மற்றும் வலிப்பு நோய்' போன்றவற்றைக் குணப்படுத்தலாம்.

### ஜீன் மேம்பாடு சிகிச்சை

இது மட்டுமல்லாமல் புற்று நோயைக் குணப்படுத்தும் பொருட்டு 'கேன்சர் தெரபி' என்ற ஆய்வுத் திட்டத்தையும் நாங்கள் மேற் கொண்டுள்ளோம்.

மனிதர்களின் வாழ்நாளை மேம்படுத்துவதற்காக ''மரபணுவை மாற்றியமைக்கும் உயிரியல் சிகிச்சை முறையும் எங்களுடைய ஆய்வில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் மூலம் மனிதனின் நோய்களுக்கான மரபணுக்களை அப்புறப்படுத்தி விடலாம். நோய் தோன்றுவதற்கு முன்னரே அதற்குக் காரணமான அணுக்களை நீக்கி விடுவதன் மூலம் மனிதனின் இறப்பைத் தள்ளிப் போடலாம்.

### நவீன சிகிச்சை

''எங்களுடைய இந்த நவீன உயிரியல் சிகிச்சை முறைகள் யாவும் 2010ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உலகம் முழுக்க பரவலாக்கப்படும். அதன் பின்னர் 2030 ஆண்டுகளுக்குள் பல்வேறு நாடுகளுக்கும் இந்த உயிரியல் சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்பட்டுவிடும். இந்தத் திட்டங்கள் வெற்றிகரமாகச் செயற்படுத்தப் பட்டால் மனிதனுக்கு நேரும் பல்வேறு வகையான நோய்களைத் துரத்தி அடித்து விடலாம்.

''மனிதனுடைய வாழ்நாளும் வேலைத் திறனும் அதிகரிக்க ஆரம்பித்துள்ளதால் அவனுடைய ஓய்வுக் காலத்தையும் மாற்றி அமைக்க வேண்டியிருக்கிறது. அதன்படி வரும் காலங்களில் பணியில் இருந்து மனிதன் ஓய்வு பெறும் வயது 75 ஆக உயரக்கூடும். இந்த நிலை மேலும் மேம்பாடு அடைந்து 2050 ஆம் ஆண்டில் ஓய்வு பெறும் வயது 85 ஆக உயர்ந்து நிற்கவும் வாய்ப்பு உண்டு'' இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சுடர்ஒளி

ஜூன் 10 - ஜூன் 16. 2007

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0114734401—6
பாக்ஸ் : 011 4734404
E-mail: editorial@sudaroli.com

## சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் போக்கு

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் தற்பொழுது பெயரளவிலேயே உள்ளது.

2002 பெப்ரவரி 22ஆம் திகதி போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்பு எப்படியான நிலைமை இருந்ததோ அதே விதமான நிலைமையே தற்பொழுது இருந்து வருகிறது.

போர் நிறுத்த ஒப்பந்தம் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தானது, அது கிழித்தெறியப்பட வேண்டியது என்று தேர்தல் பிரசாரங்களின் போது கூறி வந்த சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் 'போர் நிறுத்த ஒப்பந்தம் பெயரளவில் தான் இருக்கிறது. அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் தொடரும்' என்று சமீப காலங்களில் கூறி வருகின்றனர்.

2002 பெப்ரவரிக்கு முன்பு இருந்ததை விட மோசமான நிலைமையே தற்பொழுது இருந்து வருகிறது. ஆட்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர். காணாமற் போகின்றனர். சுமார் இரண்டு லட்சம் மக்கள் வரை இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கி உள்ளனர். கொழும்பில் வாழும் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு வருகிறது.

இப்படியான நிலையிலேயே, போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளப் போவதில்லை என்றும் புலிகளை பேச்சு வார்த்தை மேசைக்கு கொண்டுவர அரசு அனைத்து முயற்சிகளையும் செய்யும் என்றும் செய்தியாளர் மாநாடு ஒன்றில் அமைச்சர் ஹெகலிய ரம்புக் வெல தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு இராணுவத் தீர்வு முயற்சியை கைவிட்டு இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண முயல வேண்டும் என்று சர்வதேச சமூகம் தற்பொழுது அழுத்தங்களைப் பிரயோகித்து வரும் நிலையில் அமைச்சர் ஹெகலிய ரம்புக் வெலவின் கருத்து வெளிவந்துள்ளது.

சமாதானத்துக்கான யுத்தம் என்று கூறிக் கொண்டே முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க பெரும் யுத்தம் ஒன்றை விடு தலைப் புலிகளுக்கு எதிராக மட்டும் அல்ல முழு தமிழ் சமூகத்துக்கும் எதிராகவே கட் டவிழ்த்து விட்டிருந்தார். மஹிந்தவின் அரசாங்கமும் தற்பொழுது இதனைத் தான் செய்கிறது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பெயரளவில் வைத்துக்கொண்டு பெரும் அளவில் இராணுவ நடவடிக்கைக்கே திட்டமிடப்பட்டுள்ளது.

புலிகளை பேச்சு வார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கான வாய்ப்புக்களும் தற்பொழுது அறவே கிடையாது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி சர்வகட்சி மாநாட்டுக்கு இன்னும் தனது யோசனைகளைச் சமர்ப்பிக்கவில்லை. சுதந்திரக் கட்சி, 80 களில் தமிழ் மக்களினால் நிராகரிக்கப்பட்ட மாவட்ட சபை யோசனைகளை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைத்துள்ளது. ஜாதிக ஹெல உறுமய கிராம மட்டத்தில் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை முன்வைத்துள்ளது.

சகல கட்சிகளின் யோசனைகளையும் ஆராய்ந்து, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தயாரிக்கப்பட உள்ள இறுதித் தீர்வுப் பொதியில் இந்தக் கட்சிகளின் யோசனைகளில் உள்ள அதிகாரங்களை விட கூடுதல் அதிகாரம் எதனையும் எதிர்பார்க்க முடியாது.

பேரினவாதச் சிந்தனையில் ஊறிப் போய் உள்ள தென்னிலங்கை கட்சிகள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண மாட்டா என்பது வரலாறு கண்ட அனுபவம். இதனால் தான் பதவியில் இருக்கும் அரசும் விடுதலைப் புலிகளும் வெளிநாட்டு அனுசரணையுடன் நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண திட்டம் வகுக்கப்பட்டது.

தற்பொழுது மீண்டும் தென்னிலங்கைக் கட்சிகளின் கையிலேயே இதன் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பது மீண்டும் பல தசாப்தங்களுக்கு இனப் பிரச்சினையை பின்னால் கொண்டு சென்றுள்ளது.

ஆகவே, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முறிக்க மாட்டோம் பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு என்று அரச தரப்புத் தெரிவிப்பது சர்வதேச சமூகத்தை ஏமாற்றவே. இனப்பிரச்சனைக்கு பேச்சு வார்த்தை மூலமே தீர்வு என்றால் அரசாங்கம் அதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். குறைந்தது புலிகள் பரிசீலனைக்கு சம்மதிக்கக் கூடிய யோசனையையாவது அரசு முன்வைக்க வேண்டும். ஆனால் அது நடை பெறப் போவதில்லை.

# வேள்வித் தீயில் ரவூப் ஹக்கீம்!

திட்டமிட்டபடி தனது தேர்தல் மறுசீரமைப்புத் திட்டத்தை அரசு கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விட்டது.

தமது தேசத்தில் தமது கட்சியின் சுயாதீன ஆட்சிக்குக் குறுக்கே நின்று கொண்டு தலையிடி கொடுத்து வருகின்ற சிறுபான்மையினக் கட்சிகளையும் சிறிய கட்சிகளையும் நாடாளுமன்றில் ஓரிரு ஆசனங்களுடன் மட்டுப்படுத்தி அவற்றை செல்லாக்காசாக மாற்றிவடுவதற்கான தனது திட்டத்தில் அரசு உறுதியாக இருப்பதையே அதன் இத்தகைய மும்முர முயற்சி எமக்கு உணர்த்துகிறது.



மஹிந்த ராஜபக்ஷ

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான நடாளுமன்றத் தேர்வுக்குழு அதில் அங்கம் வகித்த ஏனைய கட்சிகளின் ஆலோசனைகளை நிராகரித்து விட்டு, ஒரு தலைப்பட்சமாகத் தயாரித்த மேற்படி தேர்தல் மறுசீரமைப்புத் திட்டம் வெளிவந்தது முதலே சிறுபான்மைக் கட்சிகள் கிளர்ந்தெழுந்து அதற்கெதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளன.

### அரசின் அதிரடி நடவடிக்கை!

குறிப்பாக அரசில் அங்கம் வகித்து வருகின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்ற கட்சிகள் இத்தேர்தல் மறுசீரமைப்புத் திட்டத்தை பலமாக எதிர்த்துவருகின்றன.

எனினும், அக்கட்சிகளின் எதிர்ப்புக்களையோ மாற்று யோசனைகளையோ சற்றும் அலட்டிக் கொள்ளாமல், கணக்கில் எடுக்காமலேயே அரசு தனது தேர்தல் மறுசீரமைப்புத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றது. இது விடயத்தில் அரச தனது அழுங்குப் பிடியை சற்றும் தளர்த்திக் கொண்டதாகத் தெரியவில்லை.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. போன்ற கட்சிகளும் அரசின் உத்தேச தேர்தல் மறுசீரமைப்புத் திட்டத்தை எதிர்க்கின்ற நிலையில் ஏன் அத்திட்ட அறிக்கையை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றது என்பது தெரியவில்லை.

ஐ.தே.க. மற்றும் சிறுபான்மைக் கட்சிகளைச் சேர்ந்த எம்.பி. க்கள் பலரை விலை கொடுத்து வாங்கி விடலாம் என்கின்ற நம்பிக்கையில் அரசு இந்நடவடிக்கையில் இறங்கியிருக்கலாம். உத்தேசத் தேர்தல் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் அவசியமாகும்.

### ஐ.தே.க. எதிர்ப்பது ஏன்?

ஐக்கிய தேசியக் கட்சி இத்திருத்தச் சட்டத்தை ஆதரிக்குமாயின் அரசு இதனை மிக இலகுவாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிவிடலாம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க் கட்சித் தலைவர் ரனில் விக்ரமசிங்கவும் கடந்த வருடம் செய்து கொண்ட ஸ்ரீல.சு.க.-ஐ.தே.க. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இதற்கான இணக்கம் காணப்பட்டிருந்தது.

எனினும், சென்ற ஜனவரி மாதம் கட்சியைச் சேர்ந்த 18 எம்.பி. க்களைப் பிரித்தெடுத்து, அவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கியதைத் தொடர்ந்து அந்த ஒப்பந்தத்தை ஐ.தே.க. கிழித்தெறிந்தது. இதனால் அரசுக்கு எந்தவொரு விடயத்திலும் ஒத்துழைப்பு வழங்காமல் எதிர்க்க வேண்டும் என்ற கொள்கையுடனேயே அக்கட்சி உத்தேச தேர்தல் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு எதிர்ப்புக் காட்டி வருகிறது. நாட்டை ஆளும் வல்லமை கொண்ட பிரதான தேசியக் கட்சிகளுள் ஒன்றான ஐ.தே.கட்சிக்கு எந்த வகையிலும் பாதிப்பில்லாத தேர்தல் மறுசீரமைப்புத் திட்டத்தையே அக்கட்சி எதிர்க்கிறது. தமது யோசனைகள் அத்திட்டத்தில் சேர்க்கப்பட வில்லை எனவும் ஐ.தே.க. குற்றஞ் சாட்டியுள்ளது.

எவ்வாறாயினும் மேற்கூறிய காரணங்களுக்கு மேலதிகமாக சிறுபான்மைக் கட்சிகளைத் தம் கைக்குள் போட்டுக் கொள்ளும் நோக்கத்தை இலாபகரமாக அடைவதற்கும் இவ்வதிகாரத்தை ஐ.தே.க. நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறது என்பது இங்கு சுட்டிக் காட்டத்தக்க விடயமாகும்.

### ரணிலின் தந்திரம்!

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு முண்டு கொடுக்கச் சென்றிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி என்பவற்றை அரசுக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறச் செய்வதற்கான காய் நகர்த்தல்களையே ஐ.தே.க. தலைவர் ரணில் மேற்கொண்டு வருகிறார்.

அரசைக் கவிழ்க்கும் தனது திட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் இக்கட்சிகளின் வெளியேற்றத்தையே ரணில் விக்கரமசிங்க முதன்மைப்படுத்தி வைத்திருப்பதாக சிறி கொத்த வட்டாரம் தெரிவிக்கிறது. அரசின் விடாப்பிடியான திட்டத்தை எதிர்த்து இக்கட்சிகள் அரசிலிருந்து வெளியேற வேண்டும், அதற்கு தேவையான உந்துதலையும் சக்தியையும் ஐ.தே.க. வழங்குவது என்பதே ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரமாகும்.

அதே வேளை இக்கட்சிகள் அரசில் இருந்து வெளியேறத் தயக்கம் காட்டித் தாமதிக்குமாயின் அதற்கு மேலதிகமாக ஜனாதிபதி மூலமே இக்கட்சிகளை அரசுக் கூட்டமைப்பை விட்டு துரத்தியடிக்கச் செய்வது ஐ.தே.க. தலைமையின் மற்றொரு திட்டமாகும்.

### ஹக்கீம் மீது ஜனாதிபதி பாய்ச்சல்!

இதனைத் தொடர்ந்து அரசுத் தரப்புக்கும் இக்கட்சிகளுக்குமிடையே முரண்பாடுகள் முற்றியுள்ளன. கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம் மீது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீறிப்பாய்ந்து

**அஸ்லம் எஸ்.மௌலானா**

எச்சரித்துள்ளார் என அறிய முடிகிறது.

பதிலுக்கு தலைவர் ஹக்கீமும் அரசின் நடவடிக்கையை ஜனாதிபதி முன்னிலையிலேயே உரத்த தொனியில் வன்மையாகக் கண்டித்துள்ளார். இதனையடுத்து இருவரும் காரசாரமான விவாதத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிய வருகிறது.

உத்தேச தேர்தல் மறுசீரமைப்புத் திட்டத்தினால் தனது கட்சியும் தானும் செல்லாக்காசாக மாறப்போகும் ஆபத்துக் காத்திருப்பதனாலேயே மு.கா. தலைவர் ஹக்கீம், ஜனாதிபதியுடன் நேரடியாக மோதிக் கொள்ளும் அளவுக்கு அத்திட்டத்தைக் கடுமையாக எதிர்த்துப் போராடி வருகிறார்.

அவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் பதவியை ஏற்றதன் பின்னர் முஸ்லிம் சமூகம் எவ்வளவோ அழிவுகளையும் அநீதிகளையும் சந்தித்திருக்கின்ற போதிலும் அப்போதெல்லாம் தனது அமைச்சுப் பதவியையும் தனிப்பட்ட நலன்களையும் கருத்திற் கொண்டு ஆட்சியாளர்களிடம் அடக்கியே வாசித்து வந்தார்.

### ஏன் இந்தத் துணிகரம்?

இப்போது போன்று அப்போதெல்லாம் அவர் இப்படிக் குரல் எழுப்பவில்லை. கிளர்ச்சி செய்யவில்லை. முஸ்லிம் சமூகத்தின் நலன்கருதி அரசுத் தலைமைகளுடன் விவாதத்தில் ஈடுபடவில்லை. முஸ்லிம் சமூகத்தில் பாதகமாக அமைந்த எத்தனையோ விடயங்களில் அவர் அரசுடன் ஒத்து இணங்கிச் சென்றிருக்கிறார்.

ஆனால், உத்தேச தேர்தல் மறுசீரமைப்புத் திட்டம் முஸ்லிம் சமூகத்திற்கு பாதிப்பு என்பதை விட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற தான் தலைமை வகிக்கும் கட்சிக்கே பெரும் பாதிப்பையும் ஆபத்தையும் கொண்டு வரப் போகிறது என்பதை உணர்ந்தே தலைவர் ஹக்கீம் ஜனாதிபதியுடன் கூட நேரடி மோதலில் ஈடுபட்டு தனது துணிகரத்தை வெளிப்படுத்தியுள்ளார்.



ரவூப் ஹக்கீம்

அரசின் இத்திட்டத்தை முறியடிப்பதற்கு ஐ.தே. கட்சியின் முழுப் பங்களிப்பு அவசியம் தேவை என்பதாலேயே அக்கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப ரணில் விக்கிரமசிங்கவுடன் மு.கா. தலைவர் ஹக்கீம் கைகோத்துச் செயற்படுவதற்கு முனைந்திருக்கிறார்.

முன்னைய அரசுகளில் தனக்குக் கிடைத்த அமைச்சுப் பொறுப்புக்கள் இந்த அரசில் கிடைக்கவில்லை என்பது அரசில் இணைந்ததன் மூலம் முன்னர் போல கட்சி முக்கியஸ்தர்களை திருப்திப்படுத் முடியவில்லை என்பதும் இந்த அரசில் அதிகாரம் எதுவுமின்றி வெறும் பெயரளவு அமைச்சராகவே காலம் கடத்த வேண்டியுள்ளது என்பதும் ரவூப் ஹக்கீமைக் கடுமையாகப் பாதிக்கச் செய்திருக்கிறது.

### இரு தலைக் கொள்ளி எறும்பு

அதனால் இந்த அரசை விட்டு எந்த நேரத்திலும் வெளியேறி விடத் தயார் நிலையிலேயே மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் இருந்து வருகிறார். ஆனால் அக்கட்சியைச் சேர்ந்த ஏனைய ஐந்து எம்.பிக்களும் தமது அமைச்சுப் பதவிகளைத் தூக்கியெறிந்து தம் பின்னால் வரமாட்டார்களே என்கின்ற அச்சத்தால் அவர் அத்தீர்மானத்தை மேற்கொள்ள முடியாமல் கைகட்டப்பட்ட நிலையில் காலத்தை ஓட்டி வருகிறார்.

இந்நிலையில் அரசின் தேர்தல் மறுசீரமைப்புத் திட்டத்தை அரசுக்குள் இருந்து கொண்டே அதன் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த்து வருகின்றது.

இதனால் அரசில் இருந்து அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டு வெளியே தூக்கியெறியப்பட்டாலும் பரவாயில்லை என்ற நிலைப்பாட்டிலேயே மு.கா. தலைவர் ஹக்கீம் செயற்பட்டு வருகிறார் என்பதை அறிய முடிகிறது.

ஏனெனில் அதிகாரமற்ற அமைச்சராக இருப்பதை விட, இப்போது நடைமுறையிலுள்ள விகிதாசாரத் தேர்தல் முறைமையின் கீழ் கட்சித் தலைவராகத் திகழ்வதே பலமும் பயன்மிக்கதாகவும் இருக்கும் என்பதாலேயே அவர் இத்தகைய வேள்வித் தீயில் குளிக்க முற்பட்டிருக்கிறார் எனலாம்.

# ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்டிருக்கும் சவால்!



ஜூன் முதலாம் திகதி கொழும்பு வாழ் மக்களுக்கு மறக்க முடியாத ஒரு நாளாகி விட்டது.

அன்று தான் ஜனாதிபதியின் கவனம் கொழும்பிலும் புறநகர் பகுதிகளிலும் தமிழர்கள் கடத்தப்படும் விடயத்தின் பக்கம் திரும்பி இருந்தது.

அண்மைக்காலமாக பொது மக்கள் கடத்தப்பட்டனர், புத்திஜீவிகள் கடத்தப் பட்டனர், ஊடகவியலாளர்கள் கடத்திக் கொலை செய்யப்பட்டனர். வர்த்தகப் பிரமுகர்கள் கடத்திக் கொலை செய்யப்பட்டனர், கப்பம் கேட்டு கோடி கோடியாக ரூபாய்களைப் பெற்றுக் கொண்டு சிலர் விடு விக்கப்பட்டனர். பலர் கொல்லப்பட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் எத்தனை? போராட்டங்கள்தான் எத்தனை?

இதுமட்டுமல்ல சர்வதேச சமூகம் மனித உரிமை ஆணையம், சர்வதேச மன்னிப்புச்சபை என்பனவும் பலத்த கண்டனங்களை தெரிவித்தன. உதவிகளை நிறுத்தி விடுவோம் என்று எச்சரிக்கையும் விடுத்தன. ஆனால் இவை எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகவே ஆகின. மலையக மக்கள் முன்னணி தலைவரும் சமூக அபிவிருத்தி மற்றும் சமத்துவ மேம்பாட்டு அமைச்சருமான பெ.சந்திரசேகரன், இந்த அமைப்பின் தேசிய அமைப்பாளரும் தொழில், தொழில் பயிற்சிகள் பிரதி அமைச்சருமான பே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் இடைவிடாமல் ஏற்படுத்தியிருந்த அழுத்தத்தின் பயனாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கடத்தப்பட்டு காணாமல் போனவர்களின் குடும்ப அங்கத்தவர்களை நேரடியாக சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

கூடிய விரைவில் காணாமல் போனவர்களைக் கண்டு பிடிக்கவும், இனிமேல் இப்படியாக கடத்தல்கள் இடம் பெறாமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

அலரிமாளிகையில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பு ஒரு பாதுகாப்பு மாநாட்டைப் போன்றே நடத்தப்பட்டது.

ஜனாதிபதியுடன் சிரேஷ்ட அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, கெஹலிய ரம்புக்வெல, பௌஸி, மைத்திரி பால சிறிசேன, சந்திரசேகரன் மற்றும் பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன், பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா, கொழும்புப் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் என நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பான பலரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான தியாகராஜா மகேஸ்வரன் கலந்துகொண்டதும் கோரிக்கை விடுத்ததும் தொட்டுக்காட்டவேண்டியதொன்றாகும்.

நாட்டின் ஜனாதிபதியே நேரடியாகத் தலையிட்டு விட்டார். பொறுப்புமிக்க அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் முன்னிலையில் உத்தரவாதம் அளித்தார். ஆறுதல் வழங்கினார் என்ற தைரியத்துடனும் சற்று நிம்மதியாகவும் காணாமல்போனவர் களின் உறவுகள் வீடு திரும்பினர்.

எவ்வளவோ சிரமப்பட்டு இவ்விடயத்தில் ஜனாதிபதியை நேரடியாக் தலையிடச்செய்து விட்டோம். இனிமேலாவது எமது மக்களுக்கு நிம்மதி ஏற்படும் என திருப்தியடைந்தனர் மலையக மக்கள் முன்னணி தலைவர்கள்.

ஆனால் தற்காலிகமாக ஏற்பட்ட நிம்மதி யும் திருப்தியும் 24 மணி நேரத்துக்குள் தவிடு பொடியாகி விட்டன.

ஆம்! தலை நகரில் அதி உயர் பாதுகாப்பு பிரதேசமான கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர் களான ஜெய்சந்திரமோகன், எஸ்.சண்முக லிங்கம் ஆகிய இருவரும் கடத்திச் செல்லப்பட்டனர். இவர்கள் மட்டக்களப்பில் இருந்து கொழும்பு செஞ்சிலுவைச் சங்க தலைமை செயலகத்திற்கு வந்தவர்கள்.

பட்டப்பகலில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கூடி நிற்கும் போது வெள்ளை வானில் வந்தவர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்கிறோம் எனக்கூறி கடத்திச் சென்றுள்ளனர். இவ்வாறு கடத்தப்பட்டவர் கள் கடத்தப்பட்ட இடத்தில் இருந்து 125 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் இரத்தினபுரி பிரதேசத்தில் மறுநாள் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டனர். அதுவும் கூட பொதுமக்கள் தகவல் கொடுத்த பின்னரே பொலிஸார் அங்கு சென்று சடலங்களை கைப்பற்றி இருக்கின்றனர்.

இங்கே முக்கியமாக அவதானிக்க - வேண்டிய விடயங்கள் பல உள்ளன. புறக்கோட்டை ரயில்நிலையத்தில் இக்கடத்தல் சம்பவம் இடம் பெற்ற சில நிமிடங்களுக்குள் கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தவெள்ளை வான் சம்பவம் தொடர்பாக சோதனைச் சாவடிகளுக்கும் திடீர் தடை முகாம்களுக்கும் பொலிஸ் நிலையங்களுக்கும் புறக்கோட்டை பொலிஸார் உடனடியாக தகவல்களை அனுப்பி இருந்தால் கொழும்பை விட்டு செல்லும் முன்னரே கடத்தல்காரர்களை மடக்கிப் பிடித்திருக்க முடியும். இது ஏன் நடக்கவில்லை? காட்டிக் கொடுத்தால் கட்டிப் பிடிப்போம், பிடித்துக் கொடுத்தால் அடித்து உதைப்போம் என்பதுதான் இன்று பொலிஸாரின் சித்தாந்தம். பொதுமக்கள் கண்டு பிடித்துக் கொடுத்தால் வீரத்தைக் காட்டி விடுவார்கள்.

இதைவிட மற்றும் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால் கொழும்புக்கும் இரத்தினபுரிக்கும் இடையில் பாரிய படைத்தளங்கள் இரண்டு உள்ளன. ஒன்று பனாகொடை இராணுவ தலைமையகம், இரண்டாவது அவிசாவளைக்கு அருகில் சாலாவ என்ற இடத்தில் உள்ள இராணுவ படைத்தளம்.

இவற்றுக்கும் மேலாக மருதானை, பொரளை, தும்முல்ல, கிருலப்பனை, நுகேகொட, மகரகம, கொட்டாவ, ஹோமாகம, ....., ஹங்வெல்ல, ...., அவிசாவளை, எஹலியகொட, குருவிட்ட என 14 பொலிஸ் நிலையங்களும் 25க்கும் மேற்பட்டட வீதித் தடைச்சோதனைச் சாவடிகளும் இருக்கின்றன.

**இரா. புத்திரசிகாமணி**

சட்டவிரோத கும்பல்களை மடக்கிப் பிடிக்கவும் பொதுமக்களின் பாதுகாப்புக்காக வும்தானே இவை அனைத்தும் அமைக்கப் பட்டுள்ளன. பாதுகாப்புக்காகத்தானே பொதுமக்களின் வரிப்பணம் கோடி. கோடியாக செலவிடப்படுகிறது.

இவ்வளவையும் கடந்து கொழும்பில் இருந்து கடத்தி இரத்தினபுரிக்குக் கொண்டு சென்று சடலமாகப் போட்டுள்ளனர் என்றால் இது ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாகவே அமைந்துள்ளது.

ஜனாதிபதி காணாமல் போனவர்களின் உறவுகளை சந்தித்து இனிமேல் இப்படி நடக்கவிடாமல் தடுப்பேன் என்று உறுதியளித்த 24 மணிநேரத்தில் நடுநிலைவாதிகளாக மக்கள் தொண்டாற்றும் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் இருவர் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டுள்ளதும் மருதானையில் சனநெருக்கடிமிக்க பிரதேசத்திலிருந்து நான்கு முஸ்லிம்கள் கடத்தப்பட்டுள்ளதும் சாதாரண விடயங்கள் அல்ல.

இவை எல்லாம் எப்படி நடக்கின்றன ? முப்படைகளின் தளபதிதான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. முழு நாட்டின் பாதுகாப்புக்கும் பொறுப்பானவரும் அவரே. முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் இவரது கைகளிலேயே இருக்கின்றது.

பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள், கடத்தல்காரர்களை கைதுசெய்யுங்கள், காணாமல்போனவர் களைக் கண்டுபிடியுங்கள் என ஜனாதிபதி உத்தரவிடுகின்றார்.

ஆனால், நீங்கள் சொல்வதைச் சொல்லுங்கள், நாங்கள் எமது கைவரிசையைக் காட்டுகின்றோம் என்றுகூறுவதுபோல் அல்லவா காரியங்கள் இடம்பெறுகின்றன.

ஒருவேளை ஜனாதிபதிக்குத் தெரியாமலே இன்னும் ஒரு நிர்வாகம் உள்ளுக்குள்ளேயே இயங்குகின்றதோ? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

இவ்வாறான செயல்கள் பொதுமக்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் மட்டுமல்ல. நாட்டின் ஜனாதிபதிக்கே விடுக்கப்பட்டிருக்கும் ஒரு சவாலாக அமைந்துள்ளது.

ஜனாதிபதி இந்த சவாலை முறியடித்து நாட்டு மக்களின் அமைதிவாழ்க்கைக்கும், பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் அளிக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். நடவடிக்கை எடுப்பாரா?

# பேச்சுக்கான வாய்ப்பு...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

30ஆம் திகதி கருத்து வெளியிட்டிருந்தார்.

அதேவேளை, வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகல்லாகம சிங்கப்பூரில் வைத்து ரோய்ட்டருக்கு பேட்டி ஒன்றை கடந்த 3ஆம திகதி வழங்கியுள்ளார்.

"போர்நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகும் எண்ணம் அரசுக்கு கிடையாது. அப்படி அரசு பரிசீலிக்கவும் இல்லை. அது இன்னமும் நடைமுறையில் இருக்கின்றது. விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு அழைப்பதற்குத் தூண்டுகின்றோம்.

"அவர்கள் முன்வந்தால் இன்றைக்குக்கூடப் பேச்சு நடத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். கூடிய விரைவில் இந்த மாதத்தில்கூட புலிகள் பேச்சுக்கு வரலாம். அதற்கான சாத்தியங்கள் உள்ளன" என போகல்லாகம கூறியுள்ளார்.

ஒரே அரசில் அங்கம் வகிக்கும் இரு அமைச்சர்களும் முரண்பாடான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

சிங்கள மக்களையும், பேரினவாதிகளையும் சமாளிப்பதற்காக கொழும்பில் வைத்து ரம்புக்வெல கருத்து வெளியிட்டிருக்கலாம்.

சர்வதேச சமூகத்தை சமாளிப்பதற்காக சிங்கப்பூரில் வைத்து போகல்லாகம கருத்து வெளியிட்டிருக் கலாம்.

ஒவ்வொரு தரப்பையும் திருப்திப்படுத்த இக்கருத்துக்கள் வெளிவந்தாலும், கள நிலையில் நோர்வேத் தூதர், கண்காணிப்புக் குழுத் தலைவர் வன்னி செல்ல விதிக்கப்பட்டுள்ள தடை அடுத்த கட்டத்துக்கு சமாதான முயற்சிகள் நகருமா? என்ற கேள்வியை எழுப்பி நிற்கின்றன.

களத்தில் நடப்பவையைச் சற்று ஆராய்ந்து பார்த்தால், பேச்சுக்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. பேச்சுக்களுக்கான சூழல் உருவாக வேண்டுமானால், கடந்த ஜனவரியில் இருந்த சுமுக நிலை மீண்டும் திரும்பவேண்டும்.

அதற்கு அரசுத் தரப்பில் இருந்து நல்லெண்ண சமிக்ஞைகள் வெளிப்பட வேண்டும்.

அப்படி நல்லெண்ண சமிக்ஞைகள் வெளிவந்து சுமுக நிலை தோன்றி பேச்சுக்கள் இடம்பெறுமா? இல்லாவிட்டால் மோதல்கள் தீவிரமாகி நாலாம்கட்டப் போருக்கான பாதை திறக்கப்படுமா? அதைப் பொறுத்திருந்து பார்ப்போம். *



"நீ, ... என்னைக் காதலிப்பது உண்மைதானா....?"

"என் கணவர் மேல் சத்தியமாக உண்மை!"

# யாழ்ப்பாண நூல்நிலையமும் சிங்கள (NAZI) நாசிகளும்!

அவுஸ்திரேலியாவிலிருந்து சபேசன்





இருபத்தியாறு ஆண்டுகளுக்கு முன்பு, நாகரிக உலகமே வெட்கித் தலைகுனியும்படியான கோரச்செயல் ஒன்றை, அன்றைய சிங்கள அரசு தமிழ் மக்களுக்குச் செய்தது. 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி இரவு ஒன்பது மணியளவில், தென்கிழக்காசியாவின் மிகச் சிறந்த நூல் நிலையங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட யாழ்ப்பாண நூல் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது. அன்று 97,000க்கும் மேற்பட்ட நூல்களும், கிடைத்தற்கரிய நூல்களும், சுவடிகளும் எரிந்து சாம்பலாகின.

தமிழர்கள் தம்மில் ஒரு பகுதியை தாம் இழந்ததாக உணர்ந்து, உருகி, உறைந்து போயினர். தமிழீழ மக்களுக்கு மாறாத வலியையும், வடுவையும் தந்த இந்தக் கோரமான பேரழிவுக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளையும், வரலாற்று உண்மைகளையும் நாம் இங்கே ஆராய்ந்து பார்ப்பதோடு மட்டுமல்லாது, தேசிய இனங்களை ஒடுக்க முயன்ற பேரினவாத சர்வதேச அரசுகளின் செயல்களில் உள்ள ஒற்றுமைகளைச் சுட்டிக் காட்டித் தர்க்கிப்பதும் இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

இப்பேரழிவுச் செயல் நிகழ்த்தப்பட்ட 1981 ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு முதல் நாள் நடைபெற்ற விடயங்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இவை இரண்டையும் தர்க்கித்த பின்னர், இவற்றிற்கு முன்னோடியாக ஏன் வழிகாட்டியாகவும் இருந்த ஹிட்லரின் நாசி (NAZI) நடைமுறைகளையும், அதன் சட்டங்களையும், செயற்பாடுகளையும் சிறிலங்காவின் அரசுகளோடு ஒப்பிட்டுத் தர்க்கிக்க நாம் விழைகின்றோம்.

எல்லாவற்றிற்கும் முன்பாக, தென்கிழக்காசியாவின் மிகச் சிறந்த நூல் நிலையங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட யாழ்ப்பாண நூல் நிலையம் எவ்வாறு தோன்றியது, வளர்ந்தது என்பது குறித்து, எமக்குக் கிடைத்த தகவல்களைத் தர விரும்புகின்றோம்.

1933 ஆம் ஆண்டு கே.எம்.செல்லப்பா என்ற அன்புள்ளம் கொண்ட தமிழன் தன்னுடைய இல்லத்தில், இலவச நூல் நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம் தாம் பெற்ற புலமைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்பும் நல்லெண்ணத்தை தெரிவித்தார்.

செல்லப்பாவின் சிந்தனையை ஏற்றுக்கொண்ட பல அறிவு ஜீவித் தமிழர்கள், 1934 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் திகதி ஒரு நூல் நிலையத்தை ஆரம்பித்தார்கள். அன்றைய நாட்களில் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த (High Court Judge) திரு, ஐசாக் அவர்கள் தலைவராகவும், திரு செல்லப்பா அவர்கள் செயலாளராகவும் இந்த நூல் நிலையக் குழுவினராகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இந்த நூல் நிலைய நிர்வாகக் குழுவினரின் அயராத உழைப்பின் காரணமாக, 1934 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியன்று, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ஒரு வாடகை அறையில் 844 புத்தகங்களுடனும், 30 செய்திப் பத்திரிகைகள், மற்றும் சஞ்சிகைகளுடனும் ஒரு நூல் நிலையம் உருவானது. மிகவும் வயது குறைந்த இளைஞர்களினதும், வயது முதிர்ந்த முதியவர்களினதும் ஆர்வம் காரணமாகவும், ஆதரவு காரணமாகவும் இந்த நூல் நிலையத்தின் நூல்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகின.

1935 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணப் பிரதான வீதியில் (Main Street) உள்ள ஒரு வாடகைக் கட்டடத்திற்கு இந்த நூல் நிலையம் இடம் பெயர்ந்தது. 1936 ஆம் ஆண்டு யாழ். மகாநகராட்சி மண்டபம் நிர்மாணிக்கப்பட்டது. இந்த நூல் நிலையம், இதற்கு அருகாமையில் உள்ள கட்டடத்திற்கு மீண்டும் இடம்பெயர்ந்தது.

அந்தக் காலத்திலேயே, இந்த நூல் நிலையத்துக்குரிய சந்தா மூன்று ருபாய்கள் ஆகும். ஆனால் அறிவுத் தாகம் கொண்ட தமிழர்களின் ஆர்வத்துக்கு ஈடு செய்ய முடியாத அளவில் இந்த நூல் நிலையம் திணற வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நூல் நிலையம் விரிவாக்கப்பட வேண்டிய அவசியத்துடன் ஒரு நிரந்தரமான பாரிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் எமது (அன்றைய) தமிழ் மக்கள் உணர்ந்தார்கள்.

அப்போது யாழ். மாநகரசபை முதல்வராக இருந்த திரு சாம் சபாபதி அவர்களின் தலைமையில் பல நிதி சேகரிப்பு நிகழ்ச்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டன. குதூகல விழா (Carnival), இந்தியக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சி விழாக்கள், நல்வாய்ப்புச் சீட்டுக்கள் (Lottery Tickets) போன்றவற்றின் மூலமாக நிதி சேகரிப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. எதிர்பார்த்ததையும் விட ஏராளமான தொகை திரட்டப்பட்டது என்ற விடயத்தை நாம் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

1953 ஆம் ஆண்டு, நூல் நிலையத்திற்கான நிர்வாகக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. வணக்கத்துக்குரிய பிதா லோங் (Long) அவர்கள் இந்த நிர்வாகக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அன்னாரின் சிலை ஒன்று பிற்காலத்தில், யாழ்ப்பாண பொதுசன நூல் நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி, சிங்களக் காடையர்களால், நூல் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டபோது, வணக்கத்துக்குரிய பிதா லோங் அவர்களுடைய சிலையும் அக்காடையர்களால் சிரச்சேதம் செய்யப்பட்டது.

1953 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதியன்று, இந்த நூல் நிலையத்திற்கு அத்திவாரம் இடப்பட்டது. திராவிடக் கட்டடக் கலை நிபுணரான கே.எஸ்.நரசிம்மன் அவர்களைச் சென்னையிலிருந்தும், பேராசிரியர் இரங்கநாதன் அவர்களை டெல்லியிலிருந்தும் நூல் நிலைய நிர்வாகக்குழு அழைத்து ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் பெற்றது. முதல் கட்டப் பணிகள் 1959 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி நிறைவு பெற்றன. சிறுவர்களுக்கான பகுதி ஒன்று 1967 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டில், நூல் நிலையத்தின் முதல் மாடியில் கூட்டங்கள் நடத்துவதற்காக மண்டபம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட கட்டடமும், 97,000க்கும் மேற்பட்ட அரிய நூல்களும், பழைய முக்கியமான சஞ்சிகைகளும் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதியன்று சிங்களப் பேரினவாதி களால் தீக்கிரையாக்கப்பட்டன. (மேற்கோள்: கட்டடக் கலைஞர் V.S.துரைராஜாவின் 1996 ஆம் ஆண்டுக் கடிதம் Ceylon Daily News-Tamil Nation மற்றும் சங்கம் இணையத் தளங்கள்)

1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி, யாழ்.நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்ற, தமிழர் விடுதலைக் கூட்டணித் தேர்தல் கூட்டத்தின் போது நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தின் போது ஒரு சிங்களப் பொலிஸ்காரர் கொல்லப்பட்டார். இதனை அடுத்து துரையப்பா ஸ்டேடியத்தில் நிலை கொண்டிருந்த சிங்களப் பொலிசார் A சுப்பையா & சன்ஸ் கடை உட்படப் பல கடைகளை உடைத்தும், எரித்தும், கொள்ளையிட்டும் அடாவடித்தனங்களில் இறங்கினர். நாச்சிமார் கோவில் தேருக்கு தீ மூட்டும் முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டன. பல பொதுமக்களின் வீடுகள் உடைத்து நொருக்கப்பட்டன. தமிழர் கூட்டணியின் கட்சிச் செயலகம் தீயிடப்பட்டது. யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடும், வாகனமும் தீக்கிரையாக்கப்பட்டன.

இதற்கு அடுத்த நாள் இரவு ஜூன் 1 ஆம் திகதி யாழ். நூல் நிலையத்தின் மூன்றாவது மாடி தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. இந்த மூன்றாவது மாடியில்தான் கிடைத்தற்கு அரிய சுவடிகளும், மிக அரிய நூல்களும் இருந்தன. மிக விரைவில் நூல் நிலையத்தின் சகல பகுதிகளுக்கும் தீ பரவியது.

யாழ். நூல் நிலையக் கட்டடத்தை மிக நன்றாகப் புரிந்து கொண்டு, அதனை முழுமையாக நாசமாக்கும் விதத்தில், நன்கு திட்டமிடப்பட்டே இப் பேரழிவு நடத்தப்பட்டது. அன்றைய தினம் நடத்தப்பட்ட கோர தாண்டவத்தில், ஈழநாடு பத்திரிகைக் கட்டடம் உட்பட முக்கியமான புத்தகக் கடைகளும் எரிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் பெரிய கடை வீதியில் அமைந்திருந்த புலவர்களின் சிலைகளும் சேதமாக்கப்பட்டன.

**தமிழரின் பண்பாட்டு அடையாளங்கள் என்று கருதப்பட்ட விடயங்கள் மீதே சிங்களப் பேரினவாதிகள் தமது அழிவுத்தாக்குதல்களை நடத்தினார்கள் என்பதில் ஐயமில்லை.**

**தமிழர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தமிழர்கள் படிக்கின்ற நூல்கள் அன்று தீக்கிரையாக்கப்பட்டன.**

அன்றைய சிங்கள அரசினால் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்ட இந்த நாசகாரச் செயலை முன்னெடுக்கவும், கண்டு களிக்கவும் இரண்டு சிங்கள அமைச்சர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தனர் என்று சொல்லப்பட்டது. ஒருவர் சிறில் மத்தியூ. மற்றவர் காமினி திசநாயக்கா.

'குடித்து வெறித்திருந்த சில பொலிஸ்காரர்கள் தாமாகவே திருட்டுச் செயல்களைப் புரிந்தார்கள்' என்று அரசு தரப்பில் வியாக்கியானம் வேறு கொடுக்கப்பட்டது. திருடுகின்றவர்கள் தமக்கு ஆதாயம் தரக்கூடிய பொருட்களைத் திருடுவார்கள். நூல்களையா எரிப்பார்கள்?

இந்தப் பண்பாட்டு அழிப்பினைத் தொடர்ந்து நடந்த அல்லது நடக்காத விடயங்கள் சில படிப்பினைகளைத் தந்தன. நூல் நிலைய அழிப்பு குறித்து உத்தியோக பூர்வ விசாரணை எதையும், சிங்கள அரசு நடத்தவில்லை. அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த அந்த இரண்டு அமைச்சர்களுக்கும் எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைப் பின்னர் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரான அமிர்தலிங்கம் கொண்டுவர முயன்ற போது, சிங்கள அரசு அமிர்தலிங்கத் துக்கு எதிராகவே நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது.

**சிங்கள நாடாளுமன்றத் தின் ஊடாக தமிழர்களுக்கு எந்தவிதமான நீதியோ, நியாயமோ கிடைக்கப் போவதில்லை என்ற உண்மை மீண்டும் ஒரு முறை நிருபணமாகியது.**

இதன் பின்னணியில்தான் சிங்களப் பேரினவாத அரசியல் சட்டங்களுக்கும், ஹிட்லரின் நாசிச் (NAZI-National Socialist Party of Germany) சட்டங்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளைத் தர்க்கிக்க விழைகின்றோம். சட்டங்கள் மட்டுமல்ல, அவையினூடாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும்.

1935 ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், 10 ஆம் திகதி நியூரம்பெக், ஜேர்மனியில் நடைபெற்ற நாசி மாநாட்டில் சட்டமாக்கப்பட்ட சில விடயங்கள் பின்னாளில் அதாவது 1948, 1949களில் சிறிலங்கா அரசால் சட்டமாக்கப்பட்டன. உதாரணம் குடியுரிமைச் சட்டம் இலங்கை.

நூல்களை எரிக்கின்ற திருவிளையாடல்களையும், நாசிக்கள் எப்போதுமே புரிந்து வந்திருக்கிறார்கள். 1930களில் யூத மக்களின் நூல்களை, வீதியோரங்களில், பகிரங்கமாக நாசிக்கள் எரித்து வந்தனர். 1933ஆம் ஆண்டு, மே மாதம் 10 ஆம் திகதியன்று, ஹிட்லரின் பிரசார அமைச்சரான கோயபல்ஸின் உத்தரவின்

(25 ஆம் பக்கம் பார்க்க)



# அறிவியல்

## விண்ணில் எரியும் விண்மீன்!



***விண்ணிலிருந்து விழும் எரி மீன், தரையை அடைவதில்லை ஏன்?***

அண்டப் புற வெளியிலிருந்து விண்வெளியில் மோதி அனற் பிழம்புடன் பூமியை நோக்கி வரும் எரி மீன், வளி மண்டலத்தில் நுழையும் போது காற்றில் உராய்வதால் சூடுமிக அதிகமாகி விடுகிறது. இந்த சூடு மிகப் பெரிய அளவில் இருப்பதால், தரைக்கு வருவதற்குள் அது வாயுவாக மாறி விடுகிறது. எனவே அது தரையை அடைவதில்லை.

## வாலேதான் ஆயுதம்...!



'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சு' என்று சொல்வதுபோல வாலை இழந்து எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் திறனைப் பல்லி பெற்றுள்ளது. வாலைத் திரும்பப் பெறுகின்ற ஆற்றலுக்கு ' இழப்பு மீட்டல் சக்தி ' எனப் பெயர். பல்லியின் வால் பகுதியில் உள்ள வால் முள்ளெலும்பு கடினப் படாத பகுதியாகும். இது எளிதில் துண்டாகி விழுந்துவிடும். இது துடிப்பதையே எதிரி பார்த்துக்கொண்டிருக்க, பல்லி தப்பித்துக் கொள்ளும். மறுபடியும் பல்லியின் வெட்டப்பட்ட வால் வளர்ச்சி பெறும். இருந்தாலும் இந்த வாலின் அமைப்பு முந்தைய உண்மையான வாலைப்போல இருக்காது.

## ஆந்தைக்கு பகலில் கண் தெரியுமா?




ஆந்தை இரவில் மட்டுமே உணவைத் தேடும் இயல்பு கொண்டது. இதனால் அதன் கண்களின் விழித்திரையில் Rods எனப்படும் குச்சி செல்கள் தான் அதிக எண்ணிக்கையில் காணப்படும். குச்சி செல்கள் மங்கலான ஒளியில் செயற்படக் கூடியவை. இதன் மூலம் ஆந்தை மங்கலான வெளிச்சத்திலும் எளிதாகப் பார்க்க முடிகிறது. இதன் விழித்திரையில் Cones எனப்படும் கூம்பு செல்கள் (பிரகாசமான ஒளிக்கதிர்களை வாங்கும் செல்கள்) மிகவும் குறைவு. இதனால் ஆந்தைக்கு பகலில் கண் சரிவரத் , தெரிவதில்லை.

## சிக்கலான விக்கல்



நமது உடலில் மார்பு அறையையும் வயிற்றையும் பிரிக்கக்கூடிய மெல்லிய தகடு போல் உள்ள சவ்வுக்கு உதரவிதானம் (Diaphragm) என்று பெயர். இந்த சவ்வு சுவாசத்திற்கு மிகவும் அவசியம். இது ஒழுங்கற்ற முறையில் சுருங்கி விரிவதால் தான் விக்கல் ஏற்படுகின்றது. நுரையீரல்களுக்குள் காற்று விரைந்து செல்லும்போது மூடியிருக்கும் குரல்வளை நாண்கள் இடையே எழும் அதிர்வையே விக்கல் என்கிறோம். அவசர அவசரமாகச் சாப்பிட்டால் விக்கல் வரும். சுவாசம் சீரில்லாமல் இருந்தால் விக்கல் ஏற்படலாம். விதானத்தை வயிறு நெருக்கினாலும் விக்கல் ஏற்படும்.

## கூடவே வரும் நிலா



நிலா ரொம்ப தூரத்தில் இருக்கிறது. அவ்வளவு தூரத்தில் உள்ள பொருளை நாம் பார்க்கும் கோணம், நாம் நகருவதால் கணிசமாக மாறுவது இல்லை. அதாவது, நாம் நகர்ந்து கொண்டே நிலாவைப் பார்க்கும் கோணம் மாறாமல் இருக்கும். அதனால்தான் நம் கூடவே நிலா வருவது மாதிரித் தெரிகிறது. ரயிலில் போகும்போது அருகில் உள்ள மரங்கள், கம்பங்கள் பின்னோக்கி நகர்வது போலவும் தூரத்து மலை நம்முடன் வருவது போலத் தெரிவதும் இதனால்தான்.

## கட்டடம் கட்டும் பன்றிகள்



இமயமலையின் அடிவாரத்தில் உள்ள கிராமங் களில் வீடுகள் கட்டப்படும்போது வீடுகள் கட்டுவதற்கு பயன் படுத்தப்படும் மண்ணில் பன்றிகளை இரவு நேரத்தில் அடைத்து வைக்கும் வழக்கம் உள்ளது. இது குறித்து 'லாரி பேக்கர்' ஆராய்ச்சி செய்துள்ளார்.

இங்கிலாந்தை சேர்ந்த லாரி பேக்கர் கேரளாவில் தங்கி இந்தியாவின் கட்டடக்கலையை எளிமைப்படுத்துவதில் தமது வாழ்நாளைச் செலவிட்டார். கட்டடம் கட்டும் போது மண்ணிற்கு ஒட்டும் தன்மை தேவை. இந்த ஒட்டும் தன்மையை யூரியா அதிகப்படுத்துகின்றது. வெண்ணிறப் படிகக் கார்பைடு சேர்மமான யூரியா சிறுநீர், ரத்தம் போன்றவற்றில் காணப்படுகிறது. விலங்குகளில் பன்றியின் சிறுநீரில் தான் அதிக அளவில் யூரியா உள்ளது. இந்தச் சிறுநீர் தான் மண்ணின் ஒட்டும் தன்மையை அதிகப்படுத்துகிறது. பன்றிகள் இல்லாத இடங்களில் கட்டடம் கட்ட பயன்படுத்தும் மண்ணோடு யூரியாவைக் கலந்து பயன் படுத்தும் முறையை லாரி பேக்கர் அறிமுகப்படுத்தினார்.

## சமூக அறிவியல் வெப்சைட்

சமூக அறிவியல் என்பதை மாணவர்கள் ஏதோ தேவையில்லாத பாடமாக நினைக்கின்றனர். கணனி தொழில் நுட்ப யுகத்தில் நிறைய வலியுறுத்துகின்றது. இந்த வெப்சைட்டில் எல்லா நாடுகளின் வரலாறு குறித்தும் சொல்லப் பட்டுள்ளது.

**Social Studies for Kids**

Home • Fun Facts • Glossaries • Newsletter • FAQ • Forum

பாடங்கள் வேண்டாத சுமையாக கருதப்படுகின்றன.

மாணவர்கள் சிறந்த குடிமகன்களாக உருவாக சமூக அறிவியல் தேவை என்பதை **www.socialstudiesforkids.com** என்ற வெப்சைட்

விளையாட்டுகளின் மூலமாக இந்த வெப்சைட் புவியியல், கலாசாரம், பொருளாதாரம் முதலியவற்றை கற்றுத்தருகின்றது. விடுமுறைகளின் காரணங்கள் இந்த வெப்சைட்டில் விளக்கப்பட்டுள்ளன.



# பால்வினை நோய்களும் பரம்பரை அலகுகளும்

**கே:பெண், வயது 23. கொழும்பில் நல்ல தொழில் பார்க்கின்றேன். எனக்குத் திருமணம் பேசுகின்றார்கள். வெளிநாட்டு சம்பந்தம்தான். பெற்றோருக்கு சம்மதமாக இருக்கின்றது. எனக்கு வெளிநாட்டில் வசிக்கும் ஆண்கள் பற்றி பல சந்தேகங்கள். எனது சிநேகிதிகளில் சிலரின் வாழ்க்கை இந்த வெளிநாட்டு மாப்பிள்ளைகளால் அழிந்துபோனதே இதற்குக் காரணம். எனவே, எனக்குப் பேசப்படும் வெளிநாட்டுப் பையன் -எல்லோருக்கும் பிடித்திருந்தால்-அவரின் உடல்நலம் பற்றி நான் சில பரிசோதனைகள் செய்ய கேட்பது தவறா? உதாரணமாக HIV Test ரிப்போர்ட், பால்வினை நோய்கள் ரிப்போர்ட் கேட்பது தவறா? வேறு என்ன நோய்கள் பற்றி நான் அவர்களிடம் கேட்கவேண்டும். பதில் தரவும்.**

ப:பாரதி கண்ட புதுமைப்பெண்ணாய் இருக்கின்றீர்கள் நீங்கள். இன்னும் ஒரு பத்து வருடம் கழித்து மணப்பருவத்தில் இருந்தால் நீங்கள் இந்தக் கேள்விகளை மணமகனிடத்தில் கேட்கவேண்டியிருந்திருக்காது. சட்டப்படி நட்சத்திர சாதகத்துடன் மணப்பெண், மணமகன் இருவரினதும் மெடிக்கல் ரிப்போர்ட்டும் வருங்கால திருமணங்களில் பொருத்தம் பார்க்கப்பட்டிருக்கும். நீங்கள் பத்துவருடம் முந்திப் பிறந்துவிட்டதால் நீங்கள் கேட்பதில் நியாயம், உரிமை இன்று இருந்தாலும் அடக்கி வாசிக்கத்தான் இன்றைய ஆண்சமூகம் எதிர்பார்க்கும். எதற்கும் உங்கள் பெற்றோர் -உறவினர் ஊடாக -பட்டும்படாமல் எவரையும் மனம்வருந்தச் செய்யாமல் மணமகனின் குணாதிசயம், பழக்கங்களைப் பற்றி தீர விசாரித்தறிவது புத்திசாலித்தனம்.

நிற்க-பால்வினை நோய்கள் உண்டா இல்லையா என்பதை மட்டும் இன்று திருமணம் பேசும்போது பார்த்தால் போதாது. இன்று பரம்பரை அலகுகள் பற்றி-பாரிய ஆய்வுகள் நடத்தப்பட்டு வரும்வேளையில் பரம்பரையில் ஏற்படும் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் வேறு சில பரம்பரை நோய்கள் பற்றி முன்னரே அறிந்துகொள்ளமுடியும். எதிர்வரும் காலங்களில் ஒரு மனிதனின் Genome Report அவருக்கு ஏற்பட்டுள்ள, ஏற்டப்போகின்ற நோய்களை அறிந்துகொள்வது மாத்திரமல்ல Gene Slicing என்று சிகிச்சைமூலம் இந்த நோய்களுக்குரிய Gene எனப்படும் பரம்பரை அலகுகளை அகற்றவும் முடியும் என எதிர்பார்க்கின்றார்கள்.

அத்துடன் உங்களுக்கு மணமகனாக வருபவரின் மருத்துவசான்றிதழை எதிர்பார்க்கும் நீங்கள் உங்கள் மருத்துவ சான்றிதழுக்கு பரிசோதனைக்கு போகத் தயாராக இருக்கவேண்டும் என்று மணமகன் எதிர்பார்க்கலாமல்லவா? உதாரணமாக Virginity Test எனப்படும் கன்னித்தன்மையை நீங்கள் இழக்கவில்லை என்று மருத்துவ சான்றிதழை உங்கள் வருங்காலக் கணவர் எதிர்பார்த்தால் - அதற்கும் நீங்கள் தயாரா?

எனவே, இந்த பேப்பர் சான்றிதழ்களால் புனிதமான திருமண பந்தத்தை சேதப்படுத்தாது சம்பந்தம் பேசும் பெரியவர்கள் இந்த விஷயங்களைக் கட்டாயம் கவனிப்பார்கள்- என்ற நம்பிக்கையோடு திருமணத்திற்குத் தயாராகுங்கள்.

**கே: பெண் வயது 22, சமீபத்தில் திருமணமாகியுள்ளேன். ஓரிரு வருடங்களுக்கு குழந்தை பெறாமல் இருக்க எண்ணியுள்ளோம். அதேநேரத்தில் - எதுவித குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளையும் பின்பற்ற விருப்பமில்லை. உடலுறவு கொண்ட அடுத்த நாள் காலை Morning After Pill என்கின்ற மாத்திரையை உபயோகித்து வருகின்றோம். இந்தமுறை இதுவரை எதுவித பிரச்சினையையும் தரவில்லை. எமக்குக் குழந்தைவேண்டும் என்ற காலம் வரும்வரை இந்த முறையைப் பின்பற்ற எண்ணியுள்ளோம். இந்தமுறையின் சாதக பாதக விளைவுகளை விளக்கவும். தொடர்ந்து இந்த வழிமுறையை பின்பற்றுவது நல்லதா?**

ப: நீங்கள் உபயோகிக்கும் Morning After Pills என்பதை (Emergency Contraception) அவசர குடும்பக்கட்டுப்பாடு அல்லது கருத்தடை மாத்திரைகள் என்றும் அழைப்பார்கள்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு - 14

Postinor-2 என்ற பெயரில் இலங்கையில் குடும்பக் கட்டுப்பாட்டுச் சங்கத்தினால் இது விநியோகிக்கப்படுகின்றது. பாதுகாப்பற்ற-அதாவது கருத்தடை முறைகள் எதனையும் பின்பற்றாத வேளையில் அகஸ்மஸ்தாக உடலுறவு கொண்டால் கருத்தரித்தலைத் தடுப்பதற்கு இந்த மருந்து மாத்திரைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. உடலுறவுகொண்ட முதல் 72 மணி நேரத்திற்குள் இந்த மாத்திரைகளை எடுத்தால்தான் கருத்தடை வெற்றிகரமாக இருக்கும். அநேகமாக உடலுறவு கொண்ட இரவுக்கு அடுத்தநாள் காலையில் முதலாவது மாத்திரையை உபயோகிப்பதால் தான் இதற்கு Morning After Pills என்று காரணப்பெயர் வந்தது. முதலாவது மாத்திரையை காலையில் உபயோகித்து சரியாக 12 மணித்தியாலங்களின் பின்னர் இரண்டாவது மாத்திரையை கட்டாயம் உபயோகிக்கவேண்டும். இப்படிச் சரியாக உபயோகித்தால்தான் கருத்தடை வெற்றிகரமாக இருக்கும். தற்செயலாக இந்த மாத்திரை சிலருக்கு வாந்தி ஏற்படுத்துவதுண்டு. மாத்திரை உபயோகித்து இருமணி நேரத்திற்குள் வாந்தி ஏற்பட்டால் இன்னொரு மாத்திரையை உடனடியாக உபயோகித்து திரும்பவும் 12 மணி நேரத்தின் பின்னர் அடுத்த மாத்திரையை உபயோகிக்கவேண்டும். இந்த மாத்திரைகள் சூலகத்திலிருந்து கருக்கட்டலுக்கு முட்டைகள் உற்பத்தியாவதைத் தடைசெய்கின்றன. அப்படி முட்டைகள் உற்பத்தியாகி வெளியே வந்தாலும் அவை விந்தணுக்களால் கருக்கட்டல் (Fertilisation) ஏற்படுவதைத் தடை செய்கின்றன. அப்படி முட்டை கருக்கட்டல் நடந்தாலும் கரு- கருப்பைச் சுவரில் பதியமாவதை (Implantation) தடைசெய்கின்றன. அதாவது எந்த நேரத்திலும் எந்த நிலையிலும் கருத்தடை சாதனமாக இந்த மாத்திரைகள் செயல்படுகின்றன. இதனால் பலர் மற்றைய கருத்தடை முறைகளை கைக்கொள்வதை விட உடலுறவுகொண்ட போது இந்த மாத்திரைகளை உபயோகிப்பது இலகுவானது, வசதியானது என்று தப்பான கருத்துகளை கொண்டிருக்கின்றனர். பாரிய பக்கவிளைவுகளை இந்த மாத்திரைகள் கொண்டிராவிடினும் இது கருத்தடை முறைகளில் ஒன்றாக வரையறுக்கப் படவில்லை. காரணம் இந்த முறையைப் பின்பற்றும்போது 15வீதம் தோல்வி ஏற்படும் சந்தர்ப்பம் உண்டு. அவசரதேவையின் போது மாத்திரமே - இந்த முறையை உபயோகிக்க வைத்தியர்கள் அறிவுறுத்துகின்றார்கள். இரத்த அழுத்தம் உயர்வாக உள்ளவர்கள் இதயநோய்க்காரர்கள், நீரிழிவு நோயாளிகள், ஈரல் வியாதியுள்ளவர்கள் ஆகியோருக்கு இந்த முறையை நிச்சயம் உபயோகிக்கக்கூடாது. அடிக்கடி இந்த முறையை பின்பற்றுபவர்களின் மாதவிலக்கு வட்டத்தில் பல பிரச்சினைகள் ஏற்படலாம். உங்கள் விஷயத்தில் நீங்கள் ஒரு சில காலம் குடும்பக் கட்டுப்பாட்டை பின்பற்ற விரும்பினால் கருத்தடை மாத்திரைகள், Loop எனப்படும் கருப்பையினுள் வைக்கப்படும் கருத்தடை சாதனங்கள் ஆகியவற்றையே நான் சிபார்சுசெய்வேன்.

**கே: நான் ஒரு நகை வடிவமைப்புச் செய்யும் தொழிலாளி. எனக்கு அடிக்கடி நெஞ்சுத் தடிமல் ஏற்படுகின்றது. டாக்டரிடம் காட்டியபோது -நகைத் தொழிலில் ஏற்படும் கடின உலோகப் பொருட்களின் தூசி, Solder உபயோகிக்கும்போது வெளிப்படும் நச்சுப்பொருட்கள் ஆகியவற்றால் இப்படி ஏற்படும் என்கின்றார். Solder என்கின்ற ஒட்டுவேலைதான் நான் அதிகமாகச் செய்கின்றேன். இதிலிருந்து கட்மியம் (Cadmium) என்கின்ற நச்சுப்பொருள் வெளிவருகின்றது என்பதை அறிவேன். எனவே, எனக்கு ஏற்பட்டிருப்பது Cadmium நஞ்சூட்டலா என்பதை அறியத் தரவும். இதற்குத் தடுப்புமுறையில் என்ன செய்யலாம் என்பதையும் அறியத் தரவும்.**

ப: நகைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் -முக்கியமாக நகைகளைச் செய்யும் தொழிலாளர்கள் -தொழிலில் உபயோகிக்கப்படும் உலோகங்களின் தூசி துணிக்கைகள், அந்த உலோக உப்புகள், Oxides எனப்படும் காரவகைகள் என்பவற்றின் தாக்கங்களால் பாதிக்கப்படுகின்றார்கள். ஆபரணங்களை வடிவமைக்கப் பயன்படுத்தப்படும் Solder எனப்படும் பகுதிகளை ஒட்ட பயன்படுத்தப்படும் பொருளில் கட்மியம் (Cadmium) என்கின்ற உலோகம் கலந்துள்ளது. இதன் துகள்கள் மட்டும் ஒட்டும்போது ஏற்படும் புகைமூலமாக இந்தக் கட்மியம் தொழிலாளரின் சுவாசம் மூலம் உட்செல்ல ஏதுவுண்டு. கட்மியம் உப்பில் உள்ள Cadmium Oxide என்ற பொருள் புற்றுநோயை ஏற்படுத்தவல்லது. இதனை ஆங்கிலத்தில் Carcinogen என்று அழைப்பார்கள். நகைத் தொழிலாளர்கள் தமது தொழிலை அநேகமாகக் காற்றோட்டம் அதிகம் இல்லாத இடத்திலேயே செய்கின்றனர். இதனால், இந்த நச்சுப்பொருளுக்கு தம்மை உள்ளாக்கும்போது (Exposure) நகைத் தொழிலாளர்களுக்கு சில உடல் நலப் பிரச்சினைகள் உண்டாவதாக -தொழில்துறை சார்ந்த சுகாதார ஸ்தாபனங்கள் Industrial Health Organisations கருத்துரைத்துள்ளன. கட்மியம் துகள்களை சுவாசிப்பதால் அடிக்கடி சுவாசப்பை சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம். குளிரோடு காய்ச்சல், தலைவலி, முதுகுவலி என்பவற்றோடு ஏற்படும்நோய் அடிக்கடி ஏற்படும். இது நாட்பட நாட்பட - ஒரு சிலருக்கு நிரந்தரமான சுவாசப்பை நோய்களை (TRACHEO BRONCHITIS, PNEMONITIS, PULMONARY OEDEMA) என்பவற்றைத் தரலாம். மேலும் ஒரு சிலர் காரணங்களில்லாத வயிற்றுவலி, வாந்தி, மூலத்தில் கடுமையான வலி, தலைச்சுற்று என்பவற்றாலும் பாதிக்கப்படுகின்றார்கள். ஒரு சிலரின் மணங்களை நுகரும் Smell தன்மை கட்மியம் நச்சூட்டலால் அறவே இல்லாமல் போய்விட்டதாக மருத்துவ ஆய்வுகள் கண்டறிந்துள்ளன. கட்மிய நச்சு சூழலில் பணிபுரிபவர்களுக்கு அதிஉயர் இரத்த அழுத்தம் இதயவியாதிகள் ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகம் என்று மருத்துவர் TVER தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். பொதுவாக மேற்கூறிய உபாதைகள் ஏற்பட்டாலும் சிறுநீரக அழற்சி, சிறுநீரில் அல்புமின் போதல், சிறுநீரக தொழில் இழப்பு, சிறுநீரகக் கற்கள் உற்பத்தியாதல், எலும்புநோய்கள், சிறுநீரக மற்றும் புரஸ்டேட், சுவாசப்பை புற்று நோய்களுக்கும் கட்மிய நச்சுப்பொருள் காரணம் என அறியப்பட்டுள்ளது. நகைத்தொழிலில் மட்டுமல்ல. நிக்கல்-கட்மியம் பற்றரி உற்பத்தி துத்தநாக பிரித்தெடுப்பு (Zinc Refinery) பிளாஸ்ரிக் பொருட்களுக்கு நிறமூட்டும் தொழில், பிவிசி பொருட்கள் உற்பத்தி, பீங்கான்களுக்கு நிறமூட்டும் தொழில் என்பவற்றில் கூட கட்மியம் உபயோகமாகின்றது.

இன்று வாழ்க்கை நடத்துவதற்காக அநேகர் - அபாயகரமான சூழ்நிலையில் தொழில்புரியவேண்டிய கட்டாய சூழ்நிலையில் இப்படி நச்சுப்பொருட்களோடு வாழ்க்கை நடத்தவேண்டியுள்ளது. தங்கம், தாமிரம், வெள்ளி, துத்தநாகம், இரும்பு, உருக்கு சம்பந்தப்பட்ட தொழில்களில் -இப்படியான நச்சுப்பொருட்கள் உதாரணமாக கட்மியம், செலனியம் (Selenium), பலடியம் (Paladium), பொருட்களோடு அந்த சூழ்நிலையில் பணிபுரிவது தவிர்க்கமுடியாதது. ஆனால், இத்தொழிலாளர்களின் உடல்நலம், மருத்துவநலம் என்பவற்றைப் பேணவேண்டியது அவர்களின் தொழில் தருநர்களின் கடமை என்று சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் கண்டிப்பாகக் கூறுகின்றது. இப்படியான தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களை பாதுகாப்பாக அமைத்தல், பாதுகாப்புக் கவசங்களையும் உடைகளையும் வழங்குதல், காற்றோட்டமான சூழ்நிலையை வைத்திருத்தல், சிரமமான மருத்துவ பரிசோதனை வசதி அளித்தல், பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கல் போன்றவற்றின் மூலம் தொழில் தருநர்கள் தமது கடமையைச் சரியாக செவ்வனே செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எந்தத் தொழிலிலும் ஆபத்துகள் இருக்கின்றன. ஆனால், ஆபத்துகள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ள தொழில்களில் தொழில் தருநர் மாத்திரமல்ல தொழிலாளர்களும் கவனம் எடுக்கவேண்டும்.




## தலையில் ஒன்றுமில்லை!

ஒரு பாடசாலையில் அறிவியல் பாடம் நடந்து கொண்டிருந்தது.

'மனித உடலில் ரத்த ஓட்டம்' என்பது பற்றி ஆசிரியர் மாணவர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்.

தான்நடத்திய பாடம் மாணவர்களுக்கு நன்றாக விளங்க வேண்டும் என்பதற்காக அவர், "நான் தலைகீழாக நின்றால் ரத்தம் என் தலைக்கு பாய்ந்து முகமெல்லாம் சிவப்பாகிவிடும். ஆனால், நான் நேராக நின்று கொண்டிருக்கும் போது ரத்தம் காலுக்கு வருவதில்லை. ஏன் தெரியுமா?" என்று கேட்டார்.

உடனே மாணவன் ஒருவன் எழுந்துநின்று "உங்கள் தலையைப் போல் கால் காலியாக இல்லாமல் இருப்பதே அதற்குக் காரணம்" என்றான்.

மாணவர்கள் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். ஆசிரியரின் முகம் கோபத்தால் சிவந்தது.

## குறும்பு!




## தண்ணீர் வரவேற்பு!



'ஏர்பஸ் ஏ380' என்ற சூப்பர் ஜம்போரி விமானம் முதன்முறையாக கடந்த வாரம் பாரிஸில் உள்ள சார்ல்ஸ் டி கால் விமான நிலையத்தை சென்றடைந்தது. அப்போது அதன் இரண்டு பக்கத்திலிருந்தும் தண்ணீர் பாய்ச்சி அடித்து அதற்கு அமோக வரவேற்பு வழங்கப்பட்டது.

## விசித்திர திரைப்பட நிகழ்வு!



அமெரிக்காவில், டிஸ்னி அனில் கிப்படரில் நடந்த 'பைன்டிங் நீமோ கார்ட்டூன் திரைப்பட சிறப்புக் காட்சியின்போது திரைப்படத்தின் நடிகர்கள் நடத்திய கலைநிகழ்வுகளில் ஒன்று இது.

## தத்துவம்

**தேன்:** இனிமையை உணர குடித்தேன். ஆயினும், தனிமையை உணர துடித்தேன்.

**வாசம்:** உயிரை மதித்து காற்றை உள்வாங்கல் சுவாசம். ஆனால், உயிரை மிதித்து காற்றாக மாறுதல் விசுவாசம்.

**ஓடம்:** இது தண்ணீருக்குள் இருந்தால் ஓடப்பயணம். ஆனால், வண்டிக்குள் இருந்தால் ஓடம் பயணம்.


**விரல்கள்:** வீணையை மீட்ட இவை அவசியம். ஆயினும் வீணே வாழ்க்கையை ஓட்ட இவை அநாவசியம்.

**பட்டம் :** என்னதான் இது உயரத்தில் பறந்தாலும். இதனால் ஒரு பட்டச் சான்றிதழைக் கூடப் பெறமுடியாது.


## சர்ச்சைக்குரிய கண்காட்சி!



அமெரிக்காவில் ரிச் மாண்ட் என்னுமிடத்தில் சர்ச்சைக்குரிய கலைக் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட கலைஞர்கள் ஆடைஎதுவும் இன்றி நிர்வாணமாகத் தமது உடல் முழுவதும் வர்ணத்தைப் பூசி பல்வேறு கோணங்களில் வலம் வந்தனர்.





## இதுதான் முதுமக்கள் தாழியா?

சென்னை கோட்டையில் உள்ள தமிழக அரசு அருங்காட்சியகத்தில் சர்வதேச அருங்காட்சி தினவிழா கொண்டாடப்பட்டது. விழாவினை முன்னிட்டு, ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உள்ள முதுமக்கள் தாழிகள் கொண்டு வரப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்தன. (அந்தக் காலத்தில் இறந்த முதியோர்களை ஒரு பெரிய பானைக்குள் வைத்து அப்படியே பூமிக்குள் புதைக்கும் பழக்கம் இருந்தது. அந்தப் பானைதான் முதுமக்கள் தாழி என்றழைக்கப்படுகிறது) அந்த முதுமக்கள் தாழியை, சிறுமி ஒருவர் ஆர்வமுடன் பார்வையிடுகிறார்.

## காய்கறி பழங்கள் மீன் சாப்பிட்டால் நுரையீரல் ஆரோக்கியமாக இருக்கும்

காய்கறிகள், பழங்கள் மற்றும் மீன் உணவுகளால் மனிதர்களுக்கு கிடைக்கும் நன்மை குறித்து போஸ்டனில் உள்ள ஹவார்ட் மருத்துவக்கல்லூரி ஆய்வு நடத்தியது. அப்போது மேற்கத்தைய உணவுகளை அதிகமாகச் சாப்பிடுபவர்களுக்கு நுரையீரல் நோய்கள் வரும் வாய்ப்பு 4.56 மடங்கு அதிகமாக இருந்தது. காய்கறிகள், பழங்கள் மீன்கள் ஆகியவற்றை தாராளமாக உணவில் சேர்த்துக்கொண்டவர்களுக்கு நுரையீரல் மற்றும் இருதயம் ஆரோக்கியமாக இருந்தது தெரியவந்தது.

காய்கறி மற்றும் பழங்களில் வைட்டமின் சி,ஈ ஆகியவையும் நோய் எதிர்ப்புப்பொருட்களும் அதிகமாக உள்ளன. மீன்களில் ஒமேகா–3 என்ற அமிலம் உள்ளது. இந்தப் பொருள்கள் நுரையீரலை ஆரோக்கியமாக மாற்றுகின்றன. அதேசமயம் மாமிச உணவுகளில் அதிகமாக இருக்கும் நைட்ரேட்டுகளால் உவாக்கப்படும் மூலக்கூறுகள் இரத்தத்தில் இருக்கும் சர்க்கரையின் அளவை அதிகரிக்கச்செய்கின்றன. இதனால், நுரையீரலின் இயக்கம் பாதிக்கப்படுகிறது என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.




## ஆயிரம் கர்ப்பிணிகள் ஒரே இடத்தில் கூடி சாதனை

தென்னாபிரிக்காவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கர்ப்பிணிகள் ஒரே இடத்தில் சாதனை படைத்துள்ளனர்.

தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் 'பார் யுவர் பேபி ஷோ' என்ற நிகழ்ச்சிக்கு ஓர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட கர்ப்பிணிகளை ஒரே இடத்தில் திரட்டி சாதனை படைப்பதே இந்த அமைப்பின் நோக்கம். இதற்கான ஏற்பாடுகள் கடந்த சிலநாட்களாகச் செய்யப்பட்டு வந்தன. ஆனால், எதிர்பார்த்ததை விட அதிகமாக ஆயிரத்து 146 கர்ப்பிணிகள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு விழா ஏற்பாட்டாளர்களை திக்குமுக்காடச் செய்துவிட்டனர்.



இந்நிகழ்ச்சியின் அமைப்பாளர் ப்ரோஜெனி பாதெர் கூறுகையில், ''ஏராளமான கர்ப்பிணிகளை ஒரே இடத்தில் ஒன்று திரட்டுவதால் ஏதாவது பாதிப்பு ஏற்படுமோ எனக் கவலைப்பட்டோம். நல்லவேளையாக இதில் கலந்துகொண்ட எவருக்கும் பிரசவ வலி ஏற்படவில்லை. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நிகழ்ச்சி நடக்கும் இடத்துக்கு அருகில் உள்ள மருத்துவமனைகளில் போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

இதுபோன்ற நிகழ்ச்சியால் உலக சாதனை படைத்ததை நினைக்கும்போது மகிழ்ச்சியாக உள்ளது. உண்மையில் இதில் பங்கேற்பதற்காக இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கர்ப்பிணிகள் தங்களது பெயர்களைப் பதிவுசெய்திருந்தனர். ஆனால், அதில் சிலருக்கு நிகழ்ச்சி நடப்பதற்கு முன்னதாகவே குழந்தை பிறந்துவிட்டது. இன்னும் பலர் பிரசவ வலி ஏற்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுவிட்டனர். இதனால், எண்ணிக்கை ஆயிரத்து 146 ஆகக் குறைந்துவிட்டது'' என்றார்.

இதில் பங்கேற்ற மேரி திக்லேடி என்ற கர்ப்பிணிப்பெண் கூறுகையில், ''என்னைப் போலவே ஏராளமான கர்ப்பிணிகள் இங்கு ஒன்று கூடியுள்ளனர். இதைப்பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இன்னும் சிலநாட்களில் அழகிய குழந்தைக்கு அம்மாவாகப்போகின்றேன். இதுபோன்ற நிகழ்ச்சியில் பங்கேற்காமல் போயிருந்தால் மிகவும் வருத்தப்பட்டு இருப்பேன்'' என கண்களில் நீர் வடிய உணர்ச்சிப் பெருக்குடன் பேசினார்.

இந்த வித்தியாசமான நிகழ்ச்சி கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெறுவதற்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

டேர்பன், கேப் டவுன் போன்ற தென்னாபிரிக்க நகரங்களிலும் இதேபோல கர்ப்பிணிகளை ஒரே இடத்தில் திரட்டத் திட்டமிட்டுள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். ஜோகன்னர்ஸ்பர்க் சாதனையை கேப் டவுன், டேர்பன் நகரங்கள் முறியடிக்குமா என்பதை அறிய இன்னும் சில மாதங்கள் காத்திருக்கவேண்டும்.

சென்னையில் அனலாய் கொதிக்கும் வெயிலுக்கு மனிதர்களே வாடி வதங்கும்போது, பறவைகள் எம்மாத்திரம். வெயிலில் சுற்றித்திரிந்த காக்கைக்கு அலுவலகம் ஒன்றின் 'ஏசி'யில் இருந்து கசியும் தண்ணீர்தான் குளிர்பானமாக உள்ளதுபோலும்.



''நேத்து உன்னோட கல்யாண நாளாச்சே உன் கணவருக்கு பிடிச்ச மாதிரி நீ என்ன செய்தே?''

''நாள் பூரா மௌன விரதம் இருந்தேன்!''





''தவணை முறையில் கூட ஆபரேசனுக்குரிய ஒரு லட்சத்தைக் கட்டலாமா டாக்டர்?''

''கட்டலாம். ஆனால், மாதம் 5000 வீதம் இருபது தவணை முடிந்ததும்தான் ஆபரேசன் ஆரம்பிப்பேன்''

''சீட்டுக் கம்பெனிமாதிரி ஆயிடாதே''

''சேச்சே...கணக்கைகச்சிதமா முடிச்சிடுவேன்''

நீ என்னை
நிலவாக நினைக்காதே!
நான் தேய்ந்து
விடுவேன்
மலராக
நினைக்காதே!
நான்
உதிர்ந்திடுவேன்
நீ என்னை உன்
நிழலாக நினைத்தால்
என்றும் நான்
உன்னுடன் இருப்பேன்.



# இது தேவையா?



இந்தியாவில் எத்தனையோபிரச்சினைகள் உள்ளன. இப்போது புதிதாக ஒரு பிரச்சினை தோன்றிஇருக்கிறது. அது.. பள்ளிக்கூடங்களில் செக்ஸ் கல்வி வேண்டுமா? கூடாதா? என்பதுதான்.

உலகில் எச்.ஐ.வி. என்னும் நோய்க்கிருமியால் பாதிக்கப்பட்டுள்ள எய்ட்ஸ் நோயாளிகள் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா அபாயகரமான இடத்தில் உள்ளது, இதே நிலை நீடித்தால் வருங்காலத்தில் நிலைமை மிகவும் மோசமாகிவிடும் என்ற அச்சம் இந்திய அரசுக்கு மட்டும் இன்றி சமூக ஆர்வலர்களுக்கும் இருக்கிறது.

பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே 'டேட்டிங்', மனதுக்கு பிடித்தவருடன் திருமணம், பிடிக்கவில்லை என்றால் ஆடையை மாற்றுவதுபோல் விவாகரத்துச் செய்துவிட்டு இன்னொருவரை மணம்புரிவது என்ற (அ) நாகரிக கலாசாரத்தில் ஊறித்திளைக்கும் மேற்கத்திய நாடுகளில் கூட எய்ட்ஸ் போன்ற பாலியல் நோய்களின் தாக்கம் அதிகம் இல்லை. ஆனால், ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயரிய கலாசார பண்பாடு மிகுந்த இந்தியாவில் எய்ட்ஸ் நோய் அதிகளவில் பரவியிருப்பது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

செக்ஸ் பற்றிய போதிய அறிவின்மை இல்லாததே இதற்குக் காரணம் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

எனவே, பள்ளிக்கூடங்களில் செக்ஸ் கல்வியை அறிமுகப்படுத்தவேண்டும் என்றும் பள்ளிப் பருவத்திலேயே ஆண்-பெண் உடற்கூறு, செக்ஸ் என்றால் என்ன? பாதுகாப்பான செக்ஸ் உறவுமுறை, எய்ட்ஸ் போன்ற பால்வினை நோய்களைத் தடுப்பது எப்படி? என்பன போன்ற விவரங்களை மாணவர்களுக்கு சொல்லிக்கொடுக்கவேண்டும் என்றும் ஒருசாரார் கூறுகிறார்கள்.

செக்ஸ் என்பது ஆபாசமோ, அருவருப்போ அல்ல என்றும் இந்த விவரங்களை சிறுவயதிலேயே சொல்லிக்கொடுப்பதன் மூலம் பாதுகாப்பான செக்ஸ், எய்ட்ஸ்போன்ற பால்வினை நோய்கள் ஆகியவை பற்றிய ஒரு தெளிவான கருத்தை அவர்கள் மனதில் ஏற்படுத்தமுடியும் என்றும் இதன்மூலம் எதிர்கால சந்ததியினரை நல்லவர்களாக உருவாக்கமுடியும் என்றும் செக்ஸ் கல்வியை ஆதரிப்பவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால், இந்திய பள்ளிக்கூடங்களில் செக்ஸ் கல்வியை அறிமுகப்படுத்துவதற்கு கடுமையான எதிர்ப்பும் கிளம்பியிருக்கிறது.

''ஏற்கனவே பாலியல் உணர்வுகளைத் தூண்டும் பெரும்பாலான சினிமாப் படங்களையும் டி.வி.சேனல்களையும் பார்த்து பையன்கள் கெட்டுப்போய் இருக்கிறார்கள். அதுபோதாதென்று பள்ளிக்கூடத்திலேயும் செக்ஸ் பற்றி சொல்லிக் கொடுத்தால் உருப்பட்டமாதிரிதான்'' என்பது செக்ஸ் கல்வியை எதிர்ப்பவர்களின் வாதம்.

செக்ஸ் என்பதும், அது தொடர்பான விஷயங்களும் ஆண்-பெண் ஆகிய இரு பாலாரிடையேயும் ஒருவித ஈர்ப்புச் சக்தியை ஏற்படுத்துபவை என்பதால் அதைப்பற்றி பகிரங்கமாக பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுத்தால் சாதகத்தை விட பாதகமான விளைவுகள்தான் அதிகம் ஏற்படும் என்றும் அவர்கள் எச்சரிக்கிறார்கள்.

செக்ஸ் கல்வி விடலைப்பருவ மாணவ-மாணவிகளிடையே தேவையில்லாத ஓர் ஆர்வத்தையும் செக்ஸ் ரீதியிலான பரஸ்பர ஈர்ப்பையும் ஏற்படுத்துவதோடு, பரிசோதனையாக அதைச் செய்துபார்க்கவேண்டும் என்ற உந்துதலையும் அவர்கள் மனதில் ஏற்படுத்தும் என்பதும் செக்ஸ் கல்வி எதிர்ப்பாளர்களின் வாதம். இதுபஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு விசிறியால் வீசுவதைப் போன்ற ஆபத்தான செயல் என்றும் அவர்கள் எச்சரிக்கிறார்கள்.

செக்ஸ் கல்வி இல்லாததால் நாட்டில் எய்ட்ஸும் பால்வினை நோய்களும் பெருகிவிட்டன என்பதை அவர்கள் ஏற்கத் தயாராக இல்லை. ஓரளவு படிப்பறிவுள்ளவர்களிடம் மேற்கண்ட நோய்களைப் பற்றிய எச்சரிக்கை உணர்வு இருப்பதால் அவர்கள் பாதுகாப்பான செக்ஸ் உறவையே மேற்கொள்கிறார்கள். எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்படுபவர்களில் பெரும்பாலானவர்கள் படிப்பறிவு இல்லாதவர்கள் என்பதால், பொதுவான படிப்பறிவை அனைவருக்கும் ஏற்படுத்தினாலேபோதும் அந்த நோயை படிப்படியாக ஒழித்துவிடலாம் என்றும் செக்ஸ் கல்வி எதிர்ப்பாளர்கள் கூறுகிறார்கள்.

பிள்ளைகளுடன் அமர்ந்து பார்க்கமுடியாத ஆபாச, அருவருப்பான அசைவுகளுடன் கூடிய சினிமாப்படங்கள் வரும் இன்றைய காலகட்டத்தில் பள்ளிக்கூடத்திலேயே செக்ஸைப்பற்றி சொல்லிக்கொடுத்தால் நிலைமை என்னவாகும்? என்று பெற்றோர் தரப்பிலும் கவலை உள்ளது. பள்ளியறையில் 'பள்ளியறை' விஷயங்களை சொல்லிக்கொடுப்பதா? பள்ளிக்கூடத்துக்குப் பிள்ளைகளை அனுப்பிவைத்துவிட்டு நாங்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்கவேண்டுமா? என்றும் பெற்றோர் தரப்பில் கேள்வி எழுப்பப்படுகிறது.

இப்படியாக ஒருபுறம் ஆதரவு; மற்றொரு புறம் எதிர்ப்பு என்ற நிலையில் செக்ஸ் கல்வித்திட்டம் இந்தியாவில் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கிறது.

# தரை இறங்கும் விமானங்கள்

சிறுகதை

ச. முருகானந்தன்




கட்டுநாயக்க விமானநிலையம் நெருங்கிவிட்டதாகவும் இன்னும் சில நிமிடங்களில் தரையிறங்கப்போவதாகவும் விமானப்பணிப்பெண் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தாள். பாதுகாப்பு 'பெல்ட்டை மார்பைச் சுற்றி அணிந்துகொண்டபோது என்னை அறியாமலே மனதில் பயம் கவ்விக்கொண்டது. அண்மையில் விமானநிலையப் பகுதியிலுள்ள விமானப்படையினரின் முகாம், தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளான செய்தியின் நினைவுகள் ஏற்படுத்திய பயம்தான் காரணம்.

கடந்த மூன்று ஆண்டுகள் குவைத் நாட்டில் பணிப்பெண்ணாகப் பணியாற்றிவிட்டு, மனச்சுமைகளுடனும் இறுதிநேரத்தில் கிடைத்த பணம் மற்றும் பொருள்களுடனும் தாய்மண்ணிற்குத் திரும்பிக்கொண்டிருக்கிறேன்.

விமானம் தாளப் பறந்து ஓடுபாதையில் ஓடி நின்றபோது சிறு குலுக்கல் தெரிந்தது. நான் பயந்தது போலன்றி விமானநிலையம் அமைதியாக இருந்தது. விமானத்திலிருந்து இறங்கி சுங்கப்பரிசோதனையை முடித்துக்கொண்டு சிறு இலஞ்சத்தையும் தாரைவார்த்துவிட்டு வெளியே வந்தேன். வந்தவர்களை வரவேற்க பலரும் கூடியிருந்தனர். எனது கண்களை நாலாபுறமும் சுழலவிட்டேன். எனது கணவரின் தலைக்கறுப்பு எங்கும் தெரியவில்லை. ஒருபக்கத்திலிருந்து மறுமுனை வரை தேடினேன். இல்லை. மனதில் ஏமாற்றமும் கோபமும் ஒருவித பயமும் [illegible]டிப்பார்த்தன. 'சீ இந்த [illegible]னுசன் எங்கே போச்சுது?...ஏன் வரவில்லை. நேற்றுக் கூட தொலைபேசியில் சொல்லியிருந்தேனே! ...ம்...பொறுப்பில்லாத மனுசன்.

இவர் பொறுப்பாக உழைத்து குடும்பத்தைப் பார்த்திருந்தால் நான் ஏன் வெளிநாடுபோய் இவ்வளவு கஷ்ரங்களை அனுபவித்திருக்கவேண்டும்? காதலித்தபோது கண்ணுக்குப் புலப்படாதிருந்த கெட்ட குணங்களெல்லாம் திருமணத்தின் பின்னர் அரங்கிற்கு வந்தபோது ஏமாற்றத்தில் குறுகிப்போனேன். தனியார் போக்குவரத்து பஸ் ஒன்றில் நடத்துநராக இருந்தவரை பயணங்களின்போது சந்தித்தேன். வசீகரமாகவும் வாட்டசாட்டமாகவும் இருந்தார். பஸ்ஸில் அடிக்கடி சந்தித்துப் [illegible]ழகநேரிட்டபோது பருவ உந்துதலில் அது [illegible]தலாக மலர்ந்தது. பெற்றோரின் எதிர்ப்பையும் புறந்தள்ளி அவரைக் கைப்பிடித்தேன்.

எனது அவசர முடிவு தப்பானது என்பதைப் புரிந்து கொள்ள அதிக காலம் தேவைப்படவில்லை. மோகம் முப்பதுநாள், ஆசை அறுபது நாள் என்ற எல்லையைத் தாண்ட முன்னரே இவரது சுயரூபம் வெளிப்பட்டது. நன்றாகக் குடிவகை பாவிப்பார். சிகரெட் பாவனைக்கும் குறைவில்லை. இதுபோதாதென்று வேலைக்கு ஒழுங்காகப் போவதில்லை. மலைபோல் உயர்ந்துவிட்ட வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கமுடியாது திணறியபோது அன்பாக எடுத்துரைத்து அவரைத் திருத்தமுயன்றேன். அவர் கேட்கவில்லை. புத்திசொல்லும் என்னோடு சண்டைக்கு வந்தார். நானும் பொறுமையுடன் கடவுளை வேண்டியபடி அவரைத் திருத்தமுயன்று தோற்றுப்போய் சலிப்புற்றேன். கடன்காரர்கள் நெருக்கினார்கள். அடுத்தடுத்து இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். பணத்தேவையும் அதிகரித்தது. நானும் வீட்டில் தையல்வேலை, கோழி, ஆடு, மாடு வளர்ப்பு என்று உழைத்து சிரமப்பட்டு சிலவருடங்களை ஓட்டினேன். பிள்ளைகளும் வளர்ந்து படிக்கத் தொடங்கியதும் செலவுகள் இன்னமும் அதிகரித்தமையினால் கடன்பழு அதிகரித்தது. சில சமயங்களில் இவர் என்னிடமிருந்தும் பணத்தைப் பிடுங்கிக்கொண்டுபோய் குடிப்பார். மறுத்தால் சண்டை! பலநாட்கள் அடிதடியில் முடியும். ஆணாதிக்க சமுதாயத்தின் பாரம்பரியக் கட்டமைப்பில்நான் சீரழிந்து சொல்லொணா வேதனைகளை தினமும் அனுபவித்தேன். பிள்ளைகளும் பயந்து பயந்து வளர்ந்தனர். அவர்களது உளப் பாதிப்பினால் அவர்களுடைய விருத்தியும் பாதிப்புக்குள்ளானது.

இந்தநிலையில் குடும்பத்தை அதிலிருந்து மீட்டு வாழ்க்கை ஓடத்தைச் செலுத்த வழிதேடினேன். எமது கிராமத்தைச் சேர்ந்த சில பெண்கள் அரபுநாடுகளுக்கு வீட்டுப்பணிப்பெண்களாகச் சென்று கணிசமாக உழைத்து அனுப்பிக்கொண்டிருந்தார்கள். எனது மனதிலும் ஆசை தொட்டது. இவரிடம் கேட்டேன். மறுக்கவில்லை. எனினும், என்னைப் பிரிந்திருப்பதில் தான் கவலை என்று கண்கலங்கினார். எவ்வளவுதான் பொறுப்பற்றவராக இருந்தாலும் சமயங்களில் இவர் காட்டும் அன்பு என் பெண் மனதை இளகவைத்துவிடும்.

அம்மா, அண்ணாவின் குடும்பத்தோடு இருந்தார். அண்ணாவுடன் கதைத்து அவவை என்னுடன் அழைத்து பிள்ளைகளை அவவுடைய பொறுப்பில் விட்டுவிட்டு வீட்டுப் பணிப்பெண்ணாக குவைத் புறப்பட்டேன். அதிஷ்டவசமாக நான் முகவர்களால் ஏமாற்றப்படவில்லை. குவைத் சென்று ஓர் அராபியர் வீட்டில் பணிப்பெண்ணாக வேலை செய்தேன். குவைத் சென்றபின்னர் தான் பணிப்பெண்ணாக வேலை செய்வதிலுள்ள கஷ்டம் புரிந்தது. அளவுக்கு மிஞ்சிய வேலைகள். எஜமானிகள் இராட்சசிகளாக இருந்தார்கள். அத்தோடு வேறுவிதமான தொல்லைகளையும் சமாளிக்க வேண்டியிருந்தது. எனினும், குடும்பத்தின் உயர்வுக்காக அனைத்தையும் பல்லைக்கடித்துக்கொண்டு பொறுத்துக்கொண்டேன்.

விமானநிலையத்தில் இன்னொரு விமானம் வந்திறங்கவே சற்று சலசலப்பு ஏற்பட்டது. ஏற்கனவே ஒலிபெருக்கி மூலம் அழைத்தும் என் கணவர் வராதமையினால் என்ன செய்வதென்று யோசித்துக்கொண்டிருந்தேன். இப்போது பயணிகள் வருகையின் சலசலப்பில் நினைவுகள் அறுபட மீண்டும் எழுந்து வந்து கணவரின் முகத்தைத் தேடினேன். இல்லை. மனதில் சோர்வும் எரிச்சலும் ஏற்பட்டன.

நான் நீண்டநேரம் தரித்து நிற்பதையும் தவித்துக்கொண்டிருப்பதையும் கண்ணுற்ற ஒருவன் எனதருகே வந்தான். "என்ன யோசிக்கிறியள்? எங்கே போகவேணும்? ஆட்டோவில் போவமா? ...சென்றிக்கு அங்காலை நிற்குது...வாறியளா?" என்று கேட்டான். முன்பின் தெரியாத புதியவன். அதுவும் ஆண். மனதில் நம்பிக்கையீனமும் பயமும் தோன்றியது. ..."இவர் வருவார்...வான் கொண்டு வருவார்..." என்று பதிலளித்தேன்.

இரவுநேரம் இல்லாவிட்டால் பஸ்ஸில் சென்று, கொழும்பில் தெரிந்தவர்கள் வீட்டில் தங்கி, பின்னர் பயணத்தைத் தொடரலாம். மனதிலும் இருள் கவ்வியது.

நான் ஏன் எல்லாத்தையும் உதறிப்போட்டு வெளிநாடு போனனான்? அதுவும் தனிய...அந்த நாளையில படிக்கிற காலத்தில ரியூசனுக்குப் போய்வாறதெண்டாலும் அப்பா தனிய விடமாட்டார். அண்ணா அல்லது அவர் தான் சைக்கிளிலே ஏத்திக்கொண்டு போவினம். எப்படியெல்லாம் கண்டிப்புடன் செல்லமாக பக்குவமாக பாதுகாப்பாக அம்மா வளர்த்தவ...நினைக்கும் போதே நெஞ்சு பொருமுகிறது. ...நான் என்ர பிள்ளையளை பக்கத்தில இருந்து வழிநடத்தாமல் வேலைக்காக வெளிநாட்டுக்கு வந்திட்டன்....ஆனா எனக்கு வந்தவர் இன்னும் பொறுப்பில்லாமல் ...ம்...என்னுடைய எல்லா உணர்வுகளும் நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் பொய்யாகி வெறும் கனவாகிப்போகும்போது வாழ்க்கை வெறுத்துப்போகிறது. மனநிறைவும் சந்தோஷமும் கிடைக்கும் என்றால் அதற்காக எவ்வளவு கடினவேலைகளையும் பொறுத்துக்கொள்ளலாம்...ஆனால்...

எத்தனையோ பேரைக் கூட்டிச்செல்ல வந்தவர்கள் அவர்களைக் கட்டியணைத்து வரவேற்று கூட்டிச்செல்லும் போது மனது கனக்கிறது. இல்வாழ்வின் இடைவெளிகள், இடருறுத்தல்களால் நீளநீள மனம் மௌனத்துள் அழுதழுது வெதும்பியிருந்த நாட்கள் எத்தனை? மலராக வாழ்வில் நுழைந்தவர் முள்ளாக முகம் காட்டி மனதைத் தைத்தபோது மெல்லமெல்ல உடைந்து போனேன். இளமையில் முகிழ்த்த காதல் என்பதும் வெறும் கானல்நீரோ? இல்வாழ்வில் மறுபடியும் அதைத் தேடித்தேடி அழுதேன். அழுதழுது தேடினேன். அவை உலர்ந்து பழுத்து வீழ்ந்து சருகாகி உக்கித் தீயில் வெந்து கருகி...ஓ என்னால் மட்டும் ஏன் காதலை மறந்து அவரை வெறுக்க முடியவில்லை. பெண்மனம் என்பது இதுதானோ?

காதலர், கணவர் என்ற அன்பு எல்லாவற்றையும் மறந்து மன்னிக்கவைத்ததா? அல்லது அனைத்தையுமே மறைத்துவிட்டதா? எல்லா நினைவுகளும் ஆற்றில் எறிந்த கல்போல அடங்கிக்கிடக்கின்றன. அந்நினைவின் உறுத்தல்கள் எப்போதாவது மேலெழும்போது நான் கலங்கிப்போவேன். எனது கண்ணீர் எல்லாம் என் தலையணைக்குத்தான் தெரியும். கடந்த காலங்கள் என்னைப் பிடித்து வைத்திருக்கிறதா அல்லது நான் அதைப் பிடித்து வைத்திருக்கிறேனோ? ...சிரித்தும் பேசியும் களித்த வாழ்க்கை நாட்கள் ஒடுங்கி, வாழ்வின் வசந்தங்கள் கேள்விக்குறியாகின. மனதின் அடையாளங்களை மறைத்து, முகத்தில் புன்னகையை அப்பியவளாக நடமாடிக்கொண்டிருந்தேன். அந்தச் சூழலை விட்டு வெளியேறி குவைத் புறப்பட்டபோது என்ர மனதில் ஏதோ ஒரு விடுதலை உணர்வு பிள்ளைகளின் பிரிவுக் கவலை மத்தியிலும் தோன்றியது.

ஆனால், குவைத் வந்ததும் தான் தெரிந்தது, சிங்கத்தின் வாயில் இருந்து தப்பி இன்னொரு சிங்கத்தின் குகைக்கு வந்துவிட்ட நிலைமை. ஊரில் வீட்டில் ஆண்சிங்கத்திற்குப் பதிலாக இங்கு பெண் சிங்கம். வீட்டின் சொந்தக்காரி அராபியப் பெண். மனிதாபிமானம் சிறிதுமற்றவளாக இருந்தாள். மலையக வேலைக்காரச் சிறார்கள், கொழும்பு வீடுகளில் அனுபவிக்கும் கஷ்ரங்களைப் போல் பலமடங்கு கஷ்ரங்கள்.

நான் யோசித்துக்கொண்டிருக்கும்போது எனது அருகில் இன்னொரு பெண் வந்து புன்னகைத்தாள். நிமிர்ந்து நோக்கினேன். அவளும் மத்திய கிழக்கிலிருந்து வந்திருக்கவேண்டும் என்று தோன்றியது. நானும் சிரித்தேன். சிங்களமொழியில் என்னோடு உரையாடினாள். நான் கொட்டகலையில் பிறந்து வளர்ந்ததால் சிங்களம் நன்றாகத் தெரியும். அவளும் என்னைப் போலவே அழைத்துச்செல்ல யாரும் வராதமையினால் தவித்துக்கொண்டிருந்தாள்.

விமான நிலையக் காரில் செல்லலாம். கட்டணம் அதிகம் என்பதால் தயங்கினோம். இதற்கிடையில் முதலில் என்னிடம் வந்து விசாரித்த ஆட்டோ சாரதியும் இன்னொருவனும் எமதருகே வந்தார்கள். தாம் அதிக கட்டணம் அறவிடமாட்டோம் என்று கூறினர். சிங்களப் பெண் நுகேகொடையைச் சேர்ந்தவள். இருவரும் நுகேகொடைக்கு சென்று இரவு அவளது வீட்டில் தங்கிவிட்டு மறுநாள் நான் கொட்டக்கலைக்குச் செல்லலாம் என்று முடிவுசெய்தோம். மனதில் ஆட்டோ சாரதி பற்றி சிறுபயம் இருந்தாலும் அவனது முகம் அமைதியாக சாந்தமாக இருந்தமையினால் நம்பிக்கை ஏற்பட்டது.

ஆட்டோவில் ஏறிப் புறப்பட்டோம். சாரதியின் சினேகிதனும் கூட வந்தான். ஆட்டோ நீர்கொழும்பு - கொழும்பு வீதியை நெருங்கியபோது நின்றுவிட்டது. சாரதி ஸ்ராட் செய்யமுயற்சித்தான். அசையவில்லை. எனது மனதில் சிறிது பயம் கவ்வியது. பாசாங்கு பண்ணுகிறார்களோ?

நாம் பயந்ததுபோலவே நடந்துவிட்டது. எம்மை இறங்கச் சொல்லிவிட்டு கையிலிருந்த முக்கியமான சிறுபைகளையும் பறித்துக்கொண்டு ஆட்டோ மறைந்தது. கத்தியைக் காட்டியபடியால் என்னால்போராட முடியவில்லை. எனினும் சிங்களப்பெண் சிறிதுபோராடித் தோற்றுத் தரையில் வீழ்த்தப்பட்டாள். பதட்டத்திலும் பயத்திலும் நாம் ஆட்டோவின் இலக்கத்தைக்கூட கவனிக்கமுடியவில்லை. நாம் வாங்கிவந்த பொருட்கள், நகைகள், கடைசிநேரம் கிடைத்த தொகைப்பணம் யாவுமே ஒருநொடியில் பறிபோய்விட்டன. சிங்களப்பெண் வாய்விட்டே கதறினாள். எனக்கு நெஞ்சு விறைத்து, உடல் படபடத்து, கண்கள் பெருக்கெடுத்தன. மீண்டும் விமானநிலையம் வரை நடந்துசென்று எமக்கு ஏற்பட்டுவிட்ட அவலத்தைக் கூறினோம். விமானநிலையப் பொலிஸார் எமது முறைப்பாட்டைப் பதிவுசெய்தனர். "முட்டாள்தனமாக நடந்திருக்கிறீர்களே...' என அனுதாபத்துடன் கூறினார்கள். 'நம்பர்கூட இல்லை...இனிப்பிடிப்பது கஷ்டம். வீதித்தடை பொலிஸுக்குத் தகவல் கொடுக்கிறோம். உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் கிடைக்கும்..." என்றார்.

பணம் என்ற ஒரே நோக்கத்திற்காக வெளிநாடு சென்று இத்தனை இன்னல்களை அனுபவித்து, உழைத்த பணத்தை கொள்ளையர்களிடம் பறிகொடுத்துவிட்ட வேதனையில் துடிதுடித்தேன். குவைத் புறப்படும்போது கணவரது பெயரிலும் எனது பெயரிலுமாக கூட்டுக்கணக்கு ஒன்றை வங்கியில் ஆரம்பித்துவிட்டு வந்து, மாதாமாதம் பணத்தை அங்கு அனுப்பினேன். ஆனால், இவர் பணத்தை எடுத்து கண்டபடி செலவழிக்கிறார் என்று அம்மா அறிவித்ததால் பின்னர் பணத்தை மட்டுப்படுத்தியே அனுப்பினேன். மீதியைக் குவைத்திலேயே சேமித்து, இப்பொழுது வரும்போது தான்

(27ஆம் பக்கம் பார்க்க)






## குத்துப் பாட்

தமிழில் வாய்ப்பில்லாமல் இந்தியிலும், தெலுங்கிலும் உலா வந்து
அணுகிய பலரும் அவர் கேட்கும் சம்பளத்தால் பின் வாங்கி வேறு ந
கூட்டம்', 'சில்லுன்னு ஒரு காதல்' என சில படங்களில் நடித்து தமி
யும் மீறும் காதல் பார்வை, வீணையையும் விஞ்சும் குரல் நாதம் எ
ரசிகர்களைக் கவர்ந்தவர் பூமிகா. இடையில் விஜய்யுடன் இணை
படுத்தும் நடிப்பு நல்ல நடிகை பூமிகா என்ற பெயரை அவ
போட்டு வந்த பூமிகா, இந்தியிலும், தெலுங்கிலும் கிள
என்கிற தனது உண்மையான பெயரில் களம் கண்
அதைப் பார்த்தவர்கள் அடடா, குத்துப் பாட்டு
ஆட வாறீங்களா? என்று அணுகியுள்ளனர்.
மிரண்டு போனார்களாம் தயாரிப்பாளர்க
அதுதவிர வந்து போகும் செலவு என அ
இவ்வளவா? என்று மலைத்துப் போன
துக்கு ஒரு நாயகிக்கு கொடுக்கும் தெ
என்று தங்களுக்குள் புலம்பிக் கொ
தயாரிப்பாளர்கள். ஆனால் இதுகு
படாமல் இப்போது தெலுங்கில்
எடுத்து வருகிறாராம் பூமிகா.

எனது படங்களில் முடி
யாரையும் காயப்படுத்தாது
முகத்தைக் காட்டாத காம்னா 'ம
அவருக்கேற்ற ரோமியோ கேரக்டர்.
இயக்கியுள்ளார். முக்கால்வாசிப் படத்
காம்னா, ஜீவன், தமிழ்வாணன் ஆகியோர்.
நடிப்பது குறித்து பலரும் கேட்கிறார்கள். கவ
உடலின் அழகைக் காட்டி நடிப்பதில் என்ன தவ
பேன். அதேசமயம் அதில் ஆபாசம் இருக்காது. கவ
மாட்டேன். எனது கிளாமர்
யாரையும் காயப்
படுத்தாது.

## தமிழச்சி முமைத்கான்

தமிழ் சினிமாவில் கிளாமரில் பிரளயத்தைக் கிளப்பி வரும் முமைத்கான் வாயில் தமிழ் படு போடு போடுகிறதாம். கேட்டால் நான் பச்சைத் தமிழச்சி என்று படுதெம்பாக கூறுகிறாராம் முமைத்கான். தமிழ் சினிமாவில் அந்தக் காலத்தில் இருந்து வந்த ஜோதிலட்சுமி, சில்க் ஸ்மிதா, அனுராதா போன்றோரின் காலம் இப்போது இல்லை. ஆனால் இது புதிய தலைமுறையாயிற்றே. இதனால் வித்தியாசமான ரூபத்தில் இப்போது கிளாமர் ஆட்டங்கள் கொலிவுட்டில் கொடி கட்டிப் பறக்கின்றன. முதலில் மும்தாஜ், பிறகு ரகஸ்யா, அப்புறம் அபிநயஸ்ரீ என்று பட்டையைக் கிளப்பிக்கொண்டிருந்தவர்களுக்கு மத்தியில் இப்போது முமைத்கானின் கொடி மடமடவென ஏறிக்கொண்டிருக்கிறது. அர்ஜூனுடன் 'மருதமலை' படத்தில் ஒரு குத்துப் பாட்டில் ஆடியிருக்கிறார் முமைத்கான். இதுவரை இல்லாத அளவுக்கு கிளாமரில் கரை புரண்டோடியிருக்கிறாராம் இப்பாட்டில்.



## பொல்லாதவ

'திருடா திருடி'க்கு பிறகு 'பொ
காமெடியில் வெளுத்து கட்டுகி
கருணாஸும். கூடவே சந்தான
நம்மகிட்ட மடங்கிடும்ல' என்று
கருணாஸும், அவனை கலாய்க்
வெளுத்துக் கட்டியிருக்காங்கள
ஹூட்டியில் தியேட்டரே குலுங்
வெற்றிமாறன். கருணாசுக்கும்,
நன்றாக 'ஒக்அவுட்' ஆகிறது. இ
பரபரப்பாகப் பேசப்படும் என்



'பிரிவோம் சந்திப்போம்' சேரன் - முகர்ஜி

## மலையாளி மு

சுத்தமான மலையாள நடிகையாகிவிட்டார் கமலினி முகர்ஜி. கொல்கத்தாவிலி
மேனன் கூட்டி வந்து கமலுடன் 'வேட்டையாடு விளையாடு' படத்தில் நடிக்க
மலையாளத்துக்கு அதிக முக்கியத்துவம் தர ஆரம்பித்துள்ளாராம். நடிக்க வந்த
இணைந்து நடித்ததால் பெரும் எதிர்பார்ப்புக்குள்ளானார் கமலினி. பிரமதம் என்
கினார். ஆனால், அடுத்தடுத்து தமிழில் அவருக்குப் படங்கள்தான் வரவில்லை.
யாக நடிக்கும் 'பிரிவோம் சந்திப்போம்' பட வாய்ப்பு வந்தது. ஆனாலும் இந்தப்
என்றே சந்தேகமாக உள்ளது. இந்த நிலையில்தான் மலையாளத்தில் கமலினி ந
இதையடுத்து கமலினிக்கு மலையாளத்தில் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. மேலு
வாய்ப்பு தேடி வந்துள்ளதாம். தமிழில் இலவு காத்த கிளி போல காத்துக்கிடப்ப
வருகிற வாய்ப்புகளில் நடிக்கலாமே என்ற முடிவுக்கு வந்துள்ளாராம் கமலினி.
யாளத்துக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்துள்ளாராம் கமலினி. த
நடிப்பாராம். அப்ப இனிமேல் கமலினியை, கமலையாளினி என்றே கூப்பிடலா

## ...டுக்கு 9 லட்சம்...

...ம் உலா வந்து கொண்டிருக்கும் பூமிகாவை ஒரு பாட்டுக்கு ஆட வைக்க முயன்று
...வாங்கி வேறு நடிகைகள் பக்கம் பார்வையைத் திருப்பி வருகின்றனராம். 'ரோஜாக்
...ில் நடித்து தமிழ் ரசிகர்களை குளிரவைத்த பூமிகா. பூவினும் மெல்லிய தேகம், புயலை
...ம் குரல் நாதம் என ரோஜாக் கூட்டத்திலும், 'சில்லுன்னு ஒரு காதல்' படத்திலும்
...ஜய்யுடன் இணைந்து நடித்த 'பத்ரி'யில் அவரது பவித்ரமான காதலை வெளிப்
... பெயரை அவருக்கு வாங்கிக் கொடுத்தது. தமிழில் இப்படி அன்ன நடை
...தலுங்கிலும் கிளாமரில் குதித்தார். குறிப்பாக இந்தியில் பூமிகா சாவ்லா
...ரில் களம் கண்ட பூமிகா, அங்கு கிளாமரில் பட்டையைக் கிளப்பினார்.
..., குத்துப் பாட்டுக்கு ஆன உடல் வாகு பூமிகாவுக்கு இருக்கப்பா என்று,
...ணுகியுள்ளனர். இல்லை என்று கூறிய பூமிகா தனது சம்பளத்தைக் கூறவே
... தயாரிப்பாளர்கள், ஒரு பாட்டுக்கு ஆட 9 லட்சம் கேட்கிறாராம் பூமிகா.
...ம் செலவு என அவர் பட்டியலை நீட்டவே, ஒரு குத்துப் பாட்டுக்கு ஆட
...லைத்துப் போன அவர்கள் திரும்பி வந்து விட்டார்களாம். மொத்தப் படத்
... கொடுக்கும் தொகையை ஒரு பாட்டுக்கு பூமிகா கேட்பது நியாயமா
... புலம்பிக் கொண்டிருக்கிறார்களாம், அணுகி தோல்வி அடைந்த
... ஆனால் இதுகுறித்துக் கவலைப்
...து தெலுங்கில் பின்னி
...றாராம் பூமிகா.

## காம்னாவும் கிளாமரும்..

...டங்களில் முடிந்தவரை கிளாமர் காட்டித்தான் நடிப்பேன். எனது கிளாமர்
...ாயப்படுத்தாது என்று கூறுகிறார் காம்னா ஜெத்மலானி. பல நாட்களாக
...டாத காம்னா 'மச்சக்காரன்' மூலம் மறு வருகை புரிகிறார். ஜீவன்தான் நாயகன்.
...ியோ கேரக்டர். 'கள்வனின் காதலி' பட இயக்குநர் தமிழ்வாணன் படத்தை
...ல்வாசிப் படத்தை முடித்து விட்ட கையோடு செய்தியாளர்களைச் சந்தித்தனர்
...ணன் ஆகியோர். முதலில் காம்னா பேசியதை சொல்லிடுவோம் கவர்ச்சி காட்டி
...ட்கிறார்கள். கவர்ச்சி காட்டி நடிப்பதில் என்ன தவறு என்று எனக்குப் புரியவில்லை.
...பதில் என்ன தவறு. எனது படங்களில் கண்டிப்பாக கிளாமர் காட்டித்தான் நடிப்
... இருக்காது. கவர்ச்சியின் எல்லை எது என்பது எனக்குத் தெரியும். அதைத் தாண்ட



'சிவாஜி'
ரஜினி - ஸ்ரேயா

## சிவாஜி டிரெய்லர் வெளியீடு

ரஜினியின் 'சிவாஜி' பட 'டிரெய்லர்' தியேட்டர், தொலைக்காட்சிகளில் வெளியிடப்பட்டது. 'சந்திரமுகி' படத்தின் பிரமாண்ட வெற்றிக்கு பிறகு ரஜினிகாந்த் 'சிவாஜி' படத்தில் நடித்திருக்கிறார். இப்படத்தை ஷங்கர் இயக்கத்தில் ஏவி.எம். நிறுவனம் தயாரித்துள்ளது.

உலகம் முழுவதும் இந்த படத்திற்கு பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. ஏப்ரல் 14ஆம் திகதி ரிலீசாகும் என எதிர்பார்க்கப்பட்ட 'சிவாஜி', ஜூன் 15ஆம் திகதி ரிலீசாக உள்ளது. இதையடுத்து தியேட்டர்கள், டிவி சேனல்கள், இணையத்தளங்களில் ரசிகர்கள் பார்ப்பதற்காக 3 நிமிட டிரெய்லர் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த டிரெய்லருக்கு சென்சார் 'யூ' சான்றிதழ் வழங்கியுள்ளது. இந்த டிரெய்லரில் ஸ்ரேயாவுடன் ரஜினி டூயட் பாடும் காட்சிகளும், விவேக், வடிவுக்கரசியிடம் 'எனக்கு தமிழ் கலாசாரத்தோடு இருக்குற பொண்ணு தான் வேணும்' என ரஜினி வசனம் பேசும் காட்சியும் இடம்பெற்றுள்ளது. வில்லன் சுமனுடன் மோதும் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. 'உங்க முகத்தை நான் பார்க்க விரும்பல' என ஸ்ரேயா ரஜினியிடம் கோபமாக கூறும் காட்சியும் உள்ளது. டிவி சேனல்கள், தியேட்டர்களுக்கு என தனித்தனியே டிரெய்லர் தயாரிக்கப்பட்டுள்ளது.



## ...ாதவன் காமடி ரெடி

...க்கு பிறகு 'பொல்லாதவன்' படத்தில்
...வலுந்து கட்டுகிறார்களாம் தனுஷும்,
...கூடவே சந்தானமும். 'எந்த பிகரும்
...க்கிடும்ல' என்று ஓவர் நம்பிக்கையில்
...அவரை கலாய்க்கும் நண்பராக சந்தானமும்
...டியிருக்காங்களாம். இவர்கள் அடிக்கும்
...யட்டரே குலுங்கும் என்கிறார் இயக்குநர்
...கருணாசுக்கும், சந்தானத்துக்கும் நேரம்
...வுட்' ஆகிறது. இவர்கள் காம்பினேஷன்
...பேசப்படும் என்கிறார் வெ.மாறன்.

## முகர்ஜி

...கொல்கத்தாவிலிருந்து கோலிவூட்டுக்கு கௌதம்
...த்தில் நடிக்க வைத்த கமலினி முகர்ஜி தமிழை விட
... நடிக்க வந்த முதல் படத்திலேயே கமலுடன்
... பிரமாதம் என்று கூறும் அளவுக்கு நடிப்பிலும் கலக்
...ன் வரவில்லை. சமீபத்தில்தான் சேரனுடன் ஜோடி
...னாலும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு நடக்கிறதா
...தில் கமலினி நடித்த சூப்பர் ஹிட் படமானது.
...டுள்ளது. மேலும் சில படங்களில் நடிக்கும்
...காத்துக்கிடப்பதை விட்டுவிட்டு மலையாளத்தில்
...ாராம் கமலினி. இதையடுத்து தமிழை விட மலை
...ாம் கமலினி. தமிழில் புதிய படங்கள் வந்தால்
...ரே கூப்பிடலாம்!



'புலன் விசாரணை' படப்பிடிப்பின்போது...

# கவிதைப் பூங்கா

தயாரிப்பு: அஸ்மினா

## நேற்றைய காலையும் இன்றைய மாலையும்

■ கவிஞர் எம்.ஏ.நுஃமான்

நேற்றைய மாலையும்
இன்றைய காலையும்
நேற்று மாலை
நாங்கள் இங்கிருந்தோம்
சனங்கள் நிறைந்த யாழ்நகர்த் தெருவில்
வாகன நெரிசலில்
சைக்கிளை நாங்கள் தள்ளிச் சென்றோம்.
பூபாலசிங்கம் புத்தகநிலைய
முன்றலில் நின்றோம்
பத்திரிகைகளை புரட்டிப் பார்த்தோம்.
பஸ் நிலையத்தில் மக்கள் நெரிசலைப்
பார்த்தவா றிருந்தோம்.
பலவித முகங்கள்
பலவித நிறங்கள்
வந்தும் சென்றும்
ஏறியும் இறங்கியும்
அகல்வதைக் கண்டோம்.
சந்தைவரையும் நடந்து சென்றோம்.
திருவள்ளுவர் சிலையைக் கடந்து
தபாற்கந்தோர் சந்தியிலேறி
பண்ணைவெளியில் காற்று வாங்கினோம்.
'றீகலின்' அருகே
பெட்டிக் கடையில்
தேனீர் அருந்தி சிகரட் புகைத்தோம்
ஜாக் லண்டனின்
'வனத்தின் அழைப்பு'
திரைப்படம் பார்த்தோம்.
தலைமுடி கலைந்து பறக்கும் காற்றில்
சைக்கிளில் ஏறி
வீடு திரும்பினோம்.
இன்று காலை இப்படி விடிந்தது
நாங்கள் நடந்த நகரத் தெருக்களில்
காக்கி உடையில் துவக்குகள் தெரிந்தன
குண்டுகள் பொழிந்தன.
உடலைத் துளைத்து உயிரைக் குடித்தன.
பஸ் நிலையம் மரணித்திருந்தது.
மனிதவாடையை நகரம் இழந்தது.
கடைகள் எரிந்து புகைந்து கிடந்தன.
குண்டுகள் விழுந்த கட்டடமாக
பழைய சந்தை இடிந்து கிடந்தது.
வீதிகள் தோறும்
ரயர்கள் எரிந்து கரிந்து கிடந்தன.
இவ்வாறாக இன்றைய வாழ்வை
நாங்கள் இழந்தோம்.
இன்றைய மாலையை
நாங்கள் இழந்தோம்.

('மழைநாட்கள் வரும்' கவிதைத் தொகுப்பிலிருந்து....)

## பட்டம் பாவம் பட்டம்

நானிலம் செழிப்பதற்கு
நல்வினைகள் புரிபவரை
நாடி நிதம் தேடுவதா பட்டம்?
பாந்யத்தில் கவிதை நட்டு
பாருலகை வென்று நிற்கும்
பாவலவர் சூடுவதா பட்டம்?

தேனமுதாய் கல்விதனை
தேர்ந்து நிதம் கற்பவரை
தேடி புகழ் சூட்டுவதா பட்டம்?
வானமதில் இளசு எலாம்
வண்ண வண்ணமாக விட்டு
வாழ்வின்நிலை காட்டுவதா பட்டம்?

தகுதியற்ற முண்டமெலாம்
தலைவராகி ஊர் புகழ
தன்பெயர்முன் போடுவதா பட்டம்?
பகுதி விகுதி தெரியாத
படைப்புலக குப்பையெல்லாம்
பல்லிளித்து வாங்குவதா பட்டம்?

காக்கை பிடிப்பவர்க்கு
கற்பிக்கத் தகுதி பெற்றோர்
கால்பிடித்து வாங்குவதா பட்டம்?
நாக்கறுத்து கொடுத்துவிட்டு
நாய்வாலை ஆட்டி ஆட்டி
நக்கரைத்து வாங்குவதா பட்டம்?

'உனக்கு நாளை சூட்டுகிறேன்
எனக்கு இன்று சூட்டு' என்று
திட்டமிட்டு திருடுவதா பட்டம்?
கணக்கற்ற பட்டம் வேண்ட
கலங்காதே தோழா நீயும்
காசிருந்தால் வாங்கிடலாம் பட்டம்!!

பட்டம்! பாவம் பட்டம்!!

■ பொத்துவில் அஸ்மின் உதுமாலெவ்வை

## செத்தநாள்

■ கவிஞர் காசிஆனந்தன்

ஆடா மயிலாய் அசையா இளங்கொடியாய்
ஓடா நதியாய் ஒரு புதிராய் நாடெல்லாம்
வீசாத தென்றலாய் வீசும் தமிழ் பெருமை
பேசாத வாய் பிணத்தின் வாய்!

புறமும் அகப்பாட்டும் காப்பியனால் பூத்த
இறவா இலக்கணத்தின் ஏடும் குறள் மொழியும்
ஆர்க்கும் சிலம்பின் அழகு தமிழ் நடையும்
பார்க்காத கண் பாவக் கண்!

கத்து கடல் பறித்தும் கல்லாதார் தீவைத்தும்
குத்து வடமொழியின் கூர்பட்டும் இத்தனைக்கும்
வாடாத செந்தமிழின் வரலாறு கேட்டபின்
ஆடாத கால் ஆனைக்கால்!

வானம் அளவு வளர்ந்து மொழிக்கெல்லாம்
தானம் கொடுத்த தமிழேட்டில் ஈனம்
படைக்க வந்தாரா? அவர் பல்லை ஓங்கி
உடைக்காத கை உலக்கை!

ஆளிருந்தால் என்ன? அழகிருந்தால் என்ன?
நீள்விழியார் நெஞ்சில் நிறைந்தென்ன? கேள் தோழா
வையம் புகழும் தமிழ்க்கவிதை என்வாழ்வில்
செய்யாதநாள் செத்தநாள்.

## விசர்நாய்க்குப் பூத்த புன்னகை

□ கவிஞர் சோலைக்கிளி

பிடித்துப் பொத்தி எறி
நான் உனக்குப் பூத்த புன்னகையை
எனக்கு.

நான் என்பாட்டில் போயிருக்கலாம்.
உன் முகத்தைப் பார்த்து
நான் பூத்த நகையை
துளம்புக்கும் கொசுவுக்கும்
பூத்துக் காட்டியிருக்கலாம்.

சரி என் புன்னகையைச் சிதைத்து
என் முகத்தில் வீசு.
நீ மனதுக்குள் வளர்க்கும் விஷர்நாய்க்கு
நான் மிட்டாய்போட்டு
உறவாக்கிக் கொள்ள நினைத்தது தவறேதான்
எறி
என் புன்னகையை நான் மீண்டும்
சப்பி விழுங்கிக் கொள்கிறேன்.

உன்னைக் கண்டால்
நான் இனி
எட்ட நடந்து கொள்கிறேன்.
உன்னைப் பார்த்து
என் பூவைப் பூக்காமல்
தோளில் என்முகத்தைச் சுமந்தபடி
நான்தான்போகிறேன்.

உன் இதயத்தின்
இரத்தத்தின் நிறமோ
கறுப்பு!
அதை நான்
எப்படிச் சிவப்பாக்குவது ?
சரி உன் பல்லின் ஒட்டறையை
இனி நான்
பார்க்க விரும்பவில்லை.
இன்று நீ சிதைத்த
என் புன்னகையின் துயரத்தால்
மழையில் நனைந்த காகம்
கொடுகுவது மாதிரி
கொடுகுகிறேன்.
ஒரு பட்ட மரத்தின் கிளையில்
குந்தி இருந்து
அழுகிறேன்.
உன் விஷர்நாய் மகிழட்டும்!

## திறவுகோல்

உன்னை நான் சீண்டினனா?
என்னை நீ சீண்டினியா?
ஏதும் புரியவில்லை.
இருந்தாலும - எந்தன்
மனக் கதவிடுக்கில்
உனக்காக போடப்பட்ட
தாழ்ப்பாள் சாவியின்றி
சாத்தியே கிடக்கிறது
திறக்காமல்!...

■ நன்னூர் ஜெ.சுபாஜினி

## மௌனத் துயரம்

கண்களுக்குப் புலப்படாது
காதுகளுக்குக் கேட்காது
சிறுகடி ஓசைபோல
துன்ப நினைவுகள்

என் இதயத்தின்
அடியாழம் வரை
துக்கமே நிறைந்திருக்கிறது.

அல்லி மலரிலிருந்து
உதிரும் பனித்துளிகள் போல
அது என் கண்கள் வழியே
கண்ணீராய் வடிகின்றது.

என் முட்டைக் கோதாய்
உடைந்து
நொருங்கிய
இதயம்
எனது
பேச்சுக்கு காவலிருக்கும்.
அந்த மௌனம்
எனது இதயப் பெட்டியிலுள்ள
இரகசியத்தை
வெளிப்படுத்துவதில்லை.
ஆனால், என் இதயத்தின்
வேதனைப் பெருமூச்சுக்கள்
கவலையின் கனத்தை
அறிவித்துக் கொண்டுதான்
இருக்கின்றன.

■ வெலிகம ரிம்ஸா முஹம்மத்




## கவிஞர் சோலைக்கிளியின் 'நவீன நாட்டார் பாடல்கள்' உலகத்தரம் வாய்ந்தவையா?

தலைப்பைப் பார்த்தவுடன் தலை(ப்)பை வெடித்து சோலைக்கிளி அவரது பரிவாரங்களோடு வார்த்தைகளில் வாள் ஏந்தி போருக்கு முரசறைவது என் காதுக்கு ஒலிக்கிறது. நில்லுங்கள் கொஞ்சம்..! நிறுத்துங்கள் போரை..!

'புறாப்பறக்க
முட்ட தெறிக்க
முட்டக்கி சம்பளம்
கட்டியடிக்க
வையோடா... வையோடா...வையோடா...
கூய்யீ...கூய்யீ...கூ...ய்...யீ...'

என்று கூவிக் கூவி எனது பத்து வயதின் பால்ய நண்பர்களோடு சேர்ந்து 'ஒத்துச்சுள்ளி' விளையாடிய 'ஓதப்பள்ளி'ப் பருவத்தில் காற்றில் கரைந்து ஆகாயத்தில் மிதந்து மேகத்தில் ஏறி 'நாளைய மழையே நீ எங்கே இருக்கிறாய்...' என்று முகில் குடத்துள் கரம்விட்டு துலாவிப் பார்த்து, விண்மீன்கள் பொறுக்கி சூரியனைக் காற்சட்டைக்குள்ளும் சந்திரனை சட்டைப்பைக்குள்ளும் பொத்திப்பிடித்தபடி மனசு எங்கெங்கோ சுற்றி 'பீனிக்ஸ்ஸாய்' பூமி வரும். கண்ணாமூச்சி ஆடுகையிலே நாய் புகுந்த எங்கள் ஒட்டைக் கிடுகு வெளிக்குள்ளால் எட்டிப்பார்க்கும் மனசு அமெரிக்காவில் சஞ்சரிக்கும். அடுத்த நிமிடமே ஆபிரிக்க வனத்தில் தனிமையில் உழலும். வாப்பாவின் வழிகாட்டலால் 'அஞ்சு' வயதின் பிஞ்சுப் பருவத்தில் பத்திரிகை காரிகையோடு படுத்துறங்கி இருக்கிறேன். புத்தகங்களுக்குள் புதைந்து பூப்பறித்திருக்கிறேன். அப்போதுதான் அவளைக் கண்டேன். பார்ப்பதற்கு வசீகரமான தேவதையாய் தெரிந்தாள். அன்றிலிருந்தே கவிதா தேவியை காதலிக்கத் தொடங்கிவிட்டேன். எங்கள் காதலுக்கு அன்னப் பட்சியாய் இருந்தது எங்களூரின் வாசிகசாலையின் உசாத்துணைப்பகுதி. அங்கே தான் அடிக்கடி அவளை சந்தித்துக் கொள்வேன். சந்திக்கும் போதெல்லாம் உயிர் உருக முத்தங்களைப் பரிமாறிக் கொள்வோம். அப்போது அகப்பட்ட 'மல்லிகை'யின் பழைய பிரதிகளைத் தூசி தட்டியபோது புதுமை வழியில், புரியா மொழியில் தனித்துவமான கவிதை ஒன்றைக் கண்ணுற்றேன். அது என்னைப் பார்த்துப் பார்த்துக் கண்ணடித்தது. இந்த ஏழைக்கிளி ஆரம்பத்தில் எல்லோரையும் போல் சோலைக்கிளியைப் புரிந்துகொள்ளவில்லை. பேயைக்கண்டவன் போல பேந்தப் பேந்த முழித்த நான், அதற்குள் நுழைந்தபோது மனிதர்களான மிருகங்களையும் மிருகங்களான மனிதர்களையும் கொண்ட ஒரு புதிய உலகுக்குள் பிரவேசிப்பதை உணர்ந்தேன். பூமி சிரித்தது, பூக்கள் பேசியது; கழுதைகள் கவிதைகள் புனைந்தது; காகங்கள் பாடியது; தவளைகள் தவில் வாசித்தது; அது மெய்யான பொய்யுலகம். பொய்யான மெய்யுலகம். அந்த உலகைக்காட்டியவர்தான் கவிஞர் சோலைக்கிளி. உண்மையில் உணர்வுத் திறனும் கற்பனைவளமும் மிக்கோரால் மாத்திரமே சோலைக்கிளியின் கவிதை உலகிற்குள் நுழைய முடியும்.

உதுமாலெவ்வை முகம்மது அதீக் என்ற இயற்பெயர் கொண்ட சோலைக்கிளி தென்கிழக்கு கண்டெடுத்த பொன்விளக்கு. கல்முனை மாநகரின் கவிதைக் காமதேனு. ஒரு காலத்தில் இவரது கவிதைகளை கண்டால் கதவடைத்தவர்களை, கண்ட இடத்தில் கடுவதற்கு ஆணையிட்டவர்களை, சொறிநாயைக் கல்லால் அடிப்பது போல் சொல்லால் அடித்தவர்களை இன்னும் இவர் கவிதைகளை ; சிரங்கைச் சொறிந்து கொண்டு வீதியில் வீணி வழிந்து கிடக்கும் பிச்சைக்காரக் கிழவனை பார்ப்பதுபோல் அருவருப்பாய் பார்த்தவர்களை அதற்குப் பிராயச்சித்தமாக இன்று தெருவெங்கும் தாயைத் தொலைத்த ஆட்டுக்குட்டி 'மே..மே..' என்று கத்துவது போல் இவரது கவிதைகளைத்தேடி அலையவைத்த அதீத ஆளுமைமிக்க படைப்புகளை ஈன்றெடுத்த பாவலன்.

'அச்சமும் தாக்கமும் அற்றது கவிதை
மற்றவர் சொல்ல மயங்கி நிற்பதை
வெட்ட வெளிச்சமாய் துணிவுடன் சொல்லும்
மருண்டு நிற்பதும் கவிதையுமல்ல
வெருண்டு நிற்பவன் கவிஞனுமல்ல
கவிஞன் என்பவன் வினோதமானவன்
அச்சம் அற்றவன் தாக்கம் அற்றவன்
கற்களை முகர்ந்து பூவென நுகர்வோன்
பூக்களைக் கல்லென வீசியெறிவான்'

என்ற கவிஞ்வின் கூற்றுக்கு உருக்கொடுத்தவர் கவிஞர் சோலைக்கிளி. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்றும் 'மந்திரம் போல் சொல்ல வேண்டும்' என்றும் பாடிய பாரதியின் வரிகளை உயிர்த்தெழச் செய்தவர். இக்கவிஞனின் கவிதைகள் நோபல் பரிசுபெற்ற உலகக் கவிஞர் பாப்லோ நெருடா, ரவீந்திர நாத்தாகூர், கலீலுல் ஜிப்ரான், போன்ற கவிஞர்களின் கற்பனைக்கு நிகரான அசாதாரண கவித்துவம் மிக்கதாக மிளிர்கிறது.

'சோலைக்கிளி கையாளும் உவமைகளும் தட்டி யெழுப்பும் காட்சிப் படிமங்களும் அலாதியானவை. தன் தனிப்பட்ட குறிப்பிட்ட அனுபவங்களை உலகு தழுவியதாக ஆக்குவதுதான் அவரிடம் உள்ள ரசவித்தை' என்கின்றார் கலாநிதி எம்.ஏ.நுஃமான்.

இவரது கவிதைகள் ஆங்கிலம், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சோலைக்கிளியின் கவிதைகளுக்கு ஈழத்திலே சிறகு முளைத்தாலும் உலக வீதியில்தான் உலா வருகின்றன. இந்தியாவிலிருக்கின்ற பெரும் 'கவியரசர்கள்', 'கவிக்கோக்களுக்கும்' சிம்ம சொப்பனமாய் இவரது கவிதைகள் விறுநடை போடுவது எமக்கெல்லாம் பெருமையே. சோலைக்கிளியின் கவிதைகளுக்கும் நம் ஈழக் கவிஞர்களின் கவிதைகளுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்னில் இவரது கவிதைகள் உலகத்தின் எந்த மூலையிலிருந்தும் எப்படியான மொழியிலும் மொழிபெயர்த்துப் படித்தாலும் அந்தஇடத்தை பிரதிபலிக்கும் தனித்தன்மை பெற்றதாய் மிளிர்கின்றன.

1980 களில் சிறகடிக்கத் தொடங்கிய சோலைக்கிளி இருப்பு, வியூகம் சஞ்சிகைகளின் ஆசிரியர். இதுவரை ஏழு கவிதை நூல்களை வெளியிட்டிருக்கிறார். 1985 இல் 'நானும் ஒரு பூனை',1988 இல்'எட்டாவது நரகம்' (வடகிழக்கு மாகாண சாகித்திய விருதைப் பெற்றது) , 1991இல்'காகம் கலைத்த கனவு' (சுதந்திர இலக்கிய விழாவில் சிறந்த கவிதைத் தொகுதிக்கான விருது பெற்றது), 1993இல் 'ஆணிவேர் அறுந்த நான்', 1995இல் 'பாம்பு நரம்பு மனிதன்' (இலங்கை அரசின் சாகித்திய விருதினைப் பெற்றது), 1997இல் 'பனியில் மொழி எழுதி' (இலங்கை அரசின் சாகித்திய விருது பெற்றது) 2005 இல் 'என்ன செப்பங்கா நீ' அது மட்டு மன்று 2005இல் இவரது கவி ஆளுமையைப் பாராட்டி வழங்கிய ஜப்பான் அரசின் 'வுங்கா' விருதைப் பெற்று அந்த விருதைக் கௌரவப்படுத்தியுள்ளார். இவரது கவிதைகளால் ஈழத்தில் ஒரு புதிய கவிதைப் பரம்பரையே உருவாகியுள்ளது. இவரது கவிதை மீதும் இவர் மீதும் காழ்ப்புணர்வு கொண்டவர்கள் இன்றும் அதிகம்.

'சோலைக்கிளியின் கவிதைகள் எதுகை, மோனையற்ற நவீன நாட்டார் பாடல்கள். பீ, மூத்திரம், மயிர், மட்டை என்று எழுதினால் இங்கு விருது கொடுக்க ஆளிருக்கு...ஒரு மண்ணும் விளங்காத கவிதையை வைத்து உலகத்தரம் வாய்ந்தது என்று பேசிக்கொள்ள அவருக்கு வெட்கமில்லையா?' என்று காழ்ப்புணர்வு கொண்டு தனது உள்ளக் கிடக்கையை கொட்டித்தீர்த்தார் ஒரு மூத்த கவிஞர். அவர் சொன்னது போல் இவரது 'நவீன நாட்டார் பாடல்கள்' உலகத் தரம் வாய்ந்தவையா? இல்லையா? என்பதற்குக் காலந்தான் பதில் சொல்ல வேண்டும்.

(உணர்வுகள் தொடரும்...)



மனைவி மட்டும் தன் விருப்பப்படி நடந்துகொள்ளவேண்டும், தான் நினைப்பதையே அவளும் நினைக்கவேண்டும் என்றெல்லாம் எதிர்பார்க்கிற கணவர்கள், தங்களிடம் உள்ள விரும்பத்தகாத குணங்களை மட்டும் உணர்வதே இல்லை.

# உங்கள் கணவரிடம் இந்த பழக்கங்கள் உண்டா?

ஒவ்வொரு மனைவியும் கணவனின் ஒரு சில விரும்பத்தகாத குணங்களால் மனம் உடைந்து போகவே செய்கிறாள். 'பிரச்சினை வந்தாலும் சரி' என்று தமது அதிருப்தியை வெளிப்படையாகக் காண்பிக்கும் மனைவிகள் ஒருசிலர் தான்.

கணவனின் அத்தகைய அசாதாரண குணங்களில் சிலவற்றைக் கீழே கொடுத்துள்ளோம். அது உங்கள் கணவருக்கும் பொருந்துகிறதா பாருங்கள்...

* திருமணநாள் மற்றும் பிறந்தநாளின்போது கணவன் தனக்கு அன்பளிப்புத் தருவதையே பெண்கள் விரும்புவார்கள். ஆனால், பெரும்பாலான கணவர்கள் இந்த நாட்களை நினைவில் வைத்திருப்பதே இல்லை.

* குளித்து முடித்ததும் ஈரத்துவாலையை படுக்கைமீது வீசியெறிந்துவிட்டு மற்றவேலையைக் கவனிப்பது.

* தன்னைப்போலவே அலுவலகத்திலிருந்து களைத்துப்போய் வீடு திரும்பும் மனைவியிடம் உடனடியாகச் சிற்றுண்டி, காபி, டீ கேட்டு நச்சரிப்பது.

* மனைவியின் மிகச் சிறந்த ஆலோசனையைக் கூட சரியான 'பெண்டாட்டி தாசன்' என்று முத்திரை குத்திவிடுவார்களோ எனப் பயந்து ஏற்றுக்கொள்ளத் தயங்குவது.

* குழந்தைகளிடம் உள்ள சிறப்பு குணங்களுக்கு, தானே காரணம் என்று பெருமிதப்படுவதுடன், மோசமான குணங்களுக்கு மனைவி மீது பழி போடுவது.

* மனைவியின் உறவினர்கள் தங்கிச்செல்ல வந்தால், அவர்களைக் கிளப்புவதற்காக அநாகரிகமாக நடந்துகொள்வது.

* மனைவியுடன் எப்போதாவது ஷொப்பிங் போகும்போது, முகத்தை 'உர்'ரென்று வைத்துக்கொள்வது.

* பெரும்பாலான ஆண்கள் தங்கள் வீட்டிலேயே விருந்தினர்கள் போலத்தான் வாழ்ந்து வருகின்றனர். எந்தப்பொருளை எங்குவைப்பது என்ற அடிப்படை விஷயங்களைக்கூட அவர்கள் தெரிந்துவைத்திருப்பதில்லை.

* இரவில் கைக்குழந்தை சிறுநீர் கழித்த காரணத்தால் அழும் சமயத்தில் விழித்திருந்தாலும் அதற்குத் துணியை மாற்ற மனைவியைத் தட்டி எழுப்புவது.

* தண்ணீர் போன்ற சின்னத் தேவைகளுக்கும் வேலையில் மும்முரமாக இருக்கும் மனைவியைக் கூப்பிட்டுத் தொந்தரவு செய்தல்.

* மனைவி சமைத்த உணவை, அம்மாவின் சமையலோடு ஒப்பிட்டுக் குறைசொல்லுவது.

* ஆடைகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் மனைவிக்குச் சுதந்திரம் தராமல், தனது விருப்புகளைத் திணிப்பது.

* வீட்டில் ஒரு நிகழ்ச்சியை உறுதிசெய்த பிறகு, மனைவியுடன் கலந்தாலோசிக்காது நண்பர்கள் அல்லது அக்கம்பக்கத்தினருக்காக அதை ஒத்திப்போடுவது அல்லது ரத்துச்செய்வது. மனைவிக்கு முன்னுரிமை தராமல், அடுத்தவர்களை வண்டியில் ஏற்றிச்செல்ல ஆர்வம் காட்டுவது.

* மனைவி மட்டும் எப்போதும் அழகாக இருக்கவேண்டும் என எதிர்பார்க்கும் கணவன், தானும் அப்படியே இருக்க முயற்சிப்பதில்லை.

* தினம்தோறும் முகச்சவரம் செய்வதை ஒரு சுமையாக நினைத்து தட்டிக்கழித்தல். மனைவி தனது அதிருப்தியை வெளிப்படுத்தினால், ஆண்கள் முரட்டுத்தனமாகத் தோன்ற வேண்டும், அதுவுமில்லாமல் 3-4 நாட்கள் தாடியுடன் இருப்பதுதான் 'இன்றைய ஸ்டைல்' என்று விதண்டாவாதம் செய்வது.

* என்றாவது ஒருநாள், எனக்கு இன்று சமைக்கும் 'மூட்' இல்லை என்று மனைவி சொன்னால், சட்டென்று ''பரவாயில்லை இன்னிக்குச் சப்பாத்தி - தக்காளித்தொக்கு, முட்டை ஆம்லெட் செய், அதுபோதும்'' என்று சர்வசாதாரணமாகச் சொல்லுவது.

## பெண்

* வீட்டுக்கு வரும் தனது உறவினர்களை கணவன் விஷேசமாகக் கவனிப்பதும், மனைவியின் உறவினர்களை வேண்டா வெறுப்பாக நடத்துவதும் மனைவியை மோசமாகப் புண்படுத்தும்.

* அலுவலகத்திலிருந்து மனஇறுக்கத்துடன் வீடு திரும்பும்கணவனிடம், 'என்னங்க அலுவலகத்தில் ஏதாவது பிரச்சினையா?'' என்று கரிசனத்துடன் மனைவி விசாரிப்பதுண்டு. அதற்குப் பதிலாக ', ''அதெல்லாம் சொன்னால் உனக்குப் புரியாது. போய் உன் வேலையைப் பாரு...'' என்று முகத்திலடித்தாற்போல் சொல்லுவது.

* குடும்பத்துடன் உட்கார்ந்து டி.வி.பார்க்கும்போது யாரைப் பற்றியும் கவலைப்படாமல், ரிமோட் மூலம் தன்விருப்பத்துக்கு சேனல்களை மாற்றிக்கொண்டே இருப்பது.



# 30 இற்கும் 40 இற்கும்

என் வயது முப்பத்தைந்தாகிவிட்டது. நான் என்னை எப்படி அழகுபடுத்திக்கொள்வேன் என்று கவலைப்படுகிறீர்களா?

30 வயதுமுதல் 45 வயதுவரையுள்ள பெண்கள் அனைவருக்கும் ஏற்ற அழகு பராமரிப்பு முறைகள் இதோ.

தினமும் இரவில் தூங்கச் செல்வதற்கு முன்பு முகத்தை நன்றாகக் கழுவித் துடைத்து சுத்தம் செய்துவிட்டு ஆல்மண்ட் கிரீம் அல்லது வைட்டமின் ஈ கிரீம் பூசுங்கள். கண்களின் அடிப்பகுதியில் கறுப்புநிறம் ஏற்படுவது கண்களைச் சுற்றி சுருக்கம் ஏற்படுவது போன்றவைகளே ஒருவருடைய வயதை வெளிப்படுத்துபவையாக இருக்கின்றன. அவைகளைப் போக்க தினமும் 'ஐ மசாஜ்' செய்யவேண்டும். மசாஜ் முடித்ததும் வெள்ளரிக்காய் சாறு அல்லது உருளைக்கிழங்கு சாறு தேய்த்து, உலர்ந்ததும் கழுவவேண்டும்.


கைப்பகுதி சருமம் வறண்டுபோவதும் வயதை வெளிப்படுத்தும். காலையிலும் இரவிலும் கைகளில் கிரீம் தேய்த்து மசாஜ் செய்வது நல்லது. உதடுகள் வறண்டுபோவதைத் தடுக்க வெண்ணெயையும் உப்பையும் கலந்துபூசவேண்டும். பாலாடை, தேன் போன்றவைகளையும் உதட்டில் தேய்க்கலாம். காய்கறி, பழங்களை உணவில் அதிகம் சேர்க்கவேண்டும்.

வாரத்தில் ஒருமுறையாவது சருமத்துக்கு புத்துணர்ச்சி கிடைக்க ஐஸ் மசாஜ் செய்யவேண்டும். ஐஸ்கட்டியை துணியில் பொதிந்து முகத்தில் தேய்ப்பதே ஐஸ் மசாஜ். முல்தானிமிட்டி, ஈஸ்ட், பன்னீர் போன்றவைகளைக் கலந்து முகத்தில் பூசி, காய்ந்ததும் கழுவிவிடவேண்டும்.

மாதத்தில் ஒருமுறை பொருத்தமான பேஷியல் செய்யுங்கள். முகப்பகுதி தசை தொங்கிப்போகாமல் இருக்க 'தெர்மோ ஹெர்பல் டைட்டனிங் மாஸ்க்' போட்டுக்கொள்ளலாம். பியூட்டி பார்லர்களிலே இதைச் செய்யமுடியும். முகத்தில் கறுப்புப் புள்ளிகள், கண்ணுக்குக் கீழ் ஏற்படும் வீக்கம் போன்றவைகள் ஏற்படாமல் இருக்க முதலிலே கவனமாக முகத்தைப் பராமரித்து வரவேண்டும். நரை ஏற்படும்போது ஹென்னா போடலாம் அல்லது பொருத்தமான டையைப் பயன்படுத்தி நரையை மறைக்கவேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

## ஆலு கச்சோரி



**தேவையான பொருட்கள்:-**

ஆட்டா மா - 1 கப்.
கோதுமை மா - 1கப்.
உப்பு - 1/2 சிறிய தே.க.
எண்ணெய் - 1/2 சிறிய தே.க.
பொரிக்கத் தேவையான எண்ணெய்.
வேகவைத்து மசித்த உருளைக்கிழங்கு - 500கிராம்.
மிளகாய்தூள் - 1/2 அரை சிறிய தே.க.
சாட் மசாலா - 1/2 தே.க.


**செய்முறை:**

ஆட்டாமா, கோதுமை மா, உப்பு மற்றும் சிறிதளவு எண்ணெய் சேர்த்து மிருதுவாகப் பிசைந்துகொள்ளவும். உருளைக்கிழங்கில் உப்பு, பச்சைமிளகாய் மற்றும் கரம் மசாலா சேர்த்துக் கிளறவும். மாவு உருண்டையில் உருளைக்கிழங்கை வைத்து கைகளைக் கொண்டு லேசாக அழுத்தி பூரிபோல் திரட்டிக்கொள்ளவும். உருளைக்கிழங்கு வெளியே வராமல் இருக்கவேண்டும். பிறகு மிதமான வெப்பத்தில் பூரிபோல பொரித்து எடுத்துக் கொள்ளவும்.

# சிறுவர் பக்கம்

## சிறுவர் கைவண்ணம்





சரண்ஷ்,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு-15.

சுவர்ணஜா,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு-15.




ஆர். நவநீதன்,தரம் 3 பீ,
பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி,
கொழும்பு- 04.

## விடுகதைகள்

1) ஓட்டு வீட்டுக்குள் பட்டுடுத்தி ஒய்யாரமாக வீற்றிருக்கிறாள் ஒரு பெண், அவள் யார்?
2) மண்ணுக்குள் புதைந்திருப்பவளை மங்களத்துக்கு அழைத்து வந்து விடுவார்கள், அவள் யார்?
3) மூழ்கிக் கிடக்கும் வரை வெளிச்சம்இல்லை அவனிடம், அவன் யார்?
4) தண்ணீரில் ஜாலி தரையிலோ காலி, அவன் யார்?
5) அவனை நெருப்பிலிட்டார்கள், அழியவில்லை. இன்னும் திடமானான், அவன் யார்?
6) காயில் கசப்பான் பழத்தில் இனிப்பான், அவன் யார்?
7) எண்ணெய் குடித்தவனுக்கு எக்கச்சக்க உடம்பு, அவன் யார்?
8) சங்கீதக்காரன் இராத்தூக்கம் தொலைப்பான் அசந்த நேரத்தில் கடிப்பான், அவன் என்ன?
9) பன்னிரெண்டு பேரை துரத்தும் மூவர் கூட்டணி, அது என்ன?
10) காற்றுக்கு பறந்தவன் வெயிலுக்கு வெடித்தான், அவன் என்ன?


**விடைகள்:** 1) நிலக்கடலை 2) மஞ்சள் 3) முத்து 4) மீன் 5) செங்கல் 6) வேப்பம்பழம் 7) அப்பளம் 8) கொசு 9) கடிகாரம் 10) பலூன்

## அழகாக நிறம் தீட்டுங்கள் -6



தம்பி, தங்கைகளே!
மேலே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள். மிகச்சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## லட்சாதிபதி



குன்னங்குடி மங்கலம் ஒரு சிறிய நகரம். அங்கு சுரேந்திரன் என்பவர் வாழ்ந்து வந்தார். அவரது மனைவி பெயர் மாளவிகா. இருவருக்கும் திருமணமாகி 15 வருடங்கள் ஆகிவிட்டன.

சுரேந்திரனின் தொழில் விவசாயம். இயற்கையை நம்பியே இருக்கும் விவ சாயத்தை நம்பி இருக்க முடியாது என்று நினைத்த சுரேந்திரன், விவசாயத்தை முழுமையாகக் கைவிடாமல், கூடவே இன்னொரு வேலை எதையாவது செய்யலாமா என்று நினைத்தார். குன்னங்குடி மங்கலத்தில் முன்பெல்லாம் ஒவ்வொரு வீடுகளில் இரண்டு பசுக்களும் ஒருஜோடி காளை மாடுகளு மாவது இருக்கும். புற்கள் நிறைய வளர்ந்து கிடக்கும். அவை களை தின்று பசு மாடுகள் வளரும். விவசாயத்திற்கு காளை மாடு கள் பயன்பட்டன. அவைகளுக்கு உணவாக வைக் கோலும் நிறைய கிடைத்தன. இப்போது விவசாயம் சரியில்லை. அதனால் காளை மாடு களுக்கு இருந்த மவுசு குறைந்து விட்டது. புல்வெளி களும் நிறைய இல்லை. அதனால் பசு மாடுகளும் அதி கம் இல்லை.பசு மாடுகள் குறைந்து போன தால் அந்த ஊரில் பால் தட்டுப்பாடு ஏற்பட் டது. அந்த தட்டுப்பாட்டை தனக்கு சாதகமாக பயன்படுத்த நினைத்தார் சுரேந்திரன். பக்கத்து நகரத்தில் பக்கெட் பால் விற்பனை யாகிக் கொண்டிருந்தது அவருக்குத் தெரியும். அந்த வியாபாரியைப் பார்த்து தனது ஊருக்கு

பால் தேவைப்படுவதைச் சொன்னார். அவர், சுரேந்திரனையே, 'சப் ஏஜெண்ட்' ஆக்கி பால் சப்ளை செய்தார். தொடக்கத்தில் சிலர் பக்கெட் பாலுக்கு முகம் சுளித்தனர். சூடாக பால் கறந்து பயன்படுத்திய அவர்களால், பதப்படுத்திய குளிர்பாலை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பின்பு வேறு வழியில்லை. பக்கெட் பாலே கதி என்றாகி விட்டதால், அதனை வாங்க முன் வந்தார்கள். இப்போது சுரேந்திரனின் பக்கெட் பால் வியாபாரம் நன்றாக சூடு பிடித்து விட்டது. இதனால் அவருக்கு நிறைய வருமானம் வந்தது.

சுரேந்திரன் - மாளவிகா தம்பதிகளுக்கு இரண்டு மகள்கள் பீனா- லீனா.

மூத்த பெண் பீனா 10ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். இளையவள் லீனா 8ஆம் வ்குப்புப் படிக்கிறாள். இரண்டு பேருமே ஓரளவு நன்றாகப் படிப்பார்கள்.

சிறுவயதில் இருந்தே குழந்தைகளிடம் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் சுரேந்திரனுக்கு இருந்தது. அதனால் மகள்கள் இரண்டு பேருக்கும் இரண்டு உண்டியல்கள் வாங்கிக் கொடுத்தார். தினமும் அவர்களுக்கு இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் எனக் கொடுத்து உண்டியலில் சேமித்து வைக்கச் சொல்வார். அவர்கள் எப்படிச் சேர்க்கிறார்கள்? மாதாமாதம் எவ்வளவு சேர்க்கிறார்கள்? இதுவரை எவ்வளவு சேர்த்திருக்கிறார்கள் என்றெல்லாம் அவர் கேட்பதில்லை.

பீனாவுக்கு கிடைத்த பணமெல்லாம் உண்டியலை சென்றடைந்து கொண்டே இருந்தது. நாளுக்கு நாள் அவளிடம் அதிகமான பணம் சேர்ந்து கொண்டே இருந்தது. லீனாவோ உண்டியலில் போடும் பணத்தை அவ்வப்போது தேவைக்கு எடுத்து விடுவாள்.

அவள் அந்த பணத்தை புத்தகம் வாங்கும் ஒரே ஒரு தேவைக்கு மட்டுமே எடுத்துக்கொண்டிருந்தாள். இதனால் அவள் உண்டியலில் சேரும் பணத்தின் அளவு குறைந்து கொண்டேபோனது. அவள் வாங்கிய புத்தகங் களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டேபோனது.

ஒவ்வொரு நாளும் பீனா தனது உண்டியலையும் தங்கை லீனாவின் உண்டிய லையும் குலுக்கி குலுக்கிப் பார்ப்பாள். அவளது உண்டியல் கனமாக இருக்கும். பல நாட்கள் லீனாவின் உண்டியல் காலியாகவே இருந்தது. லீனா வாங்கி சேர்த்து வைத்தி ருக்கும் புத்தகங் களை எல்லாம் பீனா வுக்கு பார்த்தால் சிரிப்புவரும். இவளுக்கு பாடப் புத்தகங் களையே படிக்க நேரம் இருக்காது. அப்படி இருக்கையில் இவ்வளவு புத்தகங்களை வாங்கி இருக் கிறாளே என்று வேடிக் கையாக பேசுவாள். லீனா வாங்கி வைத்திருப்பவை அனைத்துமே பொது அறிவுப் புத்தகங்கள். தான் வாங்கிய புத்தகங்களை எல்லாம் லீனா விரைவாக படித்து முடிக்கலானாள். குறிப்பும் எடுத்துக் கொள்வாள். முதலில் படித்து முடிந்த பின்னரே அடுத்த புத்தகம் வாங்குவாள்.

தனது உண்டியலில் பணம் அதிகம் சேர சேர பீனாவுக்கு கர்வமும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. பணமே சேர்க்காத லீனாவை அடிக் கடி கிண்டல் அடித்துக் கொண்டே இருந்தாள். அந்த கிண்டலுக்காக லீனா வருத்தப்படவே இல்லை.

ஒரு தனியார் தொலைக்காட்சியில் பொது அறிவு வினாக்களை கேட்கும் நிகழ்ச்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது. அதில் சரியான விடைகளை சொல்பவர்களுக்கு ஆயிரக்கணக் கில் பணம் கொடுத்தனர். ஒரு சில கேள்வி களுக்குப் பதில் சொன்னால் லட்சம் ரூபாய் வரை பரிசு கொடுத் தார்கள். தனக்கும் பொது அறிவில் அதிகம் ஞானம் இருந்ததால் லீனா வும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டாள்.

டி.வியில் நிகழ்ச்சியை நடத்தியவர் கேள்வி களை கேட்க அதற்கு சரியான பதில்களை லீனா திக்காமல் திணறாமல் சொல்ல, அவளுக்கு கிடைக்கும் பரிசுப் பணத்தின் அளவு அதிகரித் துக் கொண்டேபோனது. நிகழ்ச்சி முடியும் போது லீனா சில லட்சங்களுக்கு அதிபதி ஆனாள்.

வீடு திரும்பிய அவளுக்கு உற்சாக வரவேற்பு கிடைத்தது. அந்த ஊர் மக்கள் எல்லோரும் அந்த நிகழ்ச்சியைப் பார்த்ததால் லீனாவைப் பெருமை யாகப் பேசினார்கள். பள்ளிக்கூடத்து தலைமை ஆசி ரியை நேராக வீட்டுக்கே வந்து லீனாவை பாராட்டி பூங்கொத்து கொடுத்து விட்டார்.

அந்த ஊரே சந்தோஷமாக பெரும் மகிழ்ச்சியில் இருந்து கொண்டிருக்க, பீனா மட்டும் தன் உண்டியலை கையில் வைத்துக் கொண்டு அழுதபடியே இருந்தாள்.

அவள் அழுகைக்கு என்ன காரணம் ?

பணத்தை சேமித்த அவளால் பணத்தை மட்டுமே சேமிக்க முடிந்தது. லீனாவோ புத்தகத்தை சேமித்தாள். அதனால் அறிவு, பெரும் புகழ், நிறைய பணம் போன்றவை அவளுக்கு சேர்ந்தன.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்




★ பெயர் - ஆர்.புஸ்பகுமார்
★ தரம் - 5ஏ
★ பாடசாலை - புனித அந்தோனியார் தமிழ் மகா வித்தியாலயம்.

### பாராட்டுப் பெறுவோர்...

1. மதுர்ஷனா, தரம் 1, கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி, கொழும்பு -15.
2. து.ஹரிஷ் கஜான், மட்டக்குழி, கொழும்பு -15.
3. கே.சஞ்சீவன், தரம் 6, வெஸ்லி கல்லூரி.
4. பி. நிவேதினி, தரம் 2, நுவரெலியா.

# எது கவர்ச்சி



நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

நம்மை கவர்ச்சிகரமானவர்களாக்க, மற்றவர்கள் மீது மரியாதை மற்றும் மற்றவர்களின் தேவையைக் கவனிக்கும் மனோபாவத்தை வெளிக்காட்ட வேண்டும். இக்கருத்தினையே 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்பர்.

நமது வார்த்தைகள் தான் நமது மனோபாவத்தை பிரதிபலிக்கின்றது. என்வே வார்த்தையைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்துங்கள். முட்டாள்தான் சிந்தனையின்றி பேசுகின்றான். ஆனால், அறிவாளியோ பேசுவதற்கு முன் சிந்திக்கிறான். மிக அதிகமாகப் பேசுவது ஆழ்ந்த பேச்சு ஆவதில்லை. குறைவாகப் பேசி நிறைய சிந்தனைகளை பிரதிபலியுங்கள். கசப்பு உணர்ச்சிகளுடன் பேசாமல் சாதுர்யமாகப் பேசி மற்றவர்களுக்கும் நமக்கும் இடையே உள்ள உறவுப் பாலத்தை பலப்படுத்த வேண்டும். சாதுர்யமான பேச்சு என்பது கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தைகளால் மற்றவரைக் கவரும் வண்ணம் அமைத்து விடுவதே ஆகும். மேலும் எந்த வார்த்தையை கூறுவது, எவற்றை கூறாமல் விடுவது என ஆராய்ந்து பயன்படுத்துவதும் ஆகும். பெற்றோர் எவ்வாறு தமது குழந்தைகளிடம் பேசுகிறார்களோ அவையே அக்குழந்தைகள் எவ்வாறு மற்றக் குழந்தைகளுடன் பழகுவார்கள் எனத் தீர்மானிக்கிறது.

மற்றவரைக் குறை கூறுவதும், ஒருவரைப் பற்றி பிறரிடம் புறங்கூறுவதும் கூடாது. குறை கூறுவது அவர்களின் மனதை வெகுவாகப் பாதித்து, தன்னம்பிக்கையைக் குறைத்து, நம்முடன் சகஜமாகப் பேசுவதைத் தடுக்கிறது; உண்மையை பேசவிடாமல் தடுக்கிறது. முகம் மலர புன்முறுவல் புரிவது மிக அவசியமாகும். புன்முறுவலானது ஒட்டுவாரொட்டி போல பரவும் தன்மையுடையது. அதுவே ஒரு பைசா செலவின்றி அனைவரின் முகமும் மலர ஏதுவாகும். புன்முறுவல் ஒருவரது நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்துகிறது. எனவே கவர்ச்சி பெற விரும்புபவர் உண்மையாக, போலியற்ற புன்முறுவல் உதிர்த்தல் நலம்.

மற்றவர்கள் நடத்தைக்கு முறையற்ற காரணம் கற்பிப்பது மனித குணம் ஆகும். மற்றவர்கள் சும்மா இருந்தாலும் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபடும் போதும் அவர்களை 'சந்தேகக் கண்ணோட்டத்தில் காண்பது' மனித குணமாகும். மாறாக, அவர் மீது நமது நல்ல எண்ணத்தை தெரிவிக்க ஆரம்பிப்போமானால், நமது ஆளுமையை கவர்ச்சியுடையதாக ஆக்குவோம்.

நாம் கூறுவதை மற்றவர் கவனிப்பதை போல மற்றவர் கூறுவதை நாமும் கவனிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

திறந்த மனதுடன் ஒருவர் தெரிவிக்கும் செய்தியைக் கூர்ந்து கவனிப்பது,

அடுத்தவர் பேசும் போது குறுக்கிடாமல் பேசவிடுவது,

பேச்சைக் கவனிக்க விடாமல் செய்யும் தடைகளைத் தவிர்ப்பது.

பேச்சுக்கான தலைப்பை மாற்றாமல் இருப்பது.

இவையெல்லாம் அடுத்தவரைக் கவரும் எளிய வழிகளாகும்.

ஒரு சாதாரண மனிதனை அதிபுத்திசாலியாக மாற்றுவது பயமில்லாத தன்னம்பிக்கை கலந்த சுறுசுறுப்பே. சுறு சுறுப்புடன் இருப்பது ஒரு பழக்கமே. எனவே கவர்ச்சிகரமாக நாம் விளங்க வாழ்க்கையை உற்சாகத்துடன் சுறு சுறுப்புடன் எதிர்கொள்ள நம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும்.

ஒருவரை நம் வசப்படுத்த அவருடன் நாம் இருக்கும் நேரத்தைப் பெருக்கிகொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனும் மற்றவர் தம்மைப் பாராட்ட வேண்டும் என்றே ஆசைப்படுகிறான். இருப்பினும் பாராட்டை வழங்குபவர், பாராட்டைப் பெறுபவரிடமிருந்து மீண்டும் அதே போன்ற பாராட்டை பெறவேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. பாராட்டைக் குறிப்பாகவும் உடனுக்குடனும் உண்மையுடனும் தெரிவித்தல் நலம்.

மனதைக் கவர்ந்து கொள்ளும் விஷயம் யாதெனில் விதண்டாவாதத்தைக் தவிர்ப்பது ஆகும். விதண்டாவாதம், யார் கூறுவது சரி என முயற்சிக்கும் நடவடிக்கையாகும். எவருடனும் விதண்டாவாதத்தை தவிர்ப்பது என்பது கருத்துப் பரிமாற்றத்தை நிகழ்த்துவதாகும். கருத்துப் பரிமாற்றம் எந்த கருத்து சரி என நிரூபிக்கும் முறையாகும். மற்றவர் என்ன கருத்தைக் கூறுகிறார், எந்த நோக்கத்தில் கூறுகிறார் என்று உணர்ந்து அக்கருத்தை வாங்கவும்! உணர்ச்சி பூர்வமான கருத்தாயிருந்தால் அந்த உணர்ச்சியின் தன்மை பற்றியும் ஆராய்ந்து மனதில் கொள்ளவேண்டும். அவர் கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கவேண்டுமானால், மனம்நோகாதபடி அதனை நேர்த்தியாகக் கூறவும் பழகிக் கொள்ளுதல் மிகவும் விரும்பக் கூடிய குணமாகும்.

நாம் கவர்ச்சியாக விளங்க எத்தகைய இடர்வரினும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும். அதுவே உறுதியான நல் உறவுகளை வளர்க்க, மற்றவருடன் தொடர்ந்து உறவாட அமைதியாக அமையும்.

எப்போதும் நன்றி மறக்க வேண்டாம். ஆனால் அந்நன்றியை மற்றவரிடமிருந்து எதிர்பார்க்கவும் வேண்டாம். நமது சுயநலமே மற்றவர்களுக்கு நன்றியை தெரிவிக்கும் நடத்தைக்கு தடைக்கல்லாக உள்ளது.

கடந்த காலத்தில் நமது வளர்ச்சிக்கு உதவியவர்களை சற்று எண்ணிப் பாருங்கள். பெற்றோர், ஆசிரியர், நண்பர்கள் ஆகியோர் நம் எண்ணங்களில் தோன்றுவர். அப்போது 'கடனே என அவர்கள் நமக்கு உதவி செய்ததாக' நாம் எண்ணியிருப்போம். ஆனால் உண்மையில் அவர்கள் தம் நேரத்தையும் செல்வத்தையும் சக்தியையும் உவந்தளித்தார்கள் என்பது தான் உண்மை. அப்பண்பே பிறர் நலம் பேணுவதாகிறது. எனவே நாம் நன்றி மறவாது இருக்க வேண்டும். நண்பராக இருப்பது, பிறரின் நம்பிக்கைக்குரியவராக இருப்பது, நகைச்சுவை உணர்வு கொண்டிருப்பது, நமக்கு துன்பம் தருபவரையும் மன்னிப்பது, படாடோபமின்றி வாழ்வது ஆகிய குணநலன்கள் ஒருவருக்கு கவர்ச்சியுள்ள ஆளுமையைப் பெற்றுத்தரும்.

---

# தமிழ்த் திரைப்படங்களில் தோன்றி நடித்த சாதனை நடிகர் பிரேம் நசீர்

பாலா சங்குப்பிள்ளை







தமிழ்த் திரைப்படங்களில் நடித்த மலையாள நடிகர் பிரேம் நசீர் 600 படங்களில் நடித்து யாரும் செய்யாத சாதனையை செய்து 'கின்னஸ்' புத்தகத்திலும் இடம்பெற்று விட்டார். இவர் 1989 இல் காலமானபோதும் இவர் தமிழில் நடித்த பல படங்கள் இன்றும் பேசப்படுகின்றன.

மலையாளப் படவுலகில் அன்று இவர் முடிசூடா மன்னனாக விளங்கினார். தமிழில் 30 படங்களிலும் மலையாளத்தில் 600 படங்களிலும் நடித்த இவர் இன்னொரு சாதனையையும் நிகழ்த்தியுள்ளார். அதாவது 600 படங்களிலும் இவர் கதாநாயகனாகவே நடித்துள்ளார்.

பிரேம் நசீர் தமிழில் முதலாவதாக தோன்றி நடித்த படம் ஏ.கே.வேலன் தயாரிப்பில் உருவான 'தை பிறந்தால் வழிபிறக்கும்'. இப்படத்தில் எஸ்.எஸ்.ராஜேந்திரனுடன் தோன்றி நடித்தார். இந்தப் படம் 100 நாட்கள் ஓடவே தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் இவரைத் தங்கள் படங்களில் நடிக்கவைக்க அதிகம் ஆர்வம் காட்டினார்கள்.

பிரேம் நசீர் சவுக்கார் ஜானகியுடன் ஜோடி சேர்ந்து நடித்த இரண்டாவது படம்தான் 'நல்ல இடத்துச் சம்பந்தம்' தொடர்ந்து பண்டரிபாயுடன் இணைந்து 'நான் வளர்த்த தங்கை' மற்றும் எம்.ராஜம், சந்திரகாந்தாவுடன் சேர்ந்து நடித்த 'பெரிய கோயில்' போன்ற படங்கள் வெளிவந்தன. 1959, 60களில் மீண்டும் எஸ்.எஸ்.ராஜேந் திரனுடன் இணைந்து நடித்த 'கல்யாணிக்குக் கல்யாணம்' படம் நன்றாக ஓடியது. தொடர்ந்து தேவிகா, பாலாஜியுடன் இணைந்து நடித்த சகோதரி, நடிகை ராகினியுடன் ஜோடியாக நடித்த 'இருமனம் கலந்தால் திருமணம்' எம். ஆர்.ராதாவுடன் நடித்த 'ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு' ஆகிய படங்களும் வெளிவந்தன.

பிரேம்நசீர் கதாநாயகனாக நடித்த மற்றொரு சிறந்த வெற்றிப்படம் 'வண்ணக் கிளி'. மனோகர் இரண்டாவது கதாநாகனாக நடித்த இப்படத்தை மொடேர்ன் தியேட்டரார் தயாரித்தார்கள். 'மாட்டுக்கார வேலா உன் மாட்டைக் கொஞ்சம் பார்த்துக்கோ...', 'அடிக்கிற கைதான் அணைக்கும்' போன்ற இனிமையான மனது மறக்காத பாடல்களை இன்று கேட்டாலும் பரவசமாகும்.

அன்றைய பிரபலமான பிரசித்திபெற்ற நடிகரான மறைந்த நடிகர் திலகம் சிவாஜியுடன் நடிப்பதில் அதிக ஆர்வம்காட்டினார் பிரேம் நசீர். மலையாளத்தில் அன்றைய சூப்பர் ஸ்டாராக விளங்கிய பிரேம் நசீருக்கு சிவாஜியுடன் நடிக்க வேண்டும் என்ற விருப்பம் அதிகமாக இருந்து வந்தது. 'பாலும் பழமும்', 'முரடன் முத்து' போன்ற படங்களில் சிவாஜியுடன் சேர்ந்து இவர் நடித்தார். இந்தப் படங்கள் 100நாட்களுக்கு மேல் ஓடின.

இவர் ஒரு மலையாள நடிகராக இருந்தபோதும் தமிழ்நடிகர்கள் மேல் அதிகம் அன்புள்ளவராக இருந்தார். தமிழைத் தெளிவாக பிழையின்றி உச்சரித்தார். தொடர்ந்து தமிழ்ப் படங்களில் நடிப்பதில் ஆர்வம்காட்டியபோதும் 1964 ஆம் ஆண்டுக் குப் பின் மலையாளத் திரைப்படங்களில் வாய்ப்புப் பெருகியதால் தமிழ்ப் படங்களில் நடிக்கமுடியாமல் போய்விட்டது. ஆனாலும் இவர் நடித்த சில மலையாளப் படங்கள் நேரடியாகவும் மொழிமாற்றங்களுடனும் தமிழகத்தில் வெளியாகி வெற்றிகரமாக ஓடியமைக்குக் காரணம் பிரேம்நசீர். ஏற்கனவே தமிழகத்தில் தெரிந்த நடிகராக இருந்தமைதான்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., ஆந்திரா கடவுள் (தேவுடா), என்.டி.ராமராவ் போன்றவர்கள் சினிமாவிலிருந்து அரசியலுக்கு வந்து வெற்றிக்கொடி நாட்டிய தைப் போல பிரேம் நசீரும் அரசியலுக்கு வந்தபோதும் மக்கள் அதை அங்கீகரிக்க வில்லை. அவரை ஒரு நடிகராகவே அவர்கள் பார்க்க விரும்பினார்கள்.

பிரேம் நசீரின் வாரிசான ஷாநவாஸ் சில திரைப்படங்களில் நடித்தார். அவற்றில் ஒருசில தமிழ்ப் படங்களும் அடங்கும். ஆனால், தந்தையைப் போல தனயனால் திரைப்படத்துறையில் வெற்றிபெறமுடியவில்லை. இன்றைய மலையாள சூப்பர் ஸ்டார்களாகத் திகழும் 'மம்முட்டி' மோகன் லால் போன்றவர்கள் ஒரு சில தமிழ்த் திரைப்படங்களில் நடித்திருந்தாலும் கூட பிரேம் நசீர் அளவுக்கு அவர்களால் தமிழ் ரசிகர் உள்ளங்களில் இடம்பிடிக்க முடியவில்லை. அன்று வெவ் வேறு மாநிலங்களைச் சேர்ந்த நடிகர்களாக இருந்தாலும் அவர்களிடம் வேற்றுமை இருந்ததில்லை. ஆனால், இன்றைய அரசியல் கருத்து வேறுபாடுகளினால் மாநில நடிகர்களிடையே யும் வேற்றுமைகள் அதிகரித்துள்ளமை வேதனையான விடயமாகும்.



# நம்பிக்கைதானே வாழ்க்கை!

**உண்மைக்கதை**

இருட்டும் நேரம். மிக வேகமாக கால்களை எடுத்துப் போட்டு நடந்தேன். இன்னும் கொஞ்சத் தூரம் போனால் வீடு வந்துவிடும். ஆனால், இரண்டு கைகளிலும் கனமான பைகள். எல்லாம் வீட்டுக்குத் தேவையான சாமான்கள். வாரத்துக்கு ஒரு நாள் மொத்தமாக இவற்றை வாங்கி வந்து போடக்கூட அவருக்கு நேரம் இருப்பதில்லை. அதையும் நானேதான் செய்ய வேண்டும்.

மழைகாலம் தான் என்றாலும் வியர்வையில் தொப்பலாக நனைந்து விட்டேன். ஏதாவது ஒரு ஆட்டோவில் ஏறிக் கொண்டால் தேவலை என்று இருந்தது. அப்போது பார்த்து என் அருகிலேயே ஒரு ஆட்டோ வந்து நின்றது.

'அட, சொல்லி வச்ச மாதிரியே ஆட்டோ வந்து நிற்குதே...'

நான் ஆச்சரியத்தோடு அந்த ஆட்டோ டிரைவரைப் பார்த்தேன். நான் யோசிப்பதைக் கண்ட டிரைவர், ''மேடம், அதோ அங்கு நிக்கிறாரே, அவர்தான் இந்த ஆட்டோவை அனுப்பிவைத்தார்''. என்றான்.

'உங்களுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை?' என்று சுப்புவைக் கேட்டுவிடத் தோன்றியது. ஆனால் நடு வீதியில் எதற்கு விவாதம் என்று மௌனமாக ஆட்டோவில் ஏறிக்கொண்டேன்.

ஆட்டோவை சுப்புவின் ஸ்கூட்டர் பின் தொடர்ந்தது. எங்களது எதிர்வீட்டில் தான் சுப்புவும் இருக்கிறார். தினமும் நானும் எனது கணவரும் சண்டையிடுவதைப் பார்ப்பவர் இவர். அதனால் தான் என் மீது இந்த கரிசனையோ என்று நினைத்துக் கொண்டேன்.

இதுவே, நானும் என் கணவரும் மார்க்கெட் வந்து, நான் ஆட்டோ பிடிக்கலாம் என்று சொல்லியிருந்தால்?

''ஏன் மகாராணியால் நடக்க முடியாதோ?'' என்று கிண்டலாகக் குத்திக் காட்டியிருப்பார்.

என் கணவர், பெயருக்கு ஏற்ற மாதிரியே ராஜாதான். ஆம், நானும் என் பிள்ளைகளும் அவரது அதிகாரத்தை முழுமையாக ஏற்று அடிமைகள் போலத்தான் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கிறோம்.

அலுவலகத்தில் அவருக்கு உயர்ந்த பதவி, சகல வசதிகளும் நிறைந்த வீடு என எல்லாம் இருந்தும் மனதில் மட்டும் நிம்மதியே இல்லை. காரணம், அவரது குடிப்பழக்கம்.

ஏதாவது கேட்டால், ''நான் குடிச்சா உனக்கென்ன? பேசாம சமைச்சுப் போட்டு, குழந்தைகளைப் பார்த்துக்கொண்டு வீட்டோட இரு. அதான் உன் வேலை புரிஞ்சுதா?'' என்று என் வாயை அடைத்து விடுவார்.

அவர் இப்படிச் சொல்லும் போதெல்லாம் சுடச் சுட அவருக்கு பதில் கொடுத்து வாயை அடைத்து விட நினைப்பேன். ஆனால், அப்படிக் கேட்டு விட்டால் பிறகு அடுத்த நிமிடமே பெட்டி படுக்கையோடு என் குழந்தைகளைத் தூக்கி கொண்டு தாய் வீட்டுக்கு ஓட வேண்டியது தான்.

குழந்தைகள் அனுவுக்கும் ஆனந்துவுக்கும் இப்போதே வீட்டுச் சூழ்நிலை நன்கு புரிய ஆரம்பித்து விட்டது. அனுதான் பெரியவள். அம்மாவின் கஷ்டத்தை பிறந்ததிலிருந்தே அவள் பார்த்து வருவதாலோ என்னமோ, எனக்கு எப்போதும் அனுசரணையாக நடந்து கொள்வாள். ஞாயிற்றுக்கிழமை வந்தாலே போதும், ''அம்மா, பேசாம நாம மூணு பேரும் எங்காவது வெளிய போயிட்டு வரலாமா?'' என்று கேட்பாள். காரணம், குடித்துவிட்டு அவர் அடிக்கும் லூட்டிகள் அப்படி.

ஆனால் இதற்கு என் அருமை கணவர் சம்மதம் தர வேண்டுமே! அவருக்கு எதற்கெடுத்தாலும் சந்தேகம்.

''இல்லடா செல்லம்... அப்பாவுக்கு இன்னைக்கு உடம்பு சரியில்ல, அடுத்த வாரம் எங்காவது வெளியில கூட்டிக்கொண்டு போறேன்'' என்பேன்.

''போங்க... மம்மி, நீங்க எப்பவுமே இதே பதிலைத்தான் சொல்றீங்க. ஆனந்த் வாடா நாம விளையாடலாம்'' என்று தம்பியை அழைத்துக்கொண்டு செல்வாள்.

திருமணமான புதிதில், இவர் என் மீது அன்பாகத்தான் இருந்தார். ஆனால், நாளாக ஆக தவறான சகவாசங்கள் அவரை ஒரு குடிகாரனாக்கிவிட்டன. 'ஒரு பெண் நினைத்தால் முடியாதது எதுவுமே இல்லை' என்று நிறையப் பேர் சொன்னதைக் கேட்டு, அவரைத் திருத்த முயற்சி செய்தேன். ஆனால், அது முடியாத விஷயமாகப் போகவே, அமைதியாகி விட்டேன்.

இந்தச் சூழ்நிலையில் தான் எதிர்வீட்டுக்கு சுப்பு குடி வந்தார். ஒரு டி.வி. சேர்வீஸ் சென்டர் நடத்தி வந்தார். '35 வயது ஆகிறது. ஏனோ திருமணம் செய்து கொள்ளவில்லை.

ஞாயிறு என்றாலே, என் கணவர் குடித்து விட்டு வந்து என்னை அடிப்பதைப் பார்க்க வேண்டிய கட்டாயம், சுப்புவுக்கு. இதிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் வீட்டைப் பூட்டிக் கொண்டு அவர் வெளியே செல்ல வேண்டும். பலமுறை அப்படிச் செய்திருக்கிறார். ஏனோ என் மீது அவருக்கு ஒரு இரக்கம். 'இதுவேற மாதிரி உறவில் முடிந்துவிடக் கூடாதே என்ற பயத்தில், நான் அவரைப் பார்த்து சிரிப்பது கூட கிடையாது.

ஒரு முறை, எங்கள் வீட்டு டி.வி பழுதாகிவிட, சுப்புதான் வந்து சரி செய்து கொடுத்தார். அப்போது சிரிக்க வேண்டியது அவசியமாகிப் போனது.

அதன் பிறகு எப்போதாவது பார்த்தால் சிரித்துக் கொள்வோம். அவ்வளவுதான். இன்று மார்க்கெட் சென்று விட்டு திரும்பிய எனக்கு ஆட்டோ பிடித்துக் கொடுத்திருக்கிறார்.

ஆனால், இது ஊரார் பார்வைக்கு வேறு விதமாக தோன்றக் கூடாதுஅல்லவா! நேரம் கிடைக்கும் போது சுப்புவிடம் சொல்லிவிட வேண்டியதுதான். ஆனால் அப்படியொரு நேரமே வரவில்லை.

ஒரு நாள் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. கதவைத் திறந்தால், அங்கு சுப்புவின் கடைப் பையன் நின்றுகொண்டிருந்தான்.

''அக்கா, இதை எங்க சார் உங்களிடம் கொடுக்கச் சொன்னார்'' என்று ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டு ஓடி விட்டான்.

அதை வாங்கிய நான், என்ன கடிதம் என்று பிரித்துப் பார்த்தேன்.

முதல் வரியைப் படித்ததும், எனக்கு கோபம் கோபமாக வந்தது. இருப்பினும், பொறுமை அவசியம் என்று கடிதத்தைப் படித்தேன்.

**காவேரிக்கு சுப்பு எழுதுவது, என் பெற்றோர் வற்புறுத்தியும் நான் இதுவரை திருமணம் செய்து கொள்ளவில்லை. ஏனோ, எனக்குத் திருமணம் என்ற பந்தமே அர்த்தமற்றதுபோல் தோன்றியது.**

**ஆனால், உங்களைப் பார்த்ததும்அந்த எண்ணம் மாறியது. உங்கள் கணவர் தங்களை மிகவும் கொடுமைப்படுத்துகிறார். தினமும் அடி வாங்கி பல சித்திரவதைகளை அனுபவிக்கிறீர்கள். உங்களைப் புரிந்து கொள்ளாத ஒரு குடிகாரக் கணவனிடம் சேர்ந்து வாழத்தான் வேண்டுமா? உங்களுக்காக இல்லையெனிலும் உங்கள் பிள்ளைகளின் நலனை யோசித்து அவரை விட்டுப் பிரிந்து வந்து விடலாமே? நாம் எங்காவது சென்று திருமணம் செய்து கொண்டு புது வாழ்க்கை வாழலாமே. உங்கள் மீது இருக்கும் அனுதாபத்திலும் அன்பிலும் இதை எழுதுகிறேன். உங்களுக்கு சம்மதம் என்றால் நாளை காலை 11மணிக்கு உங்களுக்காக பஸ் ஸ்டொப்பில் காத்து இருப்பேன்.**

**இப்படிக்கு**

**சுப்பு**

''என்ன தைரியத்தில் இப்படி எழுதுவான். இது பற்றி அவரிடம் சொன்னாலே போதும். அவனை வெட்டிப்போட்டு என்னையும் துரத்திவிடுவார். அப்போது என் குழந்தைகளின் கதி?'

அன்று இரவு எனக்கு தூக்கமே வரவில்லை. மறுநாள் பொழுது விடிந்ததும், குழந்தைகளை கிளப்பி பள்ளிக்கு அனுப்பினேன். அவரும் அலுவலகம் சென்று விட்டார். அந்தக் கடிதத்தைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஆத்திரமாக வந்தது.

'ஆகட்டும், எப்படியும் சுப்பு தன் வீட்டுக்கு வந்துதானே தீர வேண்டும். அப்போது பார்த்துக் கொள்ளலாம்.'

ஏனோ தெரியவில்லை. அன்று முழுவதும் சுப்பு வீட்டுக்கே வரவில்லை.

அடுத்த நாள் காலை மணி 10.30ஆகி விட்டது. சரி இதற்கு ஒரு முடிவு காண வேண்டும் என்ற எண்ணத்துடன் தயார் ஆனேன்.

அவன் சொன்னபடி, அந்த பஸ் ஸ்டொப்புக்குச் சென்றேன். அப்போது மணி 10.45. வெகுநேரமாக நான் மட்டும் நின்று கொண்டிருந்தேன். எனக்கு என்னவோ போலிருந்தது.

மணி 10.55. அப்போது, தூரத்தில் சுப்பு வருவது தெரிந்தது.

அவனது முகம் முழுவதும் சிரிப்பு. இவ்வளவு சீக்கிரம் நான் அவனுக்கு மசிந்துவிட்டேனே என்ற நினைப்பில் வந்த மகிழ்ச்சிப் புன்னகையாக இருக்கலாம் என நினைத்துக் கொணடேன்.

அருகில் வந்ததும், ''பக்கத்தில எங்காவது பூங்காவில் போய் பேசலாமா?'' என்ற கேட்டேன்.

''சரி'' என்று ஒன்றும் புரியாமல் தலையாட்டினான்.

அந்தப் பூங்காவில் ஒரு ஓரமாக இருந்த சிமெனட் பெஞ்சில் அமர்ந்தோம்.

''சொல்லுங்க என்ன பேசணும்?'' என்று கேட்டான் சுப்பு.

''நீங்க என்னைப் பத்தி என்ன நினைச்சுக் கிட்டிருக்கீங்க? எதுக்காக இப்படி ஒரு லெட்டர் எழுதினீங்க? நான் அந்த மாதிரி பெண் கிடையாது. இது மட்டும் எங்க வீட்டுக்காரருக்கு தெரிஞ்சா என்னாகும் தெரியுமா?''

என்னால் மேற்கொண்டு பேச முடியவில்லை. அழுகைதான் வந்தது.

''ஐயோ, நீங்கதான் என்னைப் பற்றி தப்பா புரிஞ்சிட்டு இருக்கீங்க. உங்களுக்கு உதவத்தான் அப்படியொரு லெட்டரை எழுதினேன்.'' என்று என்னை சமாதானப்படுத்த முயன்றான் சுப்பு.

''கல்யாணம் என்கிறது நீங்க நினைகிற மாதிரி எப்ப வேண்டுமென்றாலும் அறுத்துப் போட்டுட்டு வாற உறவில்லை. இப்ப என் வீட்டுக்காரர் குடிகாரனா, என் குழந்தைகளுக்கு மோசமான தகப்பனா இருக்கலாம். ஆனா, அவர் திருந்திடுவார் என்கிற நம்பிக்கை எனக்கிருக்கு. நம்பிக்கை தானே வாழ்க்கை? இந்த நாட்டோட கலாசாரமும் இதுதான். கணவன் இப்படி மோசமா இருந்தா உடனே அறுத்துப் போட்டுட்டு அடுத்தவன் கூட ஓடிப் போயிடலாம், அது தான் புரட்சி என்று நிறையப்பேர் நினைச்சிட்டிருக்காங்க. அப்படிப் போனவங்களுக்குத்தான் தெரியும், அதுக்கப்புறம் அவங்க பட்ட நரக

(27 ஆம் பக்கம் பார்க்க)



# வாழ்வும் இலக்கியமும் ஒரு சர்ச்சை

''இலக்கியம் சோறுபோடுமா?'' என்று அத்யந்த நண்பரொருவர் கேட்டார்.

'இதென்னடா இப்படி ஒரு கேள்வி' என்று தலைக்கேசத்தை பிய்த்துக்கொண்ட போதுதான், அன்னாரின் கேள்விக்கு பதில் கிடைத்தது.

'எப்பப்பாரு கேட்டாலும் அ[illegible]வீட்டில் இல்லை. இரவுவரை [illegible]க் கூட்டம் இந்தக் கூட்டம், ஆளைப்பிடிக்க முடியவில்லை. வாரநாட்கள் தான் இப்படி என்றால் வாரஇறுதிநாட்களிலும் ஆளைப்பிடிக்க முடியவில்லை' என்பதுதான் நண்பரின் பிலாக்கணத்திற்கு காரணம்.

இலக்கியமெல்லாம் அவருக்குப் பிடிக்காத விசயம். நூல்கள் வாசிப்பதென்றால் துளிகூட பிடிக்காது.

'எதுக்குடா அப்பா இந்த வேலை, ரி.வியைத் திறந்தால் என்ன தேவையோ அத்தனையும் இருக்கு, இதைவிட்டுப்போட்டு கொட்டுகொட்டுன்னு முழுசி முழுசி புத்தகம் வாசிக்கிறதும் கண்ணை கண்ணை கசக்கிக் கொள்கிறதும் தேவைதானா? [illegible]கதை, நாவல், கவிதைன்னு

**-கே.வி-**

வாசிக்கத்தான் வேண்டுமா? எத்தனை தொலைக்காட்சி தொடர்கள், நிகழ்ச்சிகள் அடடா என்று சப்புக்கொட்டிய நண்பர் வாசிப்பது, எழுதுவது, இலக்கியக் கூட்டங்களில் கலந்துகொள்வது அனைத்துக்கும் கும்பிடு போடச்சொல்லி நக்கலடிப்பார். இதெல்லாம் தேவை இல்லாத விசயம் என்பது அவர் கொள்கை.

இவ்வளவுக்கும் ஆனானப்பட்ட பிரச்சினைகள் நண்பருக்குண்டு. அதிலும் பொல்லாத குடும்ப சமாச்சாரக்காரர். கணவன் - மனைவி இருவருக்குமிடையில் எப்பொழுதுமே சண்டை சச்சரவுதான். எதுக்கு சண்டை, ஏன் சண்டை என்றெல்லாம் அடியேன் விசாரிப்பதில்லை. அது நாகரிகம் அல்ல என்பது நம் கொள்கை. எனக்கும் என் சகதர்மினிக்கும் இடையில் ஆயிரம் பிச்சல் பிடுங்கல் இருந்தாலும் அதை நான் வெளியில் சொல்வதில்லை. ஏனெனில், எங்கள் பிச்சல் பிடுங்கல் சில வினாடிகள் தான். அது பனிக்கட்டியாக கரைந்துவிடும். சுமுகமான உரையாடல் அடுத்தகணமே ஆரம்பித்துவிடும். சமையற்கட்டிலிருந்து புதுவித மான, எனக்குப் பிடித்தமான, சுவையான குழம்பின் மணம் நாசியை ஊடுருவி நாவை அல்லல்படுத்தும். இதற்காகவே பிச்சல் பிடுங்கலில் ஈடுபடலாமோ என்று மனம் படபடக்கும்.

இவ்வளவுக்கும் என்ன காரணம் எண்ணிப் பார்த்தபோது எமது பழக்கவழக்கம்தான் என்று தோன்றியது. நண்பரும் சகதர்மினியும் எதிலும் நெகட்டிவ் மனம் கொண்டவர்கள். எதை எடுத்துக்கொண்டாலும் வேண்டாம் வேண்டாம் என்று மோதிக்கொள் வார்கள். எங்களைப் பொறுத்த வரையில் அனைத்துமே பொசிட் டிவ் மனம்தான். நான் ஒரு புத்தகத்தை வாசித்துவிட்டு சா! நல்ல புத்தகம் என்று சொன்னால், என்னவேலை இருந்தாலும் அதை வாசித்துவிட்டு இரண்டுமுறை சா! சா! போட்டுவிட்டு அது 'வெரிகுட் புக்' என்பாள் என் துணைவி. தொலைக்காட்சித் தொடர் முதல் இந்திய கிரிக்கெட் போட்டிவரை சச்சினின் அதிரடிக்கு நான் கொடுக்கும் புகழ்மாலைக்கு அவள் டபிள் மாலைகள் போடுவாள்.

இலக்கியம் என்றால், இலக்கியக் கூட்டம் என்றால் அலர்ஜியாகி விட்ட என் உறவுக்கார அத்தியந்த நண்பருக்கும் என் சகதர்மினிக்கும்தான் எத்தனை வித்தியாசம். 'ஏண்டா அங்கெல்லாம் போறே' என்பார் அவர். எனக்கு இரவு சாப்பாடு வைக்கும் போதே என்னங்க அங்கே நடந்தது நீங்களும் பேசுனீங்களா என்று ஆர்வமோடு சகதர்மினி கேட்பாள். நான் கூட்டத்தில் எதையாவது அழுதுவடித்திருந்தாலும் அந்தச் சமாசாரத்தைச் சொன்னாலே போதும் ஏதோ பெரிய நகைச்சுவை கதையை நான் சொல்லிவிட்டதாக கருதி விழுந்து விழுந்து சிரிப்பாள். இலக்கியக்கூட்டத்தில் கிடைத்த ஆனந்தத்தைவிட அவள் சிரிப்பு பேரானந்தத்தைத் தரும்.

இலக்கியம் சோறுபோடுமா என்று பலர் கேட்பதுண்டு. இந்தக் கேள்விக்கு எப்படித்தான் அர்த்தம் தேடுவது. இலக்கியம் சோறுமட்டுமல்ல அது வாழ்க்கையையே வளப்படுத்துகின்றது. இலக்கியத்தை பிசினஸ் ஆக்குபவர்களால்தான் அது நொடித்துப்போய்விடுகிறது.

வாழும்கலை என்பது வாழ்வெல் லாம் கொண்டாட்டம் என்பதாகும். உங்களை உணருங்கள், அன்பில் மலருங்கள்' என்கிறார் மனக்கலை நிபுணர் தி.கணேஷ் ஜி அவர்கள். இலக்கியம் மனத்தை செழுமைப் படுத்தி வாழ்வை மேன்மைப் படுத்துகின்றது என்றும் அவர் விளக்கம் தருகின்றார்.

பெரும்பாலான எழுத்தாளர்கள், பொறாமை பிடித்தவர்களாகவும் புகழ், ஆசை மிக்கவர்களாகவும் இருக்கிறார்களே என்று இன் னொரு நண்பர் பிடரிமயிரை இழுத்தார்.

அதற்குக் காரணம் இலக் கியத்தை ஒரு சமூகப்பணியாக மட்டும் அல்லாது தமது மனத்தை செழுமைப்படுத்தும் ஆயுதமாக வும் மாற்றிக்கொள்ளாத குறைபாடேயாகும்.

வாழும்கலை என்பது ஓர் உன்னதமான பயிற்சியாகும். அபிலாஷைகள் மலிந்துவிட்ட உலகம் டென்சன் மயமானது. வாழ்வை செழுமைப்படுத்திக் கொள்ள இது ஓர் அற்புதமான கருவியாகத் திகழ்கிறது. இயந்திர மயமான வாழ்வு,பரபரப்பான சூழல் இவற்றிலிருந்து விடுபட்டு, நிம்மதி, மனச்சாந்தி இவற்றைக் கைப்பற்றிக்கொள்வதற்கு இலக்கியம் ஒரு கருவி யாகவே அமைந்து விடுகிறது.




மன அழுத்தம் என்பது பெரும் சுமையாகும். இதனால், ஏற்படும் நோய்களுக்கு அளவில்லை. துன்பத்தைக் கண்டு துவண்டுவிடுகிறது மனம். இவற்றை அழிக்கவல்ல சக்தி இலக்கியத்திற்கே உண்டு. இலக்கியம் முதல் நாம் பெரிதும் அனைத்து நற்குணங்களும் நம்முள் புல்பூண்டாகிக் கிடக்கும் தீயவை அனைத்தையும் அகற்றிவிடுகின்றது. இலக்கியம் சோறுமட்டுமல்ல. வாழ்க்கையையே வளப்படுத்துகின்றது என்பது இதனால்தான்.

மரபுரீதியான பழம்இலக்கியங் களுக்கு மட்டுமல்ல. நவீன இலக்கியத்துக்கும் இந்த ஆற்றல் உள்ளது. சமூகமாற்றங்கள் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான நாடுகளில் தோன்றியுள்ள அற்புதமான நாவல்களே இவற்றுக்கு அரும் சான்றாகும்.




## கலையே என் வாழ்வின் நிலை மாற்றினாய்

''நாட்டில்பலஅவசியங்களுக்கும் பஞ்சமோ பஞ்சம். பட்டமளிப்பு விழாக்களுக்கு பஞ்சமில்லை. இதற்காக முண்டியடித்துக்கொண்டு ஆலாய்ப் பறப்பவர்களுக்கும் பஞ்சமில்லை. அரச கலாபூஷணம் முதல் பிளக் பெல்ட் காரர்களின் கலாநிதிப் பட்டங்கள் வரை நான், நீ என்று ஒரே முண்டியடிப்புத்தான்''.

'அடேயங்கப்பா!''

''ஆனால், சில நல்ல கலைஞர் கள், பல ஆற்றல்கள் கொண்டவர்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. முன்னாள் தினகரன் ஆசிரியர், அமரர் சிவகுருநாதன் ஐயா இதுபற்றி அழகான, சுவைமிக்க கதை ஒன்று சொன்னார். மனுஷன் பேசினால் சபையிலே சிரிப்பு தூள் பரத்தும்''.

''அப்புடி என்ன சொன்னவர் அம்மான்?''

''அவர் தினகரன் ஆசிரியராக இருந்தவர் அல்லே, அப்ப நடந்த பல சம்பவங்களில் ஒன்றை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற கூட்டமொன்றிலே ஒருக்கா அவிழ்த்துவிட்டார்''.

''என்ன கதைசொல்லுங்கோவன்''

''ஒரு பத்திரிகையின்ற ஆசிரியர் என்றால் செல்வாக்கு ஒருபடி உச்சம் தானே!. பொன்னாடை போர்த்தல், பட்டம் கிட்டம் என்று விழாக்கள் பற்றிய படங்களை அள்ளிக்கொண்டு போய் ஐயாவுக்கு ஒரு புகழ் அபிஷேக மழை பொழிந்து தலையிலே அடித்துப் போடலாம் அல்லே''

''என்ட தம்புரானே! இப்புடி யதார்த்தத்தை கொட்டித் தள்ளுரீர்''

''இதுநான் சொல்லேல்லே மோனே. அந்த சிவகுருநாதன் ஐயா சொன்னவர். அதுவும் சொக்கல்லோ சண்முகநாதன் என்றவொரு நல்ல கலைஞரின்ட வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின் முடிவிலேதான் இப்புடிப் பேசினவர். சோக்கல்லோ ஒரு நல்ல கலைஞன். கலைஞன் என்ற ரீதியில் என்னென்னவோ வித்தைகள் கற்றவர். மேடையில் செய்து காட்டியவர். அப்புடிப்பட்ட ஒரு நல்ல கலைஞருக்கு இதுவரை ஒரு பட்டத்தையும் எந்தவொரு அரசோ, சீமானோ வழங்கவில்லை''.

''மெய்யே என்ட செல்வச்சந்நிதியானே!''

''இதுல பகிடி என்னென்றால் மோனே! எனக்கென்றால் இந்தக் கலைகளிலே ஒரு இழவும் தெரியும். பத்திரிகை அலுவலகத்திலே பொடியங்கள் அங்கே வோடி, இங்கே வோடி என்னென்னவோ எழுதிக்கொண்டுவர அவற்றைச் சப் எடிட்டர்ஸ் காற்புள்ளி, அரைப்புள்ளி போட்டு, சிலபகுதிகளை கழுதையை அறுக்குமாப் போல் அங்கேயும் இங்கேயும் வெட்டிக்குதறி அவற்றை அச்சாக்கி அதுண்ட போட்டோ கொப்பியை மேசையிலே போடுவாங்கள். அப்புடியே மேலிருந்து கீழேயும் ஒருநோட்டம் விட்டு, சிலவேளை ஒன்றையும் கவனியாமலே சிவப்பு பேனையிலே டிக்போட்டு கூடவே ஒரு வண்ணான் குறியும் போட்டு அனுப்பிப் போடுவேன்''.

''சா! ஷோக்கான உத்தியோகம் தான்''

''அந்த உத்தியோகத்திற்காக எனக்கு கலாசூரிப் பட்டம் தந்தவங்கள். அதுக்கு என்ன அர்த்தம் என்று இதுவரைக்கும் எனக்கு தெரியாது. கலாசூரி என்றால் வண்ணான் குறிபோடுபவருக்கு தருகிற பட்ட மாக்கும் என்று நினைச்சு இருந்து போட்டன். பாவம் சோக்கல்லோ, அவருக்குத் தெரிஞ்ச அறுபத்து நான்கு கலைகளையும் விட்டுப்போட்டு டோபி குறிபோடும் தொழிலைப் படிச்சிருக்கலாம்''.

''கிழிஞ்சுது போங்கோ!''

## ஒரு சகலகலாவல்லவருக்கு டாக்டர் பட்டம்

''அம்மான்! என்ன இந்த ஓட்டம் ஓடுரியல். அடுத்த ஒலிம் பிற்குக்கு படு பயங்கரமான பயிற்சி யில் ஈடுபட்டிருக்கிறியலாக்கும்?''

''அதுவும் சரிதாண்டா மோனே. இந்தக் காலத்துல ஓடிஓடிதானே காரியம். செய்விக்கவேண்டி கிடக்கு''

''அப்புடி என்ன தலைபோகிற காரியம் ஆட்டோ காசுதான் கட்டுப்படாது என்றால் பஸ்ஸுக்க என்றாலும் வெளவால் புடியிலே தொங்கிக்கொண்டுபோறதுதானே''.

''கிழிஞ்சுது போ. போய்த் தொலையுங்கோ என்று கிண்டலடிப் பாக்கும்''.

''அம்மான் பிழையாக நினைச் சுப் போட்டியல்''.

''சே! சே! கோவியாத ராசா. அம்மான் சொல்லுறதை எல்லாரும் பிழையா எண்ணிப்போட்டு, ஆளை முடியுங்கடா என்று போட்டிபோட்டு திரியுனமாம். அம்மானுக்கு அந்த நினைப்பொண் டும் கிடையாது. டேக் இட் ஈசி' ரகம் அவர்''.

''அது சரி எங்க ஓடுரியல்''

''என்ர பிரண்ட் ஒருவருக்கு டாக்டர் பட்டம் கொடுக்கினம். மனுசன் அரசியல் பத்தி அது இதுவென்று எழுதித் தள்ளுரவர். அதுமட்டும் இல்லாது ஒவ்வொரு சா வீட்டிற்கும் ஓட்டோடிச்சென்று சாவைப் பற்றிய தத்துவங்களை யெல்லாம் ஓங்காரக் குரலில் பாடித்தீர்ப்பார். அதுமட்டுமல்லாது மயானபூமிக்கும் வந்து மரணம் பற்றி லெக்சர் அடிப்பார். ஒரு கவிஞருக்கு மயானப் பூமியிலே கல்லறை மீது சிலை எழுப்பிய பெருமைக்கும் ஆளானவர் இந்த மகான்''.

''என்ட தம்புரானே! இப்புடி ஒரு ஜீவன்''.

''அவருக்குத்தான் பட்டம் கொடுக்கினம். அதைப் பார்க்கத்தான் இந்த ஓட்டம்''

''அடிசக்கை! நானும் வரட்டே அம்மான்!''

''ஓமோம்! அதுக்கென்ன வாரும்''

மண்டபம் ஜே ஜே கோலம் பூண்டிருக்கிறது.

''அம்மான்! மேடையிலே கொஞ்சம் அரசியல் பிரமுகர்களும் ஒன்றிரண்டு நோஞ்சான் ஆசாமி களும் அல்லோ இருக்கினம்''

''அந்தக் கவலையை விடு ராசா. மேடையில் இருப்பவர்களை யாரென்று நினைச்சனி. கராட்டேயில் பிளக்பெல்ட் எடுத்தவங்கள். இவர்கள் தான் பட்டம் கொடுப்பவர்கள்''.

''அதுசரி அம்மான். அதோ வெள்ளை கோட்டும் சூட்டும் தொப்பையும் தாடியும் வாய்நிறை வெத்திலயும் கண்ணாடியுமாக ஒருத்தர் நிக்குராரே அவருக்கே டாக்டர் பட்டம்''.

''ஓமோம்! ஓமோம்!''

''என்ட தம்புரானே! போனவாரம் அந்த ரோட்டடியிலே தண்ணி போட்ட நிலையிலே மல்லாக்காகவும் விழுந்து கிடந்தவர் அல்லோ இவர்''.

''அடப்பாவி''.




ஆக்கம்: ஜூலியட்




பிரிட்டிஷ்அரண்மனையில் யாழ் இசைப்பதற்கு என்றே தனியாக கலைஞர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர். இடையில் திடீரென இப்பதவிக்கு கலைஞர்களை நியமிப்பது நிறுத்தப்பட்டது. ஏழு ஆண்டுகளுக்கு முன் இளவரசர் சார்ள்ஸ் இப்பதவியை மீண்டும் கொண்டு வந்தார். வேல்ஸ் அரண்மனையின் யாழ் இசைக்கலைஞர் பதவியில் நியமிக்கப்பட்டுள்ள கிளாரி ஜோன்ஸ், யாழுடன் காட்சி அளிக்கிறார்.




அரைகுறை ஆடையுடன் பேட்டி எடுத்துக்கொண்டு இருப்பவர் ஹேலி எக்விண்டன். நியூயோர்க்கின் ரைம்ஸ் சதுக்கத்தில் தான் இந்தக் காட்சி இடம்பெற்றது. 31 வயதாகும் இந்தக் கனடா அம்மணி இந்தக்கோலத்தில் பேட்டி எடுக்கக் காரணம் 'நேக்கட் பிரட்காஸ்டிங் நெற்வேக்' என்ற ரி.வி.சனல்.

இந்தச் சனலில் செய்தி வாசிப்பது ரொம்பவும் வெளிப்படையான விஷயம். ஆம், செய்தி வாசிப்பாளர்கள் முற்றிலும் ஆடைகளைக் களைந்து நிர்வாணமாகத் தான் காட்சியளிப்பார்கள். அதுவும் ஆரம்பத்தில் உடையுடன் வருபவர்கள், செய்திகளைச் சொல்லிக்கொண்டே உடைகளைக் கழற்றிவிடுவார்களாம். இப்போது செய்தியாளர்களை தெரிவுசெய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. மூன்றுபேர் போட்டியிட்டனர். இதில் இறுதிவெற்றி ஹேலிக்குத்தான். இவரும் இந்த மாதிரி காட்சி தருவது சகஜமான விடயம். உடைகளைக் களைந்து காட்சிதருவது வேடிக்கையானது மட்டுமல்ல. கொஞ்சம் புரட்சிகரமானதும் கூட என்கின்றார் ஹேலி.

## எலியில் இருந்து மனிதன்!

குரங்கில் இருந்து வந்தவன் மனிதன் என்றுதான் பொதுவாகச் சொல்கிறார்கள். ஆனால், அதற்கும் முன்பாக, எலி மனிதனின் மூதாதையராக இருந்திருக்கலாம் என்று இப்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. மயிர்க்காடாக உள்ள சின்னஞ்சிறு சுண்டெலி எங்கே? ஆறடி உயரத்திற்குப் பிரம்மாண்டமான மனிதன் எங்கே? மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடப்படு கிறது என்று நினைக்கிறீர்களா?



சுண்டெலி, மனிதர்களின் முன்னோடிகள் என்கின்றனர் ஐரோப்பிய விஞ்ஞானிகள். நம்முடைய மரபணுக்களில் 99 வீதம் எலிகளிடமும் உள்ளனவாம். எலிகளின் 'ஜீன்' எனப்படும் மரபணுக்கள் மட்டுமல்ல, அவற்றில் இது உருவெடுப்பதும் நோய்கள் உண்டாகும் முறையும், எலிகளின் பழக்கவழக்கங்களும் மனிதர்களுடையவை போல் இருக்கின்றன என்கிறார்கள். இது எப்படி?

## ரோபோ மனிதன்

ரோபோ எனப்படும் இயந்திரமனிதன், பொதுவாக சிலிக்கன் செல்லுகளால் தான் இயக்கப்படுகிறான். உயிருள்ள மனிதனைப் போன்றே அதன் இயக்கம் இருந்தாலும், அது செயற்கையானது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இப்போது உயிருள்ள இயந்திரமனிதனை - அதாவது உயிருள்ள செல்களினால் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு ரோபோவை - கிளாஸ் பீட்டர் ஸௌனர் என்ற பொறியியலாளர்இங்கிலாந்தில் கண்டுபிடித்திருக்கிறார்.

சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இந்தப் பொறியியலாளர் இதற்காக உருவாக்கிய செல்கள் ஸ்லைம் வார்ப்பில் சிறப்பாக வளர்க்கப்பட்டவை. இந்த செல்கள் ஒளியைக் கண்டு ஓடி ஒளிபவை. அந்தத் தன்மையை ஸௌனர் பயன்படுத்திக் கொண்டு, நட்சத்திர வடிவில்




செல்லை வளர்த்து, அதை ஆறுகால்களைக் கொண்ட ரோபோவுடன் இணைத்து விட்டார். நட்சத்திர செல்லின் ஒவ்வொரு முனையும் ஒரு ரோபோ காலுடன் இணைக்கப் பட்டு, ரோபோவின் இயக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது. அந்த ஒற்றை செல்லின் ஒரு பகுதி மீது வெள்ளை லேசர் ஒளிக் கற்றையைப் பாய்ச்சும் போது, அந்த செல் வெளிச்சத்தைக் கண்டு பயந்து அதிர்கிறது. அந்த அதிர்வுகள் ஒரு கணினிக்குள் செலுத்தப்படுகின்றன. அதற்கேற்ப அந்தக் கணினி ரோபோவின் தொடர்புடைய காலுக்கு சமிக்ஞைகளை அனுப்பி இயங்கச் செய்கிறது. ஒற்றை செல் வளர்ப்பில் பல் வேறு பகுதிகள் மீது ஒளிக்கற்றைகளை மாற்றி மாற்றி பாய்ச்சும் போது, வெவ்வேறு கால்கள் இயங்குகின்றன. இதை ஒரு ஒழுங்கான முறையில் செய்யும் போது ரோபோ நடக்கிறது.

ஸௌனரின் இந்தக் கண்டுபிடிப்புக்கு ஒத்துழைத்தவர்கள் ஜப்பானின் கோபெ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள். அவர்கள், உயிரி செல்களை ரோபோவில் பயன்படுத்துவது பற்றி ஆராய்ச்சி செய்துவந்தனர். ஸௌனர், ரோபோக்களை இயக்க 'கணினி புரோகிராமிங்' கட்டளைகளுக்குப் பதிலாக மூலகங்களைப் பயன்படுத்தலாமா என்று ஆராய்ச்சி செய்துவந்தார். இரண்டு உயிருள்ள ரோபோ இயந்திர மனிதன் பிறந்துவிட்டான். இதில் ஒரு புதுமை என்ன வென்றால், ரோபோவை இயக்கும் செல்லில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டால், அது தன்னைத் தானே சீர்படுத்திக்கொள்ளுமாம். இதனால், இயந்திரமனிதன் சுதந்திரமாக இயங்கமுடிகிறது. கணினியின் அடிமைத்தளை யில் இருந்து விடுதலை பெற்றுவிடுகிறான். எப்படி என்றால், ஒரு கணினியில் நாம் ஒரு புரோகிராம் செலுத்துகிறோம். அந்த புரோகிராம்படி செயற்படாவிட்டால் எறர் என்று சொல்லி மூடிவிடுகிறோம். அந்தப் பிரச்சினை இந்த உயிரி செல் ரோபோவில் இல்லை. அது தானாகவே செயற்படுகிறது.




ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் வெயில் சுட்டெரித்து வருகிறது. இதனால் குளிர்ச்சியான இடங்களை தேடி மக்கள் சென்று வருகின்றனர். கடந்தவாரம் 90 டிகிரி பரனைட் வெயில் அடித்தது. மத்திய மொஸ்கோவில் உள்ள ஒரு நீரூற்று கைப்பிடிச் சுவரில் அமர்ந்து இளைப்பாறும் இளைஞர்கள்.




சூரியக் குளியல் போடுவதற்கு ஜெர்மனி, இங்கிலாந்து சுற்றுலாப் பயணிகளிடையே மோதல் ஏற்பட்டது. ஜெர்மன் பயணி களின் துணிகளை எரித்த பஸ் டிரைவர் கைது செய்யப்பட்டார்.

இத்தாலியில் உள்ள சான்ரெமோ கடற்கரைக்கு [illegible] அளவில் சுற்றுலாப் பயணிகள் செல்வதுவழமை.

அங்குள்ள 'வியனா மெரினா' ஹோட்டலில் இங்கிலாந்து, ஜெர்மனி நாட்டு பயணிகள் கடந்த வாரம் தங்கி இருந்தனர். கடற்கரையிலும், ஹோட்டல் நீச்சல் குளத்திலும் சூரியக் குளியல் போடுவதில் ஜெர்மன், இங்கிலாந்து சுற்றுலாப் பயணிகள் இடையே போட்டி ஏற்பட்டது. ஜெர்மனியர்கள் தாங்கள்தான் முதலில் சூரியக் குளியல் எடுப்போம் என்று கடற்கரையில் துணிகளை விரித்து இடம்பிடித்தனர். தாமதமாக அங்குவந்த இங்கிலாந்து பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். இதுபற்றி தங்களது பஸ் டிரைவர் பவுடனிடம் கூறினர். ஆத்திர மடைந்த பவுடன், ஜெர்மன் பயணிகள் விரித்து வைத்திருந்த துணிகளை குவியலாக போட்டு தீவைத்து எரித்தார்.

இதனால் மகிழ்ச்சி ஆரவாரம்செய்த இங்கிலாந்து பயணி கள், சூரியக் குளியலுக்கு தயாரானார்கள். ஆனால், அங்கு வந்த பொலீஸார் பவுடனை கைது செய்தனர். ஹோட்டல் நிர்வா கத்தின் தலையீட்டால், பின்னர் பவுடன் விடுதலை செய்யப் பட்டார்.




உலகமயமாக்குதலை எதிர்க்கும் விதமாக ஜேர்மனியின் ரோஸ்டாகில் ஒரு பெண் சமாதானத்துக்கான கொடியசைத்து எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார். ஜி-8 நாடுகளின் தலைவர்கள் கூட்டம் நடக்க இருக்கும் இடத்துக்கு அருகில் நடைபெற்ற இச்சம்பவத்தின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தமுடியும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டது. மேலும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் படங்கள் இங்கே உள்ளன.



# அன்பே! என் உயிர் நண்பியே

அது குளிர்காலம் இங்கிலாந்தின் லங்காஷையர் பிரதேசத்தைப் பனி மூடிவிட்டது. நண்பகல் ஐந்து மணியளவு கூட ஆகவில்லை. பனிக்கடலில் பிரதேசமே மூழ்கிவிட்டது.

பொலிஸ் வாகனமொன்று கொஞ்சம் இருள் படர்ந்து வரும் சந்தியில் நின்று கொண்டிருந்தது. பொலிஸ்காரன் ரிச்சர்ட் அதனுள் இருந்தான்.

இந்த பொலிஸ் வாழ்க்கையில் எதனையாவது சாதிக்க வேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை. ஆனால் என்ன கர்மமோ தெரியவில்லை எந்த விதமான நல்ல கேஸூம்... அப்படிச் சொல்வது பிழை- ஒருகேஸூமே அவனுக்கு கிடைக்கவில்லை.

எதையாவது சாதித்தால் தானே புரமோஷன். ஆனால் எதையும் சாதிப்பதற்கு எந்தவொரு விசயமும் அவனுடைய கைக்கு கிடைக்கவில்லை.

ஆனால், எந்த சந்தியில் அவன் காருக்குள் குந்தி புகைத்துக் கொண்டிருக்கின்றனோ அதே இடத்தில் அலைந்து திரியும் விபசாரிகள் பலர் திடீரென காணாமல் போய்விட்டிருக்கின்றார்கள்.

அது மட்டுமா அவர்களில் சிலரின் சடலங்கள் ஆங்காங்கே சில இடங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. சிலரின் நெஞ்சில் கூர்மையான ஆயுதங்கள் செருகப்பட்டிருக்கின்றன.

சிலரின், மண்டை துப்பாக்கிச் சூட்டினால் சிதறு தேங்காயாகி மூளை வெளியில் சிதறி விட்டிருந்தது.

''அடப்பாவி! நீ காரில் சுற்றும் இந்த இடங்களில் இவ்வளவு கொடூரங்கள் நடைபெற்றிருக்கின்றன. என்ன செய்து கொண்டிருந்தாய்? தலை.... புடுங்கிக் கொண்டிருந்தாயா?'' என்று பொலிஸ் கமிஷனர் அவன் தலையை கொய்து எடுக்காத குறையாக கடுமையாக பலமுறை கண்டித்திருக்கிறார்.

இவர் என்னடாவென்றால் ஒரு கேஸூம் கிடைக்கவில்லை என்று மண்டையை வருடிக் கொண்டிருக்கிறார். யாரோ ஒரு கொலைகாரன் இந்த படுகொலைகளை நாசுக்காகச் செய்து கொண்டிருக்கிறான். அவனை பிடிக்கத்தான் முடியவில்லை. பலே கில்லாடியாக இருப்பான் போலிருக்கே. உன்னை விட்டேனா பார் என்று அவன் மனம் கொந்தளித்துக் கொண்டிருக்கும். அப்படி கொந்தளித்துக் கொண்டிருந்த காலத்திலும் ஆங்காங்கே சில விபசாரிகள் சடலமாகக் கிடந்தார்கள்.

அடப்பாவி! பெரிய கண்கட்டு வித்தைக்காரனாக இருப்பான் போலிருக்கே என்று அவனால் மனதிற்குள் அழத்தான் முடிந்தது.

இந்த லட்சணத்தில் பிரதேச பொலிஸ் அதிகாரி கமிஷனரிடம் அள்ளி வைத்துவிட்டான்.

அது என்ன?

சார்! ரிச்சர்ட் ஒரு ஸ்திரீலோலன். இவனே கூட இந்த விபசாரிகளைக் கொன்றிருக்கலாம். அவர்களை அனுபவித்துவிட்டு விசயம் வெளியில் தெரிய வராமல் செய்திருக்கலாம்.

கமிஷனர் முதலில் இதனை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை! ''ரிச்சர்ட் இஸ் ஏ குட் பெலோ!'' என்று மட்டும் லேசாக முணுமுணுத்த அவர் பிறகு ஏன் அப்படியும் இருக்கக் கூடாது! என்று சிந்திக்கலானார். அதன் பின்னர் அவர் ஒரு நடவடிக்கை மேற்கொண்டார்.

ரிச்சர்டை கண்காணிக்க இன்னொரு சி.ஐ.டியை நியமித்தார். தன்னைக் கண்காணிக்க இன்னொரு சி.ஐ.டி நியமிக்கப்பட்டுள்ளான் என்ற விசயத்தை ரிச்சர்ட் புரிந்து கொள்ளாவிட்டாலும் பிரதேச பொலிஸ் அதிகாரி தனக்கு எதிராக பெரியதொரு நெருப்பை மூட்டி விட்டிருக்கிறான் என்ற விசயம் எப்படியோ அவனுக்கு தெரிய வந்ததும் ஆசாமி ஆடிப் போய்விட்டதுடன் பொறி கலங்கிப் போனான். அன்றிலிருந்து அவன் மனத்தில் வன்மம் அதிகரித்து விட்டது. விட்டேனா பார் கொலைகாரனை கையும் மெய்யுமாகப் பிடித்து என்மேல் உள்ள களங்கத்தை இல்லாமல் செய்பவேன் என்று உறுதி கொண்டான்.

கொலைகாரனை கையும் மெய்யுமாக பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ரொம்பவும் அவசரப்பட்டு ஒரு முட்டாள்தனமான காரியத்தைச் செய்தான்.

இரண்டு மூன்று விபசாரிகளுடன் அடிக்கடி நெருக்கமாக நின்று உரையாடினான். பின்னர் அவர்களைத் தொடர்ந்தான். பாவம் தன்னை ஒரு சி.ஐ.டி கண்காணித்துக் கொண்டே இருக்கிறான் என்று புரிந்து கொள்ளாமலேயே அவன் இந்த காரியத்தில் ஈடுபட்டான். அது நெருப்புப்பட்ட பஞ்சாக கமிஷனர் வரைக்கும் பரவிவிட்டது.

இத்தகையதொரு நிலையில் ஒரு திகிலான சம்பவம் இடம் பெற்றது. அவன் நெருக்கமாகப் பேசிப் பழகிய பெண்ணொருத்தி மிகவும் கொடூரமான நிலையில் கொலை செய்யப்பட்டு ஒரு சந்தியில் கிடந்தாள்.

கமிஷனர் உடனே ரிச்சர்டை கைது செய்வதற்கு உத்தரவு பிறப்பித்திருக்க முடியும்.

ஆனால், அவர் அப்படி செய்யவில்லை. ஆதாரங்கள் எதுவும் இல்லாமல் ஒருவனை கைது செய்ய முடியுமா? அதிலும் பல வருடங்கள் சேவையாற்றிவரும் பொலிஸ்காரனை. விட்டுப் பிடிப்போம் என்ற கொள்கையை அவர் பின்பற்றினார். ரிச்சர்ட்டின் வாழ்வில் அவனைப் பற்றிய இத்தனை பயங்கரங்கள் உலாவுகின்றன என்பதை அறியாமலே அவன் கொலைகாரனை எப்படியாவது கைது செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருந்த நாட்கள் அவை.

பனி பெய்கிறது.

பொலிஸ் வாகனம் பனியால் மூடப்பட்டு விட்டது.

வாகனத்துக்குள் ரிச்சர்ட் சிகரெட்டை ஊதித் தள்ளிக் கொண்டிருக்கிறான். காரின் மூடப்பட்ட கண்ணாடி வழியாக வீதி விளக்குகள் மங்கலாக அழுது வடிவது தெரிகிறது.

அப்போது, கொஞ்சம் தொலைவில் பிசாசொன்று விரட்டிக் கொண்டு வருவது போல இளம் பெண்ணொருத்தி சனநடமாட்டமே இல்லாத அந்த வீதியில் 'தட தட' வென ஓடிக் கொண்டிருக்கிறாள்.

இருளின் லேசான படர்விலும் மூடுபனியின் செறிவிலும் கண்கள் மங்கி விட்டிருந்தாலும் அவன் மிகவும் உன்னிப்பாகக் கவனித்தபோது அந்த தீட்சண்யமான பார்வையில் அந்த பெண் மிக மிக வேகமாக ஓடுவதை அவனால் அவதானிக்க முடிந்தது.

வேங்கையொன்று விரட்டு விரட்டென்று பாய்ந்து விரட்டுகின்றபோது மிரட்சியடைந்து விட்ட இளம் மானொன்று எப்படி மிரண்டோடும் அப்படியொரு ஓட்டம்.




ரிச்சர்ட் உஷாரடைந்தான். வாகனத்தை இயக்கினான். அதனை இயங்கும் நிலையில் வைத்தான்.

அவன் குறி வேங்கை மீது, மான் முன்னால் ஓடுகிறது என்றால் அடுத்து தொடர்வது வேங்கைதானே.

வினாடிகள் கரைந்தன.

நிமிடங்கள் நகர்ந்தன.

எங்கே வேங்கையை காணவில்லை. ஒரு வேளை, வேறேதும் குறுக்கு வழியில் பாய்ந்த வேங்கை! மானை கபளீகரம் செய்துவிட்டதோ?

ஜீசஸ்!

ரிச்சர்ட் மனதிற்குள் அலறினான். 'சரே'லென வாகனம் முன்னால் பாய்ந்தது. பறந்தது. எந்த திசையில் ஓடினாள்? கண்கள் தேடின.

என்ன அதிசயம்? அவளைக் காணவில்லை.

மின்னலின் வேகத்தில் ஓடியவள் எங்கு சென்று மறைந்தாள்.

அந்த திருப்பு முனை. இருபக்கமும் பெரிய பெரிய கட்டடங்கள், சொப்பிங் கம்பிளக்ஸ்கள். சரேலென வண்டி அந்த திசையில்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. விடுமுறை நாள். போதாததற்கு இன்று லங்காஷையர் யுனைட்டட்டின் உதைப்பந்தாட்ட போட்டி ஒன்றும் நடைபெறுகின்றது.

அதனால், வீதி வெறிச்சோடிக் கிடக்கிறது. கம்பிளெக்ஸின் பெரும் பாலானவை மூடிக்கிடக்கின்றன.

ரிச்சர்ட்டின் வாகனம் வெறிச்சோடிக் கிடக்கும் அந்த வீதியில் மின்னல் வேகத்தில் பறந்து ஒரு முனைவரை சென்றது.

இடைநடுவில் தென்பட்ட குறுக்கு வீதிகள் அவெனியூக்களில் 'சரேல் சரேல்' லென உள்ளே நுழைந்து பின்னர் சர சரவென பின்புறமாவே பின்னோக்கி நகர்ந்து பிரதான பாதையை அடைந்து அதே வேகத்தில் மறுபடியும் பிரதான வீதியில் மின்னலோட்டம்.

அப்போது, தன்னை குறிவைத்து இன்னொரு வாகனம் மறைவாக நிற்பதை அவன் கண்டான். ரிச்சர்ட் மறுபடியும் உஷாரானான். இப்போது இரு மடங்கு புத்துணர்ச்சியினை அவன் பெற்றான்.

கடைசியில் ஆசாமி வசமாக தன்னிடம் மாட்டிக் கொண்டு விட்டான் என்ற மகிழ்ச்சியின் எல்லைக்கே அவன் போய் விட்டான். 'உன்னை விட மாட்டேன்டா' என பற்களை நறநறத்துக் கொண்டான்.

வாகனம் பறந்தது.

பொறிகலங்கச் செய்யும் வேகத்துடன் பறந்த வாகனம், தன்னை அவதானித்துக் கொண்டிருந்த வாகனத்தை அங்குமிங்கும் அசைய முடியாத விதத்தில் இடைமறித்து நின்றது.

'படீ' ரென கதவைத் திறந்து கொண்டு குபீரென வெளியில் தாவினான். அவனுடைய கைத்துப்பாக்கிகள் பளபளத்தன.

அந்த வாகனத்திலிருந்த ஆசாமி கதிகலங்கிப் போனான்.

''ஐயோ ரிச்சர்ட்! ரிச்சர்ட்! சுடாதே'' என்று அலறினான். நான், நான் என்று தடுமாறிய அவன் ''சி.ஐ.டி தோமாஸ்'' என்று கதறினான்.

''சி.ஐ.டி தோமஸ்!''

என்று ஆச்சரியமுடன் கத்திய ரிச்சர்ட் ''நீ எங்கே இங்கே?!'' என்று அதிசயமுடன் கேட்டான்.

''உன்னை தொடர்வது என் கடமை''

அவன் பயத்துடன் உளறினான்.

''அடப்பாவி! அப்படியா சமாச்சாரம்! தலையிலடித்துக் கொண்ட ரிச்சர்ட் சரி சரி! நீயாவது என்னை நம்பு. விபசாரிகளை கொலை செய்யும் அந்த கொலைகாரன் இங்கேதான் இருக்கிறான். அவனைப் பிடிக்கத்தான் நான் வந்தேன்...'' என்று அவன் நடந்தவற்றை சொன்னபோது சி.ஐ.டி தோமஸ் ஆ் வென வாய் பிளந்தான்.

அதையே நினைத்த தோமஸ், ''ரிச்சர்ட் அதோபார் அந்த அது ரொம்ப நேரமாக மரமொன்றுக்கு மறைவாக நிற்கிறது. அதன் முன்விளக்குகளும் எரிந்தவாறிருக்கின்றன.'' என்றான்.

''அப்படியா?!''

அவர்களுடைய வாகனங்கள் அதை நோக்கி நகர்ந்தன.

அப்பொழுதும் முன் விளக்குகள் அசையவில்லை. கார் நகரவில்லை.

அவர்கள் இறங்கினார்கள். உள்ளே எட்டிப் பார்த்தார்கள். வாயடைத்துப் போனார்கள். அவர்கள் கண்கள் பிதுங்கிக் கொண்டன.

காரின் முன் ஆசனத்தில் ஒருவன் இறந்து கிடந்தான். அவன் தொண்டைக்குழியில் கத்தியொன்று ஆழமாகப் பாய்ந்து விட்டிருந்தது. முகத்தில் பல வெட்டுக் காயங்கள். மண்டை சிதறிக் கிடக்கிறது.

இரண்டு நாட்களின் பின்னர் லங்காஷையர் பொலிஸ் நிலையத்தில் ஷீலா என்ற இளம் பெண் சரணடைந்தாள். தானே அவனைக் கொன்றதாகச் சொன்னாள்.

விபசாரிகளை அனுபவித்துவிட்டு கொலை செய்யும் இந்த பாதகன் கன்னியாஸ்திரி போன்றதொரு தெய்வீகமான பெண்ணொருத்தியையும் கொன்றான். அந்த துயரம் தாங்க முடியாமலே அவனைக் கொன்றேன் என்ற ஷீலா சொன்னபோது நீதிமன்றத்திலிருந்த பெண்களெல்லாம் கண்ணீர் விட்டழுதார்கள்.

ஷீலா மூன்று வருட தண்டனை அனுபவித்து பின்னர் விடுதலையானாள்.

# இளநீரில் இவ்வளவு விஷயங்களா?

## குளிர் பானங்களில் இவ்வளவு குறைகளா?



சோடியம் குளோரைட், பொட்டாசியம், தாது உப்புக்கள், நீர்ச்சத்து, கல்சியம், உப்புச்சத்து, விற்றமின்கள் இளநீரில் நிறைந்திருக்கின்றன.

தினமும் இளநீர் குடித்து வந்தால் அது நம்மை இளமையாக வைத்திருக்கும். குறிப்பாக கோடை காலங்களில் உப்புச்சத்தும் நீர்ச்சத்தும் மற்றும் பொதுவான சத்துக்களும் உடலில் இருந்து வியர்வை மூலமாக வெளியேறி விடுவதால் உடல் வெளிறிவிடும். மயக்கம், நாடித்துடிப்பு தளர்ந்து, தசைகள் இறுகுவது இடம் பெறும். இதற்கெல்லாம் முக்கிய காரணம் உடலில் உள்ள உப்பு சுத்தமாக வெளியேறுவதுதான்.

இளநீரில் இருக்கின்ற உப்புச் சத்து நம் உடலில் வெப்ப * நிலையை சமச்சீராக பாதுகாப்பதோடு மட்டுமன்றி உடலின் வெப்ப நிலையை உள்வாங்கி சரிவர வெளியே தள்ளுகிறது. இதனால், கோடையில் வரும் நோய்கள் தொலைந்து போகின்றன.

இளநீரை உடனடியாக குடித்து விடுவதுதான் நல்லது. அதை வாங்கி பிரிட்ஜில் வைத்திருப்பது அல்லது இரண்டு, மூன்று மணி நேரம் கழித்து குடிப்பது நல்லதல்ல.

இளநீரின் மருத்துவ குணம் மாறாமல் இருக்க வேண்டும் என்றால் அதை வாங்கிய அரைமணி நேரத்துக்குள் பயன்படுத்த வேண்டும். இதில் எதையும் கலந்து குடிக்கக் கூடாது. நீரிழிவு நோயாளிகள் குறைவாக குடிக்கலாம். சிறுநீரக செயலிழப்பு நோயாளிகள் குடிக்கக் கூடாது. இதய நோயாளிகளுக்கு இளநீர் இதம்.

குளிரூட்டப்பட்ட செயற்கை குளிர்பானங்களில் 'கார்பனேட்டட் வாட்டரும்' காற்றும் தான் செயற்கையாக அடைக்கப்படுகின்றன. இதில் உடலுக்கு தேவையற்ற கலோரி சத்துக்கள் அதிகமாக இருப்பதால் உடல் குண்டாகும். எலும்புகள் பலவீனம் அடையும். குடற்புண் உண்டாகும். இவை எல்லாம் குளிர்பானங்களைத் தொடர்ந்து குடிப்பதால் ஏற்படும் பக்க விளைவுகள்.

கோடையில் தண்ணீர் மிகவும் தரமான பொருள். தண்ணீரில் ஹைட்ரஜன், ஒட்சிசன், கல்சியம், மினரல்கள், உப்பு என்பவை தரம் குறையாமல் இருப்பவை.

கோடையில் தினசரி குறைந்தது 3 முதல் 4 லீட்டர் வரை தண்ணீர் குடிக்கலாம். ஒரே நேரத்தில் நிறைய நீரைக் குடிப்பதற்குப் பதிலாக, சிறிது சிறிதாக தொடர்ந்து குடித்துக் கொண்டே வரலாம். ஒரே நேரத்தில் அரை லீட்டர் வரை அதிகபட்சமாக குடிக்கலாம். சாப்பிட்ட பிறகு ஒரேடியாக நிறைய தண்ணீரைக் குடிப்பது செரிமான சிக்கலை உண்டு பண்ணும். வயிறு நிறைய தண்ணீரைக் குடிப்பதும், உடன் படுப்பதும் தவறுதான். இவை எல்லாம் தண்ணீரில் நாம் செய்யும் தலையாய தவறுகள்.

கோடையில் இரவில் இடைவெளிகளில் தண்ணீரைக் குடிப்பது நார்ச்சத்துடன் சேர்ந்து காலையில் மலச்சிக் கலை தீர்க்கும்.

அதிக நீருள்ள பழங்கள், திராட்சை, ஒரேஞ், எலுமிச்சை, அன்னாசி , வத்தகை போன்றவற்றில் வைட்டமின் சத்துக்கள் குறிப்பாக எல்லா விற்றமின்களும் உள்ளன.

# கெடுவான் கேடு நினைப்பான்

நிமிடக்கதை



ஓர் ஊரில் ஒருவன் இருந்தான். அடுத்தவர்கள் நன்றாக இருந்தால் அவனுக்குப் பிடிக்காது. அவர்கள் அழிந்து போக வேண்டும் என்று நினைப்பான்.

ஒருநாள் அவன் வியாபாரத்துக்கு வெளியூருக்குப் போனான். அரிசி மூட்டையைத் தலையில் சுமந்து கொண்டு சென்றான்.

இப்போதுபோல் நல்ல வெயில் காலம். அவனுக்குத் தாகம் எடுத்தது. ஓர் ஊர் வழியே போன போது குடிக்க ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தான்.

ஒரு திண்ணையில் நீர் மோர் வைத்திருந்தார்கள். அதில் நீர்மோர் எடுத்துக் குடிக்கப் போனான். சட்டென்று ஒரு நினைவு வந்தது. 'புண்ணியம் தேடுவதற்கு அல்லவா இந்தத் தர்மம் செய்கிறார்கள்? நான் நீர் மோர் குடித்தால், இந்த வீட்டுக்காரனுக்குப் புண்ணியம் சேர்ந்து விடுமே!' என்று எண்ணினான். எனவே, நீர் மோரைக் குடிக்கவில்லை.

தாகத்துடன் மேலே நடந்தான். தாகம் அதிகமாயிற்று. 'எங்காவது குளம் இருந்தால் தண்ணீர் குடித்துக் கொள்ளலாம்' என்று தொடர்ந்து நடந்தான். ஆனால், ஊரில் இருந்த குளத்தில் தண்ணீர் இல்லை.

ஊரைத் தாண்டியதும் ஒரு பாலைவனம் வந்தது.இவன் நடந்தான். வெயில் நெருப்பாகக் கொதித்தது. தாகத்தில் இவனது நாக்கு வரண்டது.

எங்காவது தண்ணீர் கிடைக்குமா என்று தேடி அலைந்தான்; மயங்கி விழுந்தான். ''தண்ணீர்... தண்ணீர்... '' என்று தவித்துக் கொண்டே செத்துப் போனான்.

இதைத்தான் பெரியவர்கள் 'கெடுவான் கேடு நினைப்பான்' என்று கூறினார்கள்.

## சோற்சிலம்பம் போட்டி இல. 266

சொற்சிலம்பம் 265 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் ஜுன் 17 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜுன் 24 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி. இல.264 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ம்

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 266

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | 11 | |
| | ■ | 12 | | ■ | 13 | | ■ |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | 16 |
| 17 | | ■ | 18 | | | | |
| 19 | | 20 | | ■ | | ■ | |
| 21 | | | ■ | 22 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 264

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஐ | ப் | 2 ப | 3 சி | ■ | 4 ஆ | 5 க | வே |
| ம் | ■ | 6 கை | த் | 7 தொ | ழி | ல் | ■ |
| 8 ப | 9 தி | த் | த | ல் | ■ | 10 வி | 11 தி |
| 12 து | ரி | த | ம் | ■ | 13 ச | மா | தி |
| ■ | 14 பு | ல் | ■ | 15 பு | த | ன் | ■ |
| 16 தா | ரா | ■ | 17 ப | ல | ம் | ■ | 18 க |
| ம் | ■ | 19 பா | ல | ம் | ■ | 20 ந | வ |
| 21 பு | ய | ல் | ■ | 22 பு | த் | தி | ரி |

## சொற்சிலம்பம் போட்டி இல.266

**இடமிருந்து வலம்**

1. விடியும் வேளை.
4. கோவலன் காதலி.
7. மூடர்.
8. திடீரெனத் தோன்றி மறைவது.
9. கடவுள்.
11. இளங்குமரி(பெண்ணின் பருவம்).
12. மறைப்பது இதனால்.
13. ஆகாயம்.
14. கூந்தல்.
15. பசுமையான இடத்தில் வளரும்.
17. சேர்.
18. இறத்தல்.
19. சேலையின் நுனி.
21. புரவி.
22. வீடு.

**மேலிருந்து கீழ்**

1. அளவுக்கு அதிகம்/அபரிமிதம்.
2. மேடான இடம்/குன்று.
3. ஒரு தமிழ் மாதம்.
4. ஒரு மிருகம்.
5. பணக்காரன்.
6. முத்திரை.
8. தொட்டால் அதிர்ச்சி தரும்.
10. நிலம்.
13 . எழுதியிருப்பதைப் படித்தல்.
14. வலை பின்னும் பூச்சி.
15. முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளல்.
16. திரு/சொத்து/ ஐஸ்வரியம்
17. பாக்கு மரம்.
18. இதுவும் வீடே.
20. தண்ணீர் விழும் வழி/ தப்பட்டை போன்ற கருவி.

## சொற்சிலம்பம் போட்டி இல. 264

1. ஜே.நவபுத்திரன், இல.90, வீட்டுத்திட்ட வீதி, அன்னமலை 01, கல்முனை.
2. ஏ.சுபதர்சினி, இல. 219/1, ஒட்டக்கட, பண்டாரவளை.
3. எம்.எஸ். குதுபுத்தீன், இல.91/14, தெமட்டகொடை, கொழும்பு-09.

**பாராட்டுப் பெறுவோர்**

1. எஸ்.ஜீவா, 11-5/1, சென். லோறன்ஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
2. எஸ்.கிருஷ்ணவேணி, 109/7, ஸ்ரீநகர், பூந்தோட்டம், வவுனியா.
3. கு.திலீபன், இல. 10 பீ, 7ஆம் ஒழுங்கை, நெளுக்குளம், வவுனியா.
4. திரு.ஜே.டீ. ராஜேந்திரன், இல. 24, ரெக்கிளமேஷன் வீதி, கொழும்பு- 11.
5. எம்.ஜே.எம்.றம்ஸி, இல.10, பியரத்னாராம பிளேஸ், தெஹிவளை.
6. நா.சிவலிங்கம், எம்.ஓ.எச். விடுதி ஒழுங்கை, கல்முனை.
7. மு.தவராஜன், வேணிகா இல்லம், இல.1/8, காளி கோவில் வீதி, அமுனுதோவை, மடுல்சீமை.
8. செல்வி. சி. நீரஜா, இல. 14/ 37, பாரதி ஒழுங்கை, மட்டக்களப்பு.
9. ம.சமிஸ்ரா, 146, கோவில் குளம், வவுனியா.
10. திருமதி வ. பாலசுப்பிரமணியம், வெங்கடேஸ்வரா ஏஜன்சி, தம்பிலுவில்-01.

யாழ்ப்பாணம்.



# மலையகத்தில் விடிவெள்ளி தோன்றுமா?

'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்பதைப் போல மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஏற்கனவே ஏற்பட்ட சம்பளப் போராட்டத்தினால் நொந்து நூலாகிப் போயுள்ள நிலையில் விலைவாசி உயர்வினை தாங்கிக் கொள்ள முடியாமல் தணலில் பட்ட புழுவாக துடித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் 'மா' விலையும் 'மண்ணெண்ணெய்' விலையும் கூடிய நிலையில் நிலைகுலைந்து போயிருக்கிறார்கள். தங்களின் பிள்ளைகளை கல்வி கற்க வைப்பதற்காக பாடசாலைக்கு அனுப்புவது கூட தற்போது மிகவும் கஷ்டமான விடயமாக அவர்களுக்கு இருக்கிறது. ஆனால், இவற்றையெல்லாம் பற்றி எவ்விதமான கவலையும் இல்லாமல் திடீர் தேர்தல் வந்தாலும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் தலையில் மிளகாய் அரைத்து வாக்குகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நோக்கத்தில் சில மலையகத் தலைமைகள் மௌனம் காத்து வருகின்றன. மலையக தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் இப்போது விழிப்புணர்வு தோன்றியுள்ளதை அவர்கள் மறந்து விட்டார்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது. ராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன என்ற நோக்கத்தில் வாக்குகளை அள்ளிக் கொடுத்த காலமெல்லாம் இப்போது மலையேறி விட்டது. பச்சை நோட்டுக்கும் போத்தலுக்கும் மயங்கியதெல்லாம் அந்தக் காலம். இப்போது அவர்கள் தெளிவான சிந்தனையில் இருக்கிறார்கள்.

பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் முடிந்து பல மாதங்கள் ஓடிவிட்டன. ஆனால்,தேர்தலின் போது வாக்களிக்கப்பட்ட வாக்குறுதிகள் என்னவாயிற்று. தோட்ட லயன் காம்பறாக்கள் பல இன்னமும் எந்தவிதமான சுகாதார, போக்குவரத்து வசதியுமின்றி அப்படியே இருக்கின்றன. பதவிகளுக்கு வந்த சிலர் ரோடு கொந்தராத்து மற்றும் கட்டடங்கள் கொந்தராத்து மூலமாக கணிசமான கொமிஷன்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு செய்வதற்காக பதவிகளுக்கு வந்தவர்கள் பலர் தங்களின் தேவைகளைக் கவனிப்பதிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் வேடிக்கையான வேதனையான விடயம் என்னவென்றால் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை நன்கு தெரிந்து அவர்கள் மத்தியிலிருந்து தெரிவாகி சென்ற சிலர் கூட அவர்களைப் பற்றி யோசிக்காமல் பணம்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களையெல்லாம் தட்டிக் கேட்க தலைமைகளுக்கு நேரமில்லை. ஊசி இடம் கொடுப்பதால் தானே நூல் நுழைகிறது.

முன்னர் கொழும்புக்குச் சென்று வேலை செய்து ஓரளவு வாழ்க்கைச் சுமையினை குறைத்துக் கொண்ட தோட்ட இளைஞர்கள் இப்போதுள்ள மோசமான சூழ்நிலையினால் தோட்டங்களுக்கே திரும்பி விட்டார்கள். தமிழர்களாகப் பிறந்து விட்ட காரணத்தினால் சொந்த இடங்களிலோ வேறு இடங்களிலோ உழைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பதவிக்கு வந்தால் பசியைப் போக்கி மலையகத்தில் பாலும் தேனும் ஓட விடுவேன் என சத்தியம் செய்தவர்கள் சத்தியத்தை எல்லாம் மறந்து சக்தியற்று கிடக்கிறார்கள். இன்று வாழ்க்கைச் சுமையினைச் சுமக்க முடியாமல் ஏனென்று கேட்க நாதியற்ற நிலையில் நாய் போல மூலையில் சுருண்டு கிடக்கிறார்கள் தோட்டத் தொழிலாளர்கள். அழும் குழந்தைகளுக்கு பால் மா இல்லை. பருவப் பெண்களுக்கு வாழ்வு இல்லை. இந்நிலை என்று மாறும்? மலையகத்தில் விடிவெள்ளியாக விடியலை ஏற்படுத்த ஒரு நல்ல தன்னலமற்ற தலைவன் தேவைப்படுகிறான். அவன் எப்போது வருவான்? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

**பாலா சங்குப்பிள்ளை**

# யாழ்ப்பாண நூலகமும்....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாரம், பேர்லின் நூல் நிலையத்திற்குச் சென்ற நாசிக்கள், அங்கிருந்த சகல நூல்களையும் எரித்தார்கள். ஒரே ஒரு வித்தியாசம்தான்! சிங்களக் காடையர்கள் செய்தது போல, அவர்கள் (நாசிக்கள்) பேர்லின் நூல் நிலையத்தை எரிக்கவில்லை.

யூத மக்கள் மீது ஜேர்மன் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட தாக்குதல்களையும், கொலைகளையும் கோயபல்ஸ் இவ்வாறுதான் நியாயப்படுத்தி வந்தார். 'ஏதோவொரு திடீர் உணர்ச்சி வேகத்தில் சிந்திக்காமல், திட்டமிடாமல், இவ்வாறான செயல்களைப் போர்வீரர்கள் புரிந்து விட்டார்கள்.' நாசிக்களின் இதே காரணத்தைத்தான், சகல சிங்கள அரசுகளும் இதுவரை சொல்லி வருகின்றன.

ஆப்கானிஸ்தானின் அன்றைய தாலிபான் அரசு மிகப்பழைமை வாய்ந்த புத்த சிலைகளை அழிக்க முனைந்தபோது, பண்பாட்டு மேன்மை குறித்து புத்த பிக்குகள் கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். அன்றைய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா பாகிஸ்தானுக்குப் பறந்தோடிச் சென்று புத்த சிலை அழிப்பை தவிர்ப்பதற்குப் பாகிஸ்தானின் உதவியை நாடினார். கொழும்பு ஊடகங்கள் இதனை முன்னிலைப்படுத்தின.

ஆனால் விலை மதிப்பற்ற யாழ். நூல் நிலையம் எரிக்கப்பட்ட போது மௌனம்தான் மொழியாகிற்று!

சுதந்திரம் பெற்ற நாடுகள் தமக்கு, தமது நாட்டுக்கு, தமது பண்பாட்டுக்கு ஏற்பட்ட அழிவுகளை வரலாற்று ரீதியாக நினைவு கூருவதற்காக மிக முக்கியமான அழிவுகளை ஞாபகப்படுத்தும் சின்னங்களைப் பாதுகாத்து வருவதை நாம் உலகளாவிய ரீதியில் காணக் கூடியதாக உள்ளது. அப்படிப்பட்ட நினைவுச் சின்னமும் இப்போது எமக்கு இல்லை.

ஆயினும், வரலாறு மீண்டும் மீண்டும் ஒரு விடயத்தை, ஒரே ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியே வந்திருக்கின்றது. சிங்களப் பௌத்தப் பேரினவாத அரசுகளிடமிருந்து தமிழ் மக்களுக்கு நீதியான, நேர்மையான, நிரந்தரமான, நியாயமான, கௌரவமான சமாதானத் தீர்வு ஒரு போதும் கிடைக்கப் போவதே இல்லை.

அன்புக்குரிய நேயர்களே! இக்கட்டுரைக்கு Tamil Nation சங்கம் போன்ற இணையத் தளங்களில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள் பெரிதும் உதவின. குறிப்பாக திரு நடேசன் சத்தியேந்திரா, விலானி பீரிஸ், நேசையா போன்றோருக்கு எனது நன்றிகள். திரு. சிவநாயகம் அவர்களின் Srilanka-Witness to History என்ற நூலும் பல அரிய தகவல்களைத் தந்தது.

இவ் ஆய்வு அவுஸ்திரேலியா மெல்பேர்ன் தமிழ்க்குரல் வானொலியில் 04.05.07 ஒலிபரப்பாகிய ஆய்வின் எழுத்து வடிவமாகும்.

(நன்றி: தமிழ்நாதம்)



# நீங்கள் இடதுகைப் பழக்கம் உள்ளவரா?

இடதுகைப் பழக்கம் உள்ளவர்கள் பற்றி கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த ஆய்வை நடத்திய பேராசிரியர் ஸ்ரான்லி ஹோரன்ட் இடதுகைப் பழக்கமுள்ள நூற்றுக்கணக்கான வர்களைச் சந்தித்தார். இடதுகைப் பழக்கம்கொண்ட இறந்தவர்கள் பற்றியும் ஆராய்ந்தார்.

இவரது ஆராய்ச்சியின்படி இடதுகைப் பழக்கம் உள்ளவர்களுக்கு சிலகுறைபாடுகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இடதுகைப் பழக்கம் உள்ளவர்கள், வலதுகைப் பழக்கம் கொண்ட வாழ்க்கைத் துணையுடன் சேர்ந்து வாழும்போது மிகவும் சிரமங்களை எதிர்கொள்கிறார்களாம்.

தவிர வலதுகைப் பழக்கம் கொண்டவர்களைவிட இவர்களுக்கு சராசரியாக ஒன்பது வருடங்கள் ஆயுள் குறைவாக இருப்பதையும் கண்டறிந்தார். இதற்கு முக்கிய காரணம் இவர்கள் அதிகளவில் விபத்துக்களில் சிக்கிக்கொள்வது தான். ஏனெனில், உலகம் முழுவதும் வலதுகைப் பழக்கம் கொண்டவர்களுக்காகவே இயந்திரங்கள், தொழில் உபகரணங்கள், வாகனங்கள் போன்றவை தயாரிக்கப்பட்டிருப்பதால் அதை இடதுகைப் பழக்கம் உள்ளவர்கள் கையாளும்போது பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

ஓர் ஆறுதலான விடயம். இடதுகைப் பழக்கம் உள்ளவர்கள் இக்கட்டான சூழ்நிலையிலும் திடமான முடிவுகளை எடுத்து அசத்திவிடுவார்கள்.

ஆனால், வலதுகைப் பழக்கம் உள்ளவர்கள் இதுபோன்ற நேரங்களில் தடுமாறிவிடுகிறார்களாம்.




எ.பிரதீஸ்,
மருதானை.

**கே: பித்தா! ஒருவருக்கு ஒரு முறைதான் காதல் வருமாமே. ஆனால், இந்தக்காலத்து இளசுகளுக்கு பலபேருடன் பலமுறை காதல் வருகின்றதே?**

**ப:** அப்படி ஏற்பட்டால் அது காதல் அல்ல. வெறும் இனக் கவர்ச்சிதான். காலம் கடந்தபின்னர், அது தன்னாலே அழிந்துவிடும்.

சி.மயிலு,
மன்னார்.

**கே: பித்து அண்ணா! இலங்கையில் அமைதி திரும்பும் சாத்தியம் துரும்பளவாவது இருக்கின்றதா?**

**ப:** விரக்தியின் உச்சத்திற்கு மக்கள் சென்று விட்டார்கள். இருந்தும் அனைத்து வன்முறைகளும் தொடர்ந்துகொண்டே உள்ளன. நாட்டில் மீண்டும் அமைதி திரும்பவேண்டுமாயின் அனைவரும் ஒருமித்து பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும்.



இ.பரத்,
பின்னவல.

**கே: பித்தா...! 'சிவாஜி' திரைப்படத்தின் மூலம் ரஜனி மீண்டும் சாதிப்பாரா?**

**ப:** 'சிவாஜி' இன் வரவிற்காக ஒரு கூட்டமே காத்திருக்கின்றது. சில திரையரங்குகள் மாலை, தோரணம் கட்டி இப்போதே 'சிவாஜி'யின் வரவிற்கு தயாராகின்றன. 'சிவாஜி' வெற்றிதரும் என்ற நம்பிக்கையிலேயே ரஜினி உள்ளார்.

எம்.சிவராஜா,
கல்கிஸை .

**கே: பித்தா....! லஞ்சம் வாங்குபவருக்கு தண்டனை கொடுப்பது போல லஞ்சம் கொடுப்பவருக்கும் தண்டனை கொடுத்தால் என்ன?**

**ப:** அப்படி என்றால் பிக்பொக்கட் காரனிடம் பணத்தைத் திருட்டுக் கொடுப்பவருக்கும் தண்டனை விதிக்கவேண்டும்.

சி.ராஜா,
கொட்டாஞ்சேனை.

**கே: பித்தா! தலைநகரில் வீடுகளுக்கு வீட்டு உரிமையாளர்களைவிட தரகர்கள் உச்ச வாடகை ஏற்றி வருகின்றனர். இவர்களை என்ன செய்யலாம்?**

**ப:** அடுத்தவர்களின் பணத்தை சுரண்டுவதற்கு எதுவும் செய்யக் கூடியவர்கள் இவர்கள். இவ்வாறானவர்களைத் திருத்துவதற்கு நம்மால் முடியாது. ஆயினும் காலம் கடந்தாவது இவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்.



எஸ்.ரதீஸ்,
மாத்தளை.

**கே: பித்தா ! ஒரு கடிஜோக் சொல்லுங்களேன்....?**

**ப:** சிறுவன் ஒருவன் தன்தாயாரிடம் நூறு ரூபாய் வேண்டும் என்று கேட்டான். அதற்கு தாயார் மறுப்புத் தெரிவிக்க. ''ஒரு ஐம்பது ரூபாயாவது தாவேன்'' என்று சிறுவன் கேட்க தாயார் அதற்கும் மறுத்துவிட்டார். '' சரி இருபது ரூபாயாவது கிடைக்குமா?'' அம்மா முடியவே முடியாது என்று கூறிவிட்டார். சிறுவன் ஒரு ஐடியா போட்டான். '' இன்று காலையில் அப்பா வேலைக்காரியிடம் ஒன்று சொன்னாரே'' உடனே தாயார் சிறுவனிடம் கேட்ட பணத்தைக் கொடுத்துவிட்டு '' என்ன சொன்னார்...?'' என்று பதற்றத்துடன் கேட்க, ''பான்ட், சட்டைகளை மறந்திடாமல் துவைக்கும்படி கூறினார்'' என்று சாதாரணமாகப் பதிலளித்துவிட்டு சென்றான் சிறுவன்.



எஸ்.மலர்,
வத்தளை.

**கே: பித்தனே! பெண்களைக் கேலி செய்யும் ஆண்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?**

**ப:** தூக்குத் தண்டனை கொடுக்கலாமே. பெண்களைத் தோளில் தூக்கிக்கொண்டு தெருவில் அலைய விடலாம். (அப்பாடா நல்ல ஐடியா கொடுத்துவிட்டேன்)

என். நித்தி,
பொலன்னறுவை.

**கே: பித்தனே! சிலர் காதலியை ஊறுகாய்போல தொட்டுக் கொள்கின்றார்களே?**

**ப:** கல்யாணத்துக்கு முன்னால் அப்படித்தான் தொட்டுக் கொள்வார்கள். பின்னர் ஊறுகாய் கேட்டு உதைப்பார்கள்.

ஆர். நிரோ,
கண்டி.

**கே: பித்தா! எனது மனதுக்குள் ஒரு கன்னிப்பூ பூத்திருக்கின்றது. அந்தப் பூவைப் பறிக்கலாமா?**

**ப:** பூக்கள் அழகுபார்க்க மட்டுமே. பறித்தால் வாடிவிடும்.

என்.கஜன்
மட்டக்குளி.

**கே: பித்தா! நண்பனை நம்பி தொலைபேசியைக் கொடுக்கலாமா?**

**ப:** கொடுக்கலாம். ஆனால், நண்பன் எதிரியாகாதவரை.

எம்.ராஜி,
புத்தளம்.

**கே: பித்தனே! எட்டு கெட்ட எண் என்கின்றார்களே உண்மையா?**

**ப:** அப்படிப்பார்த்தால் எல்லா எண்களும் கெட்ட எண்களாகத்தான் இருக்கவேண்டும். இலக்கத்தை உடைய மனிதர்கள்தான் கெட்டவர்களாக இருப்பார்கள். எண் ஒரு போதும் கெட்ட எண்ணாக இருக்காது.

எம்.துஷி,
நீர்கொழும்பு.

**கே: பித்தா! எனது நண்பன் ஒரு பெண்ணைக் குறி வைக்கிறான் என்ன செய்யலாம்?**

**ப:** ஆண்களின் வேலையே குறிவைப்பதுதானே. எதற்கும் அந்தப்பெண்ணை அவதானமாக இருக்கச் சொல்லும்.



# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | நேரம் | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6.00 | காலைநேரச் செய்திகள் | காலை நேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | 6.00 | நிகழ்ச்சிகள் ஆரம்பம், பத்திரிகைச் செய்திகள் | நிகழ்ச்சிகள் ஆரம்பம், பத்திரிகைச் செய்திகள் |
| 6.30 | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | 6.30 | சங்கீத மேடை | சங்கீத மேடை |
| 7.00 | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | 7.00 | ராசிபலன் | கார்ட்டூன் |
| 7.30 | குட்மோர்னிங் சிறிலங்கா | குட்மோர்னிங் சிறிலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | 7.30 | சிறுவர் உலகம் | கிட்ஸ் |
| 8.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொண்டாட்டம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | கொமடி டைம் | 8.00 | | அரட்டை அரங்கம் |
| 9.00 | உங்கள் சொய்ஸ் | புத்தம் புது பாடல் | நீங்கள் கேட்டபாடல் | சுப்பர் 10 | உங்கள் சொய்ஸ் | 9.30 | | சின்னச் சின்ன ஆசைகள் |
| 9.30 | நேற்று இன்று நாளை | நினைவுகள் | நட்சத்திரம் | இயக்குநர் பார்வை | நேற்று இன்று நாளை | 9.00 | திரை விமர்சனம் | |
| 10.00 | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | 9.30 | ராஜ ராஜேஸ்வரி | அல்லி ராஜ்யம் |
| 10.30 | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | 10.00 | அது மட்டும் ரகசியம் | வேப்பிலைக் காரி |
| 11.00 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | 10.30 | இளமை புதுமை | சண்டே சமையல் |
| 11.30 | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | 11.00 | | சுப்பர் சீன்ஸ் |
| 12.00 | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | 11.30 | சினி சொய்ஸ் | இளைய கானம் |
| 12.30 | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கை | 12.00 | அன்புடன் | அசத்தப்போவது யாரு? |
| 01.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதியசெய்திகள் | 12.30 | | |
| 01.15 | கொடி பறக்குது | மௌனம் சம்மதம் | ஜீவா | பூப்பூவாய் பூத்திருக்கு | வேலைக்காரன் | 1.00 | காற்றுள்ளவரை | கண்ட நாள் முதல் |
| 04.00 | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | 4.00 | ஜொலிவூட் எக்ஸ்பிரஸ் | ஸ்ராருடன் பேசலாம் |
| 4.30 | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | 4.30 | குஷி டைம் | ரிலாக்ஸ் டைம் |
| 5.00 | கார்ட்டூன் | கார்ட்டூன் | கார்ட்டூன் | கார்ட்டூன் | கார்ட்டூன் | 5.00 | நலந்தானா | ரொப் 10 மூவிஸ் |
| 5.30 | கிட்ஸ் டிராமா | கிட்ஸ் டிராமா | கிட்ஸ் டிராமா | கிட்ஸ் டிராமா | கிட்ஸ் டிராமா | 5.30 | ஊரும் உலகமும் | புதிய ராகங்கள் |
| 6.00 | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | 6.00 | அறிவு | மின்னல் |
| 6.30 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | 6.30 | திமிதகதா | |
| 7.00 | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | 7.00 | சக்தி சுப்பர் ஸ்டார் | |
| 7.30 | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | 7.30 | | |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | 8.00 | செய்திகள் | செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | 8.30 | வா வாத்தியாரே வா | வா வாத்தியாரே வா |
| 9.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | 9.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் |
| 9.30 | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | 9.30 | நிஜத்தின் நிழல் | சிதம்பர ரகசியம் |
| 10.00 | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | 10.00 | கலம் | விளையாட்டு அரங்கம் |
| 10.30 | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | சூரியவம்சம் | 10.30 | பாமா விஜயம் | அசத்தப்போவது யாரு |
| 11.30 | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | | 11.30 | | திரை மசாலா |
| 12.00 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | 12.00 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு |

மணித்தியாலச் செய்திகள் 10.25, 11.25, 14.25, 15.25, 16.25, 17.25.

# தரை இறங்கும் விமானங்கள்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக்கொண்டு வந்தேன். எல்லாமே பறிபோய்விட்டன.

ஒவ்வொரு டினாரையும் சம்பாதிக்க நான் உழைத்த கடின உழைப்பின் வேதனை இப்போது மனதை அரித்தது. சமையல்வேலை, துணிமூட்டைகளாக சலவை செய்யும் வேலை, மாளிகை போன்ற வீட்டை தினமும் கூட்டித்துடைத்து மொப் பண்ணி...கைமூட்டுக்களே தகர்ந்துவிடும்! இதற்கிடையில் எஜமானியிடம் வாங்கும் திட்டுதல்கள் ...சிலசமயங்களில் கையில் இருப்பதைக்கூட என்மீது எறிந்துவதைப்பாள்.

ஓய்வுஒழிச்சலில்லாத வேலை! நான் சோர்ந்து துவளும்போதெல்லாம் காற்றோடு அடிபட்டுப்போகும் சருகுபோல் அரபுக்காரியும் என்னை வதைப்பாள். இல்லாவிட்டால் சின்னச் சின்னத் தவறுகளுக்குக் கூட ஒருவெறிநாய் போல் என்னைக் குதறுவாளா? எல்லாவற்றையும் குடும்பத்திற்காக பல்லைக்கடித்துக்கொண்டு சகித்துக்கொண்டேன். ஆனால்அதுவும் இன்று விழலுக்கு இறைத்த நீராகி...கண்ணீர் தான் பெருகுகிறது. வீட்டுக்காரி ஓர் அடிமைபோல் தான் என்னை நினைத்திருக்கிறாள். நிலவுக்குப் பயந்து பரதேசம் போன நிலையில் நா... ...தேன். சரியும் வாழ்க்கையில் ஏ... நடக்கிறது என்று தெரிவதற்கு ...ரே ஒரு மலைப்பாம்பால் விழு...ங்கப்பட்டு சட்டென்று கீழ் இறங்கியதுபோன்ற அதல பாதாளச் சரிவு.சிறுவயதில் ஏணியும் பாம்பும் விளையாட்டு விளையாடியது தான் நினைவுக்கு வந்தது. ஜன்னல்களைத் துடைத்தல், கேட்டின்களை மாற்றிச் சலவை செய்தல், மலசலகூடம் கழுவுதல் எது செய்தாலும் ஒரு மேற்பார்வையாளர் போல் நின்று குறைகாண்பதும் பிழைசொல்வதுமாக இருப்பாள். துடைக்கும் ஈரத் துணியால் அவளைத் தாக்க வேண்டும்போல் மனம் உந்தும். அடக்கிக்கொள்வேன். அப்படி ஏதாவது செய்தால் கையைக்கூட வெட்டிவிடுவார்கள்.

...ல் கிடைக்கும்வரை நிற்கும்படி ...ர் கூறியிருந்தனர். இப்போது பயணிப்பதற்குக் கூட கையில் பணம் இல்லை. கணவரும் வரவில்லை. நேற்றுக் கதைத்தபோது கூட வழக்கத்திற்கு மாறாக எவ்வளவு அன்பாகக் கதைத்தார். தான் இப்போது ஒருமாதமாகக் குடிப்பதை நிறுத்திவிட்டதாகவும் தான் தனது பொறுப்பற்ற தன்மையை உணர்ந்துவிட்டதாகவும் கூறினார். பிள்ளைகளே புத்திசொல்லுமளவுக்கு தான் பொறுப்பற்றவனாக இருந்ததாகவும் மூத்தவள் அகல்யாவின் ...ட்டிக்காட்டலினால்தான் திருந்தியதாகவும் கூறியிருந்தார். கொண்டுவரும் பணத்தில் வீட்டோடு ...டைபோட எண்ணி இருப்பதாகவும் ...றினார். அப்படியெல்லாம் நல்ல மாதிரி ...தைத்தவர் ஏன் வரவில்லை? மனதில் ...ாராட்டம்.

நான் குவைத் சென்ற பின்னர் இவருக்கு சில தகாதஉறவுகள் கூட ஏற்பட்டதாக அறிந்து வேதனைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது அவருக்கு அப்படியான ஒரு தொடர்பும் இல்லை எனவும் அம்மா தொலைபேசியில் அண்மையில் கூறியபோது எவ்வளவு மகிழ்ந்தேன். ஆனால், எனது வாழ்வின் உதயத்தில் மீண்டுமொரு அஸ்தமனமா?

குவைத்தில் நான் மிகுந்த மனக்கட்டுப்பாட்டுடன் தான் இருந்தேன். நான் வேலை செய்தவீட்டில் பணிபுரிந்த பாகிஸ்தானிய சாரதி பல தடவை என்னுடன் உறவுகொள்ள முயன்றான். நான் அடிபணியவில்லை. ஒழுக்க வரம்பை மீற நான் விரும்பவில்லை என்பது ஒருபுறம், இப்படியான உறவுகளுக்கு இந்த நாட்டில் மரண தண்டனை என்பது மறுபுறமாக என்னை நானே காப்பாற்றிக்கொள்ள முடிந்தது. வீட்டுச் சொந்தக்காரனும் ஒரு வேடதாரி. மனைவி இருக்கும் வேளையில் என்னைப் பார்ப்பதுபோல காட்டிக்கொள்ளமாட்டான். முகத்தை 'உர்' என்று கடுப்பாக வைத்துக்கொள்வான். ஆனால், மனைவி வீட்டில் இல்லாதபோது சிரித்து சந்தோஷமாகக் கதைப்பான். அவனது உள்நோக்கம் புரிந்ததால் நானும் அவதானமாக இருந்தேன். எனினும் அவ்வனால் வல்லுறவு புரியப்பட்டேன். வெளியே சொன்னாலும் எனக்குத் தான் ஆபத்து என்பதால் மௌனக் கண்ணீரில் கரைந்தேன்.

எல்லாவற்றையும் இடிதாங்கிபோல் தாங்கிக்கொண்டு வாழ்வின் பிடிப்புகள் மெல்ல நழுவும் போதெல்லாம் என்னை நானே தேற்றிக்கொண்டு சம்பாத்தியம் என்ற இலக்கை கஷ்ரப்பட்டு எட்டிக்கொண்டிருந்தேன்.

நான் யோசித்துக்கொண்டு இருக்கும் போதே பொலிஸார் வந்து, ஆட்டோக்காரர் எவரும் சோதனைச் சாவடிகளில் அகப்படவில்லை என்ற தகவலைக் கூறினர். இருந்த அற்ப சொற்ப நம்பிக்கைத் துளியும் வரண்டுவிட்டது. நேரம் அதிகாலையை நெருங்கிக்கொண்டு இருந்தது. விடிந்தவுடன் பயணிக்கலாம் கையில் பணம் இல்லை. யாரிடமாவது இரந்து பிச்சைதான் எடுக்கவேண்டும்.

மறுபடி பொலிஸ்காரர் வந்தார். இம்முறை எனது பெயரைக் கூப்பிட்டு எனது கணவரின் பெயரைச் சொல்லி அவரைத் தெரியுமா? என்று கேட்டார். கணவர் என்று கூறினேன். பதிலேதும் சொல்லாமல் போய் தொலைபேசியில் உரையாடினார். இன்னும் சிறிதுநேரத்தில் அவர் வருவார் என்று மீண்டும் என்னிடம் கூறியபோது இத்தனை கவலைகளுக்குள்ளும் முகம் மலர்ந்தது. சோதனைச்சாவடி ஒன்றில் சந்தேகத்தின் பெயரில் தடுத்துவைத்திருந்தாராம்.

கணவர் வந்ததும் 'ஓ' என்று அழுதபடி, அவரது கைகளைப் பற்றியபடி நடந்த அனைத்தையும் கூறினேன். ஏற்கனவே பொலிஸார் மூலம் அறிந்திருந்த அவர்கலங்கிப் போயிருந்தாலும் என்னைத் தேற்றினார்.

''விதி...அதை யாராலும் மாற்றமுடியாது சரோ... அழாதே பலனிருந்தால் கொள்ளையர்கள் அகப்படுவார்கள். .. விடு நான் என்னுடைய பொறுப்பை உணர்ந்திட்டன் சரோ...'' என்று தேற்றினார். சிங்களச் சகோதரியையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டோம். தொலைவில் சூரியன் உதித்துக்கொண்டிருந்தான்.

# நம்பிக்கைதானே வாழ்க்கை!

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேதனை என்னென்று! தமிழில் 'எங்கேயோ கேட்ட குரல்' என்று படம் வந்தது. ரொம்ப நல்ல படம். உங்களை மாதிரி நபர்களுக்கு அது ஒரு பாடம். இனிமேல் நீங்க என் முகத்துல விழிக்காமல் இருக்கிறது தான் நல்லது...'' என்று சொல்லிக் கொண்டே அதற்கு மேல் சுப்புவை ஒரு நொடி கூட. திரும்பிப் பார்க்காமல் நடந்தேன்.

அடுத்த நாளிலிருந்து எதிர் மாடிவீட்டில் சுப்புவின் நடமாட்டமே இல்லை. இந்த சம்பவம் நடந்த ஐந்தாவது நாள் கடைப் பையன் மட்டும் சுப்புவின் வீட்டுக்கு வந்தான். பொருட்களை எல்லாம் லொரியில் அள்ளிப் போட்டுக் கொண்டு போய் விட்டான்.

அதற்கப்புறம் என் கணவர் திருந்தி விட்டாரா என்று தானே கேட்கிறீர்கள்.? இல்லை. அவர் மாறவேயில்லை. இன்னமும் அடியும் உதையும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. ஆனால், அவர் மாறுவார் என்ற நம்பிக்கை இன்னும் எனக்குள் குறையவேயில்லை. நம்பிக்கை தானே வாழ்க்கை!.

# ராசி பலன்

**11-06-2007 முதல் 17-06-2007**

பொ.சந்திரலிங்கம்

## மேஷம்

அச்சுவினி, பரணி,கார்த்திகை 1

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. வீட்டில் அமைதி இருக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு உண்டு. அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும்.

## ரிஷபம்

கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் இனம் புரியாத பிரச்சினை இருக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு இருக்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## மிதுனம்

மிருகசீரிடம்3,4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

காரியத் தடை இருக்கும். வார பிற்பகுதியில் பிரயாணம் அமையலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் திருத்த வேலை இடம் பெறலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால்தொல்லை யுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறையில் முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## கடகம்

புனர் பூசம் 4 , பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர்நலம். நல்ல வசிப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## சிங்கம்

மகம், பூரம், உத்தராடம் 1

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## கன்னி

உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2

காரிய தாமதமுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். பகை விலகும். உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## துலாம்

சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3

காரியத்தடையுண்டு. வார இறுதியில் பிரயாணம் அமையலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். வீட்டில் ஓரளவு அமைதி இருக்கும். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## விருச்சிகம்

விசாகம் 4, அனுசம், கேட்டை

காரிய தடையுண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாது.

## தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1

காரியத் தடையுண்டு. வாரமத்தியில் பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக் குறை நலவும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் திருத்த வேலைகள் இடம் பெறலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலவுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் இருக்காது. தெய்வீக குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும்.

## மகரம்

உத்தராடம்2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வசிப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறையில்முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறை வேறும்.

## கும்பம்

அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

காரிய சித்தி உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள்கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாது.


## மீனம்

பூரட்டாதி. உத்தரட்டாதி, ரேவதி

காரியசித்தி உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

# பனிமலை உயரம் குறைகிறது கடல்மட்டம் உயருகிறது

மாநகராட்சி மன்
யாழ்ப்பாணம்



பூமியின் வெப்பநிலை உயர்வால் அதிகம் பாதிக்கப்படுவது ஆசிய நாடுகளான இந்தியாவும், சீனாவும் தான் என்கிற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

அதிகரித்து வரும் வெப்பத்தால் உலகின் பெரும்பகுதி கடலில் மூழ்கும் அபாயம் இருப்பதாக ஐ.நா. சார்பில் சுற்றுச்சூழலை கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ள ஐ.பி.சி.சி. (இன்டர் கவர்ன்மென்டல் பேனல் ஆன் கிளைமேட் சேஞ்ச்) என்ற அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த அமைப்பினர் அளித்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சுற்றுச்சூழல் பாதிப்பால் பூமியின் வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சூரியனிலிருந்து வெளிவரும் புற ஊதாக் கதிர்கள் மற்றும் மின்காந்த கதிர்களிலிருந்து பூமியை ஓசோன் படலம் பாதுகாத்து வருகிறது. தற்போது ஏற்பட்டு வரும் சுற்றுச்சூழல் சீர்கேட்டால் அன்டார்டிகா ஓசோன் படலத்தில் சுமார் 26மில்லியன் சதுர கிலோ மீட்டர் ஓட்டை ஏற்பட்டுள்ளது.

இதனால் பூமியின் வெப்பநிலை கணிசமாக உயர்ந்து வருகிறது. 1800ஆம் ஆண்டில் இருந்து மோட்டார் வாகன எரிபொருள், அனல் மின்நிலையம், குளிர்சாதனப் பெட்டி உள்ளிட்ட பொருட்களில் இருந்து வெளியாகும் விஷ வாயுக்களான கார்பன்டை ஆக்ஸைட், மீத்தேன் மற்றும் குளோரோ புளுரோ கார்பன் ஆகியவற்றால் பூமியின் மேற்பரப்பில் 0.6 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை அதிகரித்துள்ளது.

இது, வரும் 2100 ஆம் ஆண்டுக்குள் 1.4 டிகிரியில் இருந்து 5.8 டிகிரி செல்சியஸ் வரை உயரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. வெப்பநிலை உயர்வால் அன்டார்டிகா, கிரீண்லாந்து ஆகிய இடங்களில் உள்ள உறைபனி சிகரங்கள் உருக ஆரம்பித்து விட்டன.

கிழக்கு அன்டார்டிகாவில் உள்ள டாட்டென்ஹாம் பனிமலையின் உயரம் கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 10 அடி குறைந்துள்ளது. இதனால் கடல் நீர்மட்டம் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட தற்போது 4.6 மீட்டர் உயர்ந்துள்ளது.

வெப்பத்தால் நன்னீர் கோபுரங்களாக கருதப்படும் பனிப்பாறைகள் தொடர்ந்து உருகும் நிலைக்கு தள்ளப்படும். இதனால் நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, காலம் செல்லச் செல்ல நதிகள் வற்றிவிடும். இதனால் மக்கள் குடிநீர் கிடைக்காமல் கஷ்டப்படும் நிலை உருவாகும்.

ஐ.பி.சி.சி. அமைப்பு அளித்துள்ள அறிக்கையின்படி, 2080ஆம் ஆண்டுக்குள் 11 லட்சம் முதல் 32 லட்சம் பேர் குடிநீர் கிடைக்காமல் கஷ்டப்படுவார்கள். 20 கோடி முதல் 60 கோடி பேர் பசி கொடுமையினால் பாதிக்கப்படுவார்கள். மேலும் 20 லட்சம் முதல் 70 லட்சம் பேர் கடற்பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோல் ஆற்றில் கலக்கும் குப்பைகள், சாக்கடை கழிவுகள், ரசாயன கழிவுகளால் காலரா, வயிற்றுப்போக்கு, டெங்கு, மலேரியா போன்ற நோய்களின் பாதிப்பால் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இறப்பார்கள் என்று உலக சுகாதார மையம் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசால் இரண்டு முறை சிறந்த சுற்றுச்சூழல் விஞ்ஞானி என்று விருது வழங்கப்பட்ட நெல்லை பல்கலைக்கழக சுற்றுச்சூழல் பேராசிரியர் டாக்டர் ஏ.ஜி.முருகேசன் தெரிவித்ததாவது:

"வெப்பநிலை உயர்வால் மண்வளம் பாதிக்கப்பட்டு விவசாய உற்பத்தியும் குறையும். இதுபோல் சதுப்பு நிலக்காடுகளும் அழிந்து வருகின்றன. மேலும் வெப்பநிலை உயர்வால் பருவமழை பொய்த்தல், கனமழை, வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்படும்.

இதனால் அடுத்த 50 ஆண்டுகளில் மக்கள் தொகையில் ஏழு பேரில் ஒருவர் தன் சொந்த இடங்களில் இருந்து வேறு இடங்களுக்கு செல்லும் நிலை உருவாகும். இன்னும் ஒரு மீட்டர் கடல்நீர் மட்டம் உயர்ந்தால் சுமார் 10 கோடி மக்கள் ஆபத்துக்குள்ளாவார்கள்.

பூமியின் வெப்ப உயர்வால் அதிகம் பாதிக்கப்படுவது மக்கள்தொகை அதிகம் உள்ள ஆசிய நாடுகளான இந்தியாவும், சீனாவும் தான். கடல் நீர்மட்டம் உயர்ந்தால் இந்தியாவில் மும்பை, மாலைத்தீவு உள்ளிட்ட 15 சதவீத நிலப் பகுதிகள் கடலில் மூழ்கிவிடும். சென்னை மெரீனா கடற்கரையும் பாதிக்கப்படும். இதுபோல் 2035இல் இமயமலையின் பனிப்படலம் காணாமல் போய்விடும். கங்கை, யமுனை உள்ளிட்ட நதிகள் வறண்டுவிடும் அபாயமும் உள்ளது. எனவே பூமியைப் பாதுகாக்க காடுகளை அதிகரிக்கவேண்டும். பெட்ரோலியப் பொருட்களின் பயன்பாட்டை குறைக்க வேண்டும். குளிர்சாதன உபகரணங்களில் சி.எப்.சி.(குளோரோ புளோரோ கார்பன்) க்கு மாற்றாக வேறு வேதிப்பொருளை கண்டறிந்து பயன்படுத்த வேண்டும். மரபுசாரா எரிசக்தியினை பயன்படுத்த வேண்டும்".

இவ்வாறு முருகேசன் தெரிவித்துள்ளார்.



சென்னை பேராசிரியர் சி.வி.சந்திரசேகரின் மாணவி செல்வி திவ்யா சிவநேசனின் 'நிருத்தக்ரியா' நடனநிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.15 இற்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இந்த நிகழ்வில் நட்டுவாங்கம் மற்றும் பாடலுக்கான அணிசேர் கலைஞர்களாக இந்தியாவின் புகழ்பூத்த கலைஞர்கள் பங்குகொள்ள இருக்கின்றனர்.




HOTEL WESTEERN PVT LTD

உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04.
T.P. : +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax : +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www.hotelwesteern.com



பருக்களை நீக்குவதற்கு

பாதுகாப்பான
உடனடி நிவாரணம்
1 வாரத்தில் சிறந்த பலன்

பருக்களை மற்றும்
கறுப்பு நிற
அடையாளங்களை நீக்கி
மிருதுவான பளபளக்கும்
சருமத்திற்கு



ஆயுர்வேத திணைக்களத்தின் அங்கீகாரத்துடன்

பிம்பல் கியோ
ஹேர்பல் கிரீம்




இந்தியாவில் தயாரிக்கப்பட்டது
- 100% மூலிகைச்சாறுகள் கொண்டது
- பக்கவிளைவுகள் இல்லை
- பருக்களை ஆரம்பத்திலேயே நீக்கி சருமத்தை மிருதுவாக மாற்றி பளபளக்க செய்கிறது.

சகல பாமசிகள் மற்றும் சுப்பர் மார்க்கட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

லங்கா ஹேர்பல் பிரைவேட் லிமிடட், இல. 14, புகையிரத நிலைய வீதி, தெகிவளை.
தொலைபேசி : 5432100 5432171 அழையுங்கள் : 0777-395194.